திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

MARA PUBLIC L
5 - APR
MADRAS

'ஆடவல்லான்'
தஞ்சைப் பெருவுடையார் கோயில்

மாலை 8] விசுவாவசு மாசி—மார்ச் 1966 [மணி 6

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு.



மாகறல் - திருமாகறலீசுவரர் கோயிலுக்குத் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் அவர்கள், எழுந்தருளியபோது நிகழ்ந்த வரவேற்பு. (7-2-66.)

பொருள் அடக்கம்

1. மடாதிபதிகள் மாநாட்டுத் தீர்மானங்கள்
2. திருவாசகத்தில் உவமைகள்
3. குறிகளும் அடையாளமும்
4. விடை தெரியுமா?
5. விடை விளக்கம்
6. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
7. திருச்சந்த விருத்தம்
8. சங்கற்ப நிராகரணம்
9. மதிப்புரை
10. திருப்பாவையில் ஆழ்வார்களின் திருப்பள்ளியெழுச்சி
11. சிவஞான போதம்.
12. சிவாலயப் பரிவார மூர்த்திகள்
13. திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

9 - MAR 1966

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 8] விசுவாவசு மாசி-மார்ச் [மணி 6

மடாதிபதிகள் மாநாட்டுத் தீர்மானங்கள்

அண்மையில், பிப்ரவரி 6, 7, தேதிகளில், இந்து அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்களின் அலுவலகச் சூழலில் நடைபெற்ற 'மடாதிபதிகள் மாநாடு' தமிழகத்தின் சமய வரலாற்றிலும், குறிப்பாக இந்து அறநிலைய ஆட்சித்துறையின் வரலாற்றிலும், ஈடும் எடுப்பும் அற்ற இனியதொரு மாபெருஞ் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

திருமடத்தின் தலைவர்கள் பலரும் எழுந்தருளி ஒருங்கே போந்து கலந்து கூடியிருந்த அரும் பெருங் காட்சியானது, சங்ககாலப் புலவர் ஒருவர் பாடிய முறையில்,

"முரசுமுழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போல"

அத்துணைச் சிறப்புற அமைந்து அருளியல் பொலிய விளங்கியது. இத்தகைய நிகழ்ச்சியையும், இனிய காட்சியையும், இதற்கு முன்பெல்லாம் எங்கும் எவரும் கண்டு மகிழும் பேறு பெற்றதிலர்.

இந்திய தேச வரலாற்றில், ஹர்ஷ வர்த்தனன் (கி. பி. 606—647) என்னும் பேரரசன், கனோஜ் என்னும் இடத்தில், கி பி 643 ஆம் ஆண்டில், பௌத்தம், ஜைனம், சைவம், வைதிகம் ஆகிய பலவேறு நெறியைச் சேர்ந்த சமயத் தலைவர்களும், அறிஞர்களும் ஒருங்கே கூடுமாறு செய்து, ஒரு சிறந்த சமயப் பேரவையினை நடாத்தியதாக நாம் படிக்கின்றோம். ஒருவகையில் அதற்கு இணையானது என்று இம்மாநாட்டைக் குறிப்பிடலாம்.

பண்டொருநாள், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும், நண்பு கொண்டு ஒருங்கு கூடியிருந்ததனைக் கண்டு, காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் சங்ககாலக் கவிஞர் பெருந்தகை, "இங்ஙனமே நீங்கள் என்றும் உள்ளம் ஒன்றி அன்புடன் நட்புரிமை பூண்டு சேர்ந்திருப்பீர்களாயின், உலகமெல்லாம் நும்வயப்பட்டு ஒழுகிநிற்பது திண்ணம்" என்னும் கருத்தமைய,

"இன்னீர் ஆகலின் இனியவும் உளவோ?
இன்னும் கேண்மின்! நும் இசை வாழியவே!
ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்; இருவீரும்
உடன்நிலை திரியீர் ஆயின், இமிழ்திரைப்
பௌவம் உடுத்தஇப் பயன்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய் ஆகாதே!
அதனால்,
நல்ல போலவும் நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சின்நும் இடைபுகற்கு அலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்க! நும் சேர்க்கை"

—புறநானூறு, 58.

என மனம் களிதுளும்பிப் பாடியருளினர். அதனைப் போலவே திருமடத்தின் தலைவர்கள் பலரும் ஒருங்கே கலந்து கூடியருளிய இம் மாநாடு குறித்து, சமயவுலகம் அனைத்தும் மட்டற்ற பெருமகிழ்ச்சி யுற்றுக் களிநடம் புரிந்து இன்புறுகின்றது.

முன்பொருகால், கி. பி. 7-ஆம் நூற்றாண்டில், திருப்புகலூர் என்னும் தலத்தில், முருகநாயனர் திருமடத்தில், திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் சிறுத்தொண்டர் திருநீலநக்கர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகிய சமய குரவர்கள் பலரும் ஒருங்கு கூடியிருந்த செய்தியினை,

"ஓங்குபுகழ் முருகனர் திருமடத்தில் உடனுகைப்
பாங்கில்வரும் சீர்அடியார் பலரும்உடன் பயில்கேண்மை
நீங்கரிய திருத் தொண்டின் நிலையுணர்ந்து நிகழ்கின்றார்."

"விருப்புடைய திருத்தொண்டின் பெருமையினை விரித்துரைத்து அங்கு
ஒருப்படுசிந் தையினர்கள் உடனுறைவின் பயன்பெற்றார்"

என ஆசிரியர் சேக்கிழார் அடிகள், தம்முடைய பெரிய புராணத்தில் செம்மையுற விரித்துரைத்து விளக்கிப் பாடியருள்கின்றார்.

இங்ஙனமே திருவிழிமிழலைப் பதியில், திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சந்தித்துச் சிலகாலம் தங்கி, அன்புடன் அளவளாவி நட்புரிமை பூண்டு மகிழ்ந்தருளிய செய்தியினைக் குறிப்பிட்டு, அவ்விருவரும் நண்பு கொண்டு அளவளாவிக் கூடிய கூட்டத்தினால்தான், இத் தமிழு லகமானது நிலைபெறுவதாயிற்று என்றும், நம்பியாண்டார் நம்பிகள் சிறப்பித் துரைக்கின்றார்.

"பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில் பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன் நிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசோடு எழில்மிழலைக்
கூடிய கூட்டத்தினல் உளது ஆய்த்து இக் குவலயமே"

என்பது பதினொன்றாம் திருமுறையில் வரும் நம்பியாண்டார் நம்பிகள் பாடல்!

சமயத் தலைவர்கள் தம்முள் ஒன்றுபட்டுக் கூடிப் பணியாற்றுவதற் குரியவழியினைக் காட்டி, அத்துறையில் சிறந்த முன்னேடிகள் (Pioneers) என்னும்படி திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் திகழ்ந்தமையினை, இப்பாடல் இனிது உணர்த்துதல் காணலாம்.

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனல் எற்றைக்கும் திருவருள் உடையேம்"

எனச் சேக்கிழார் பெருமாள் அருளிச் செய்தபடி, நம் தமிழ்நாட்டுச் சமயவுலகின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும், நல்ல ஒளிமயமான எதிர்காலம் அமைய இருப்பதற்குரிய அறிகுறிகள் தெரிகின்றன.

அம்முறையில், அண்மையில் தமிழகத்துத் 'திருமடத்தின் தலைவர்கள்' கூடியருளிய மாநாட்டுக் கூட்டத்தினாலும், அதன்கண் அவர்கள் பலரும் கலந்து ஆய்ந்து பேசிக் கருத்துரைத்துச் செய்தருளியுள்ள தீர்மானங்களினாலும், சமயநெறி யுணர்வு நாட்டில் தழைத்தோங்கி நலங்கள் பலவும் விளைய உள்ளன. ஆதலின், அத்தீர்மானங்கள் இங்கு அளவிலாப் பேரார்வத்துடனும் மகிழ்வுடனும் வெளியிடப் பெறுகின்றன.

"மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே"

—ஆசிரியர்.

"சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகத்தில் 6, 7-2-66 தேதிகளில் தமிழகத் திருமடங்களின் தலைவர்கள் மாநாடு சிறப்புற நடைபெற்றது. இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் **திருமுறைக் காவலர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார்** அவர்கள் நன்முயற்சியால் கூட்டப் பெற்ற இம்மாநாட்டில்,

தருமபுரம் ஆதீனம்
காஞ்சிகாமகோடி பீடம்
திருவாவடுதுறை ஆதீனம்
மதுரை ஆதீனம்
மயிலம் சிவஞான பாலைய சுவாமிகள் மடம்
காஞ்சிபுரம் ஞானப்பிரகாச சுவாமிகள் ஆதீனம்
திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம்
குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்

ஆகியவற்றின் தலைவர்கள் பங்கேற்றுத் தங்கள் சீரிய கருத்துக்களை வெளியிட்டார்கள். அதன் பயனாக '**இந்து சமயப் பேரவை**' என்ற நிறுவனத்தைத் தொடங்குவதென்று முடிவு செய்யப் பெற்றது. அதன் செயல் முறை பின் வருமாறு :

நோக்கம் :

இந்து சைவ சமயத்தைச் சேர்ந்த மேற்கண்ட பெரும் திருமடங்கள் தம்முள் பொதுவான அடிப்படையில் சமயப் பிரச்சாரம் செய்வதற்கும், பொது மக்களிடத்தில் சமய வாழ்க்கையைத் தோற்றுவிக்கவும், பொது நிலையில் இணைந்து திருத்தொண்டு செய்வது இந்தச் சபையின் நோக்கம்.

செயல் முறை

1. வார வழிபாடும், கூட்டுப் பிரார்த்தனையும்

கிராமங்கள் தோறும் சபை அமைத்து வார வழிபாடு, கூட்டுப் பிரார்த்தனை ஆகியன முறையாக நிகழ ஏற்பாடு செய்தல்.

ஏற்கனவேயே கிராமங்களில் வேலை செய்கின்ற சமய அமைப்புகள் இருப்பின் அவை இந்த சபையின் நோக்கத்திற்கு இசைந்து வேலை செய்ய விரும்பின் அதையே இந்த சபையின் இணைப்பு அமைப்பாக ஏற்றுக் கொள்ளல். இணைப்புக் கட்டணம் ரூ. 2. செலுத்த வேண்டும்.

2. பாராயணம்.

நம்முடைய சமயத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் அவரவர் சமயத்தின் தோத்திரப் பாடல்களை நாள்தோறும் முறையாகப் பாராயணம் செய்யப் பழக்குதல்.

3. தினசரி தியானம்.

நாள்தோறும் அவரவர் சமயச் சின்னங்களை அதற்குரிய பதிகங்களை ஓதி அணிந்து சிறிது நேரம் தியானம் செய்யப் பழக்குதல்.

4. அறநூல்கள் வெளியிடுதலும் - பயிற்சி தருதலும்.

(அ) அன்றாடப் பாராயணத்திற்குரிய வண்ணம் சிறு தோத்திரத் திரட்டுகள் வெளியிடுதல்.

(ஆ) சாதாரண மக்கள் சமய விளக்கம் பெறக் கூடிய வகையில் எளிய நடையில் நூல்கள் வெளியிடுதல்.

(இ) சமயத் துறையில் எழும் ஐயங்களுக்குத் தெளிவு தரும் விளக்கமும், சமய நெறிக்கு எதிராக எழுப்பப் பெறும் வினாக்களுக்குத் தெளிவான விடைகள் அடங்கிய வெளியீடுகளும் வெளியிடுதல்.

(ஈ) ஆரம்பப் பாடசாலைகளில் பயிலும் சிறுவர் சிறுமியர்களுக்கு ஔவையார் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் நல்வழி, நன்னெறி ஆகிய நீதி நூல்களை அச்சிட்டு இலவசமாக வழங்கிப் பயிற்றுவித்தலும் முறையாக

நன்றாகப் பயின்றவர்களுக்குப் பரிசு வழங்குதலும்.

(உ) உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய குறட்பாக்களையும், நீதிநெறி விளக்கத்தையும் அச்சிட்டு வழங்கி, முறையாகப் பயிற்றுவித்துத் தகுதியாகப் பயின்றவர்களுக்குப் பரிசு வழங்குதல்.

(ஊ) திருமுறைப் பாடல்களின் தொகுப்பு வெளியிட்டு வழங்கிப் பயிலச் செய்து முறையாகவும் தகுதியாகவும் பயின்றவர்களுக்குப் பரிசு வழங்குதல்.

5. பிரச்சாரகர்கள்.

சமயப் பிரச்சாரகர்களைத் தயார் செய்யத் திட்டமிட்டு உரிய பணிகளை மேற்கொள்ளுதல்.

6. திருக்கோயில்கள் – பேணல்.

(அ) எல்லாக் கிராமங்களிலும் குறைந்தது ஒரு திருக்கோயில் அமையும்படி தொண்டு செய்தல்.

(ஆ) முன்பு இருக்கும் திருக்கோயில்களை நல்ல வண்ணம் திருவருட் பொலிவோடு பேணப் பெறுமாறு செய்தல்.

(இ) திருக்கோயில் திருவிழாக்களை மரபுவழி நடத்தவும், குறிப்பாகத் தேர்த் திருவிழா நடைபெறவும், பக்தர்கள் இழுக்கவும் ஏற்பாடு செய்தல்,

7. சிறை–மருத்துவமனை.

(1) சிறைச்சாலை மருத்துவ நிலையங்களுக்குச் சென்று திருவருட் பிரசாதங்கள் வழங்கி ஆறுதலுரையோடு சமய நல்லுரை வழங்குதல்.

(2) குறிப்பாக, சிறுவர்களின் சீர்திருத்தப் பள்ளிகளுக்குச் சென்று திருப்பணி செய்தல்.

8. சமூகப் பணி நிறுவனங்கள்.

தேவைக்கேற்பச் சமூகப் பணிக்குரிய தொடக்கப்பள்ளி, புண்ணிய விடுதி (அநாதைக்குழந்தை விடுதி) முதலிய நிறுவனங்களைத் தோற்றுவித்தலும், ஏற்கனவே தோற்றுவிக்கப் பெற்றுள்ள நிறுவனங்களைப் பேணிப் பாதுகாத்தலும் செய்வது.

9. மற்றும் இந்து சமய வளர்ச்சிக்குரிய பணிகளை அவ்வப்பொழுது எண்ணித் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

10. திருமுறை - திருநான்முறை (திவ்வியப் பிரபந்தம்) ஆகமம் முதலியவற்றை முறையாகப் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்தல்.

11. நம்முடைய சமய வளர்ச்சிக்கு அடிப்படை வடமொழி அறிவு எல்லோரும் பெற ஏற்பாடு செய்தல்.

12. நம்முடைய சமயத்தைச் சார்ந்தவர்கள் இறந்த பிறகு அடக்கம் செய்தலுக்குரிய திருத்தொண்டைச் செய்தல்.

13. பெரிய அளவில் மருத்துவமனைகளைச் சென்னை, திருச்சி, நெல்லை, தஞ்சை, கோவை ஆகிய நகரங்களில் ஏற்பாடு செய்தல்.”

*

கோயில் நிகழ்ச்சிகள்

மகாசிவராத்திரி :	திரிசூலம்	ஸ்ரீ திரிசூலநாதர் கோயில்
	தேவதானப்பட்டி	ஸ்ரீ மூங்கிலணை காமாட்சிஅம்மன் தேவஸ்தானம்
	காஞ்சிபுரம்	ஸ்ரீ கைலாசநாதர் கோயில்
	திருமயிலை	ஸ்ரீ கபாலீசுவரர் கோயில்

திருவாசகத்தில் உவமைகள்

முன்னுரை :

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழியின் கண் உள்ள அரும்பெறற் றெய்வப் பனுவல்கள் பலவற்றுள், திருவாசகம் சிறப்பு மிக்குத் திகழ்வது என்பதனை அனைவரும் அறிவர். தொன்றுதொட்டு வாழையடி வாழையாகப் போந்த சான்றோர்கள் எல்லோருமே, திருவாசகத்தினை மிகவும் சிறந்த தெய்வப் பனுவலாகப் போற்றி வந்துள்ளனர். வடலூர் **இராமலிங்க அடிகள்,** துறைமங்கலம் **சிவப்பிரகாச சுவாமிகள்** போன்ற சான்றோர்கள் பலரை இங்கு நாம் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

திருவாசகம் :

திருவாசகம் ஒரு சிறந்த பக்தி-ஞான-சமயப்-பனுவல் மட்டும் அன்று. ஒப்புயர்வற்று விளங்கும் உலப்பிலா இன்பக் கவிதை நூலும் ஆகும். மாணிக்கவாசகரை ஓர் அன்பர்-அடியார்-பக்தர்-ஞானி என்றே பலரும் பொதுவாகக் கருதுவது வழக்கம். ஆயினும், 'பாம்பறியும் பாம்பின் கால்' என்றபடி, மாணிக்கவாசகரின் புலமைத்திறனைக் கூர்ந்துணர்ந்து மகிழ்ந்த கொழிதமிழ்ப் புலமைக் குரிசிலார் ஆகிய **குமரகுருபர அடிகள்,** தமது இணையற்ற இலக்கியத் திறனுய்வின் தெளிந்த துணிபுரையாகப் "பைந்தமிழ் நவின்ற **செந்நாப் புலவன்**" எனப் பாராட்டிப் புகழ்ந்து போற்றுகின்றார். இவ்வாற்றால், திருவாசகமானது இறையருளின்ப ஞான அநுபவத் துறைகளில் மட்டுமேயன்றி, எவரையும் கவரும் இயல்புடைய இனிய கவிதைத் துறையிலும் கூட, ஈடும் எடுப்பும் அற்று இலங்கும் மாட்சிமையினை யுணரலாம்.

உவமை :

ஒரு கவிதையின் சிறப்புக்குக் காரணமாவன பலப்பல. அவைகளுள் உவமை என்பதும் ஒன்று. உவமையானது கவிதைக்கு அழகும் சுவையும் அளிக்கின்றது; கருத்து வளத்தினைப் பெருக்குகின்றது; கவிதையின் பொருளினைப் பயில்வார் உள்ளத்தில் கவினுறப் பதிவிக்கின்றது. 'அணியிலாக் கவிதை பணியிலா வனிதை' என்பது பழமொழி. கவிதைக்குரிய அணிகளுள் முதன்மையும் தலைமையும் வாய்ந்தது உவமை. ஏனை எல்லா அணிகளுக்கும் உவமையே அடிப்படையும் உயிரும் ஆகும். அதுபற்றியே ஆசிரியர் **தொல்காப்பியர்,** பிற அணிகளை விதந்து ஓதாமல், உவமை ஒன்றனையே சிறப்பாகக் கொண்டு, உவமையியல் என ஒரு தனி இயலை வகுத்து, அதனை மட்டும் அழகுற விளக்கியருளினர். **அப்பைய தீட்சிதர்** என்பவர், தம்முடைய **சித்திர மீமாம்சை** என்னும் நூலில், எல்லா அணிகளும் உவமையின் அடியாகவே தோன்றின என்கின்றார் (1).

கற்பனை செறிந்த நல்ல
  கவிதையாம் அரங்கம் தன்னில்,
பொற்புறும் உவமை என்னும்
  புகழ் மிகும் விறலி தானே,
பற்பல வேடம் பூண்டு,
  பண்பமை சுவைஞர் உள்ளம்
நற்பெரு மகிழ்ச்சி ஓங்க,
  நடனம் செய் தின்பம் நல்கும்!

நலமிகும் உவமை என்னும்
  நல்லெழில் விறலி தானே,
பலவகைச் சிறந்த கோலம்
  பாங்குறப் புனைந்து போந்து,

---

(1) "உவமை என்னும் தவலரும் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம்
நீப்பரு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே"

—மொழி பெயர்ப்பு,
பரிதிமாற் கலைஞர்.

கலைநிறைந் துயர்ந்து நிற்கும்
காவிய அரங்கில் தோன்றிப்

புலவர்தம் உள்ளத் தின்பம்
பொங்கிட நடிப்பள் நன்றே

—மொழி பெயர்ப்பு, ஆசிரியர்.

இத்தகைய சிறந்த இயல்புடைய உவமை என்னும் அணியானது, இடையிடையே இனிது விரவிப் போந்து திருவாசகப் பாடல்களிற் சிறப்புற மிளிர்கின்றது. மாணிக்கவாசகர் தம்முடைய திருவாசகப் பாடல்களில் அழகிய அரிய உவமைகளைக் கையாளுகின்றார்,

அவற்றின் சிறப்பும் பொருத்தமும் ஆய்ந்தாய்ந்து உணர்ந்து நுகர்ந்து மகிழத்தக்கவை. திருவாசக உவமைகளைச் சான்றோர்கள் பலரும் பெரிதும் உவந்தெடுத்துப் போற்றியுள்ளனர். தமிழிலக்கியங்களில் திருவாசக உவமையினை நினைவுறுத்தும் பாடற் பகுதிகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும், இங்கு நாம் ஆராய்ந்து இன்புறுவோமாக!

நச்சு மரம் :

(1) மாணிக்க வாசகர் இறைவன்பாற் பின்வருமாறு விண்ணப்பித்துக் கொள்ளுகின்றார். "பெருமானே! நீ எனக்கு வினைகளை ஊட்டிக் கழித்துப் பரிபாகம் உறுவிப்பதற்காக, உலகு உடல் கருவி நுகர்ச்சி என்பனவற்றைப் படைத்துக் கொடுத்தாய். ஆனால் யானோ அவற்றின் துணையால் திருந்தி யுய்ய முயலாமல், மேலும் மேலும் தீவினைச் சுமைகளையே ஏறட்டுக் கொண்டு கேடு தேடிக் கொள்கின்றேன். நின் அருள் நெறியில் தலைப்படாமல் மருள் நெறிகளிலேயே புகுந்துழல்கின்றேன். எளியேனைச் சினந்து வெறுத்து ஒதுக்கி விடாமல் என்பால் இரக்கம் கொண்டு காத்தருளுதல் வேண்டும் என்கின்றார். தம் வேண்டுகோளை வலியுறுத்த ஓர் அழகிய உவமையினையும் அவர் கையாளுகின்றார்.

உலகத்தில் மக்கள் மரங்களை வைத்து வளர்க்கின்றார்கள். அவைகள் தமக்கு நலம் பயக்கும் என்று எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் சில சமயங்களில், அவைகள் எதிர்பார்த்தவாறு நலம் பயக்காமற் போகின்றன. ஒரு சிலவோ நலம் பயக்காமை மட்டுமேயன்றி, அதற்கு மாறான தீங்குகளும் விளைவிப்பதுண்டு. அங்நிலையில் அவற்றை வெட்டியழித்து விடலாம். எனினும் அவற்றை வெட்டி விட மக்கள் மனங்கொள்ளுவதில்லை. 'நாமே வைத்து வளர்த்தோம்; நாமே நம் கையால் வெட்டி யழித்து விடுவதா?' எனத் தயங்குவர். வளர்த்த பாசமும் பரிவும், மக்கள் அவற்றை வெட்டி யழிக்க முற்படாமல் தடுத்து விடுகின்றன. 'எங்ஙனமோ இருந்துவிட்டுப் போகட்டும்' என்று இரக்கம் காட்டி அமைகின்றனர்.

அம்முறையில், பேரருளாளனாகிய நீயே எளியேனை இவ்வுலகிற் பிறப்பித்து வளர்த்து வருகின்றாய். ஆதலின் யான் எவ்வளவுதான் தீயவனாக இருப்பினும், என்னை நீ அழித்தொழித்தல் கூடாது; இரக்கம் காட்டிக் காத்தருள் தலை வேண்டும் என, இறைவனை மணிவாசகர் மனமுருகி மன்றாடுகின்றார்.

" நச்சு மாமரம் ஆயி னும்கொலார்,
நானும் அங்ஙனே உடைய நாதனே "

—திருச்சதகம், 96

என்னும் திருவாசக வரிகள், எத்துணை அழகியனவாக இலங்குகின்றன!

இவ்வரிகளின் அருமைப் பாட்டினை இராமலிங்க அடிகளார் இனிது சுவைத்து இன்புற்று வியந்துள்ளார். அதனைப் பின் வரும் அரிய திருவருட்பாப் பாடல்கள் அறிவுறுத்துவனவாதல் காணலாம்.

எச்சம் பெறும் உலகோர் எட்டிமரம் ஆனாலும்
பச்சென் றிருக்கப் பகர்வர்காண்! —வெச்சென்ற
நஞ்சனையேன் குற்றமெலாம் நாடாது நாத! எனை
அஞ்சல்நையேல் என்பாய்! அமர்ந்து.

—சிவநேச வெண்பா, 56

பாம்பு ஆயினும்உணப் பால் கொடுப்பார்
வளர்ப்பார்; மனைப்பால்
வேம்பு ஆயினும் வெட்டல் செய்யார்;
வளர்த்த வெருட்சிக் கடாத்
தாம் பாயினும், ஒரு தாம்பு ஆயினும்
கொடு, தாம் பின்செல்வார்;
தேம்பாய் மலர்க்குழற்கு ஆம் பாக!
என்னையும் சேர்த்துக் கொள்ளே!

—திருவருள் முறையீடு, 105.

ஆற்றங்கரை மரம்:

(2) உலகில் ஐம்புலன்கள் நம்மைப் பெரிதும் கவர்ந்து மயக்குகின்றன. ஐம்புலன்களை நுகர நுகர அவைகள் தணியாமல், விறகிலிட்ட தழல்போல் மேலும் மேலும் முறுகியே வளர்கின்றன. ஐம்புல நுகர்ச்சி விருப்பம் எல்லையின்றிப் பெருகுதலால், ஆற்று வெள்ளம் போல்கின்றது. அதனால் அலைக்கப்பட்டு வருந்தும் யானோ, ஆணிவேர் வரையில் மணல் அரிப்புண்டு எந்த நேரத்திலும் சாய்ந்து கீழே விழும் நிலையில் உள்ள ஆற்றங்கரை மரம் போலத் தளர்ந்து மெலிந்து நிற்கின்றேன். ஆதலின் எளியேனைக் கைவிட்டு விடற்க. கனிவு கூர்ந்து காத்தருள்க! என மணிவாசகர் இறைவனை வேண்டுகின்றார்.

"கார்உறு கண்ணியர் ஐம்புலன்
ஆற்றங் கரைமரமாய்
வேர்உறு வேனை விடுதிகண்டாய்"!

—நீத்தல், 3.

என்பது அவர்தம் அழகிய பாடல். இப்பாடற் கருத்தின் சாயலைப் பின்வரும் அவ்வையார் பாடலின்கண் காணலாம்.

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்அன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு

தீப்புகு விட்டில்:

(3) மனிதன் அடையும் துயரங்களுக்கு அவனது காம வெகுளி மயக்கங்களே காரணமாகின்றன. 'இன்பம் ஓர் அணுவாய் இடர் அதற்கு மாமலையாம் புன்போகம் வேண்டிப் புரளும்' காமத்தினால் விளையும் தீமைகட்கு அளவேயில்லை. தீங்கு என்று பல்கால் தெளிந்திருந்தும் மீண்டும் மீண்டும் அத்துறையிலேயே மனமானது அலைந்து உழல்கின்றது. விட்டிற் பூச்சியானது தீயினைக் கனி எனக் கருதிக் கொண்டு, அதனைச் சென்று தீண்டுகின்றது. அதன் வெம்மையால் தாக்குண்டு வெதும்பி மீள்கின்றது. எனினும் அறிவு பெறாமல் மீண்டும் மீண்டும் அதனையே விரும்பிப் பறந்து சென்று சுடுண்டு மாள்கின்றது. விரும்பத் தகாததனை விரும்புதல், அதனாற் கேடு அடைதல், கேடு எய்தியும் அறிவு திருந்தாமை, அதனாலேயே அழிவுறுதல் என்பனவற்றில், விட்டிற் பூச்சிக்கும் மனிதனுக்கும் பெரிதும் ஒப்புமை யுள்ளது. இவ்வியல்பினைத் தம்மேல் ஏறட்டுக் கொண்டு,

"செழிகின்ற தீப்புகு விட்டிலிற்
சின்மொழி யாரிற் பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண்டாய்!"

—நீத்தல், 5.

எனப்பாடுகின்றார் மணிவாசகர். பதினொன்றாம் திருமுறையில் பட்டினத்தடிகள் இவ்வுவமையினையே மேலும் சிறிது விவரித்துப் பின்வருமாறு பாடுகின்றார்.

அழுக்குடைப் புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி
வளைவாய்த் தூண்டிலின் உள்ளிரை விழுங்கும்
பன்மீன் போலவும்,
மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்,
ஆசையாம் பரிசத்து யானை போலவும்,
ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்,
ஆசைச் சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்டு
இடர்கெழு மனம்...

—கோயில் நான்மணிமாலை, 28.

இருதலைக் கொள்ளி எறும்பு:

(4) உயிர்கள் பொறியுணர்ச்சி வயப்பட்டு உழல்வன. ஐம்பொறிகளாற் புலன்களை நுகர்ந்துவிட முயன்றால், வேட்கைத் தீ தணியாமல் மேலும் பெருகி வெதுப்

புகின்றது. நுகராமலே இருந்தாலோ, எளிய மனத்தில் ஏக்கத் தீ படர்ந்து வாட்டுகின்றது. இவ்விரு திறத்தினின்று தப்பி ஓடி யுய்யவும் வேறு வாயில் இல்லை. இவ்வாற்றால் உயிர்களின் நிலை பெரிதும் இரங்கத் தக்கதாக உள்ளது. வண்டு துளைத்த மூங்கிலினுள்ளே அகப்பட்டுக் கொண்ட எறும்பானது, அம் மூங்கிலின் இருமருங்கும் தீப்பிடிக்குமாயின் உள்ளே இருக்கவும் முடியாமல், வெளியிற் செல்லவும் இயலாமல் இங்கும் அங்கும் ஓடித் தவித்து இறக்கும். அங்ஙனமே யானும் உள்ளேன் என்று பாடுகின்றார் மணிவாசகர்!

இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு
ஒத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதி கண்டாய்

—நீத்தல், 9

இந்த அரிய உவமை தமிழ் இலக்கியத்திற் பிற இடங்களிலும் பயின்று வந்துள்ளமை இதன் சிறப்பினையும் பொருத்தத்தினையும் விளக்கும்.

ஆண்மை வாங்கக் காமம் தட்பக்
கவைபடு நெஞ்சம் கட்கண் அகைய
இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்

—அகநானூறு, 339

உள்ளமோ ஒன்றில் நில்லாது
ஓகையின் எரிகின் றுண்ணும்
கொள்ளிமேல் எறும்பு போலக்
குழையுமால் என்றன் உள்ளம்;
தெள்ளியீர் தேவர்க் கெல்லாம்
தேவராய் உலகம் கொண்ட
ஒள்ளியீர் உம்மை யல்லால்
எழுமையும் துணையி லோமே

—திருமங்கையாழ்வார், திருக்குறுந்தாண்டகம்

கடலினுள் நாய்:

(4) இறைவனே! நின் கருணை எல்லையில்லாதது; கடல்போலப் பரந்து விரிந்தது. ஆயினும் அதன்கண் என் உள்ளமானது ஆழ்ந்து திளைத்து அநுபவிக்க மாட்டாமல், ஒரோ ஒருகால் சிறுச்சிறிதே மட்டும் ஈடுபடுவதாக இருக்கின்றது. என்றும் நின் கருணைக் கடலில் திளைத்து இன்புறும் பேறு எளியேற்கு வாய்த்திலது. கடலில் எவ்வளவு தான் நீர் நிரம்பி யிருந்த போதிலும், நாயானது தன் நாவினுல் சிறிது சிறிதாக நக்கித் தான் குடிக்க வேண்டியிருக்கிறது. அது போல நின் பேரருளை வழங்குதற்கு நீ இசைந்து எளிவந்தருள்கின்றனை யாயினும், அதனை ஆரப் பெற்று அநுபவித்து நலம் பெறும் ஆற்றல் எளியேற்கு இல்லையே! யான் என் செய்வேன்? என்னைக் கைவிட்டிடாமற் காத்தருள்க!

கடலினுள் நாய்நக்கி யாங்கு
உன் கருணைக் கடலின் உள்ளம்
விடல் அரியேனை விடுதி கண்டாய்

—நீத்தல், 13

என்பது மணிவாசகரின் நீத்தல் விண்ணப்பச் செய்யுள். இதன்கண் வந்துள்ள உவமையினை நினைவு கூரும் முறையில் பின்வரும் பாடலை ஆசிரியர் சேக்கிழார் அருளிச் செய்திருத்தல் காணலாம்.

தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்; முற்றப்
பெருகு தண்கடல் உற்றுண் பெருநசை
ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமையேன்

—பெரிய புராணம்

வெள்ளத்துள் நாவற்றல்:

(5) இறைவனின் திருவருள் எங்கும் பரவி, எல்லோர்க்கும் எளிதில் நலம் புரிவதாக விளங்குகிறது. ஆயினும் அதனை அறிந்து வழுத்தி நலம் அடைய மாட்டாமல் உயிர்கள் துன்பத்திலேயே ஆழ்ந்து சிக்குண்டு கிடக்கின்றன. இஃது எது போலும் என்னில், பெருகி நிற்கும் வெள்ளத்திலேயே மிதந்து கிடந்தும் ஒருவன், நாவறட்சியால் வருந்துதல் போல்வதாகும். இறைவனின் திருவருள் எங்கும் இனிது பரவிப் பெருகிக் கிடப்பினும் அதனாற் பயன் கொண்டு துன்பங்களை நீக்கிக் கொள்ள முயலாது வருந்தி நிற்கும் இயல்பு குறித்து,

வெள்ளத்துள் நாவற்றி யாங்கு,
உன் அருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக் கிலேனை விடுதி கண்டாய்

—நீத்தல், 14

எனப் பெரிதும் இரங்குகின்ருர் மணிவாசகர் (2). இவ்வுவமையினையும் இஃது அமைந்த இனிய திருவாசகப் பாடலையும் பெரிதும் வியந்து போற்றி உமாபதி சிவம் தம்முடைய திருவருட் பயன் என்னும் சிறந்த நூலின்கண், பொன்னில் மணியைப் பதித்தாற்போலப் பொதிந்து கொண்டுள்ளார்.

வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன்.

—திருவருட்பயன், 48

அயிரை பரந்த அந்தண் பழனத்து
ஏந்தெழில் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கு, இவள்
இடைமுலைக் கிடந்தும் நடுங்கல் ஆனீர்!
தொழுதுகாண் பிறையில் தோன்றி யாம் நுமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே

—குறுந்தொகை

2. "Water, Water, everywhere
And all the boards did shrink;
Water, water, everywhere,
Nor any drop to drink"

– S. T. Coleridge.
The Rime of the Ancient Mariner.

கொம்பர் இல்லாக் கொடி :

(6) உலகில் நமக்குத் துணையும் பற்றுக் கோடும் இன்றியமையாதன. நமக்கு ஒப்புயர்வற்ற தனித்துணையாக விளங்குபவன் இறைவன் ஒருவனே. அதனையுணராமல் நாம் வினைத்துணை கொண்டு வேதனைப் படுகின்ருேம். 'பற்றுக பற்றற்ருன் பற்றினை' என்றபடி, இறைவனையே நாம் துணையாகச் சிக்கெனப் பற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் நம்முடைய நிலைமை கொழு கொம்பு இல்லாத கொடியைப் போலவே துயரம் நிறைந்ததாக முடியும். இதனையே,

"கொம்பர் இல்லாக் கொடிபோல்
அலமந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண்டாய்"

—நீத்தல், 20

என அருளிச் செய்கின்ருர் மணிவாசகர். இவ்வழகிய உவமையினை நினைப்பிக்கும் வகையில் பின்வரும் செய்யுள் அமைந்திருத்தல் காணலாம்.

தாவிப் படரக் கொழுகொம் பிலாத
தனிக் கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப்
பதைக்கின்றதே.

—தொடரும்

கோயில் நிகழ்ச்சிகள்.

மாசிமக உத்சவம் :

கும்பகோணம்	ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் கோயில்
திருச்செந்தூர்	ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில்
திருமழபாடி	ஸ்ரீ வயிரத்தூண்நாதர் கோயில்
வேளூர்	ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோயில்
கரூர்	ஸ்ரீ தான்தோன்றி ஸ்ரீ கல்யாண வெங்கடரமண சுவாமி கோயில்
நத்தம் (மேலூர்)	ஸ்ரீ மாரியம்மன் கோயில்
காங்கேயநல்லூர்	ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில்
மேல்புவனகிரி	ஸ்ரீ பூங்காவனத்தம்மன் கோயில்
திருத்தணி	ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்
கோவை	ஸ்ரீ கோனியம்மன் கோயில்
திருவொற்றியூர் (சென்னை)	ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயில்

குறிகளும் அடையாளமும்

குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே ?

—திருநாவுக்கரசர்

முன்னுரை :

மனித வாழ்வில் 'குறிகளும் அடையாளமும்' இன்றியமையாதனவாகச் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. குறி என்பது பெயர் (names). அடையாளம் என்பது ஒரு பொருளையோ அல்லது கருத்தையோ விளக்கிக் காட்டுதற்குப் பயன் படுத்தப் பெறும் ஒப்புமைப் பொருள் (symbol). ஒவ்வொரு பொருளுக்கும் பெயர் வைக்கின்றோம்; அடையாளம் பொறிக்கின்றோம். பெயரும் அடையாளமும் இல்லையேல், வாழ்வில் பலவகைக் குழப்பங்களும் தலைதடுமாற்றங்களும் நிகழும் என்பது ஒருதலை.

அடையாளங்கள் :

மனிதனின் சாதனைகள், அடையாளப் பொருள்களை அவன் பயன் படுத்தும் முறையிலேயே அமைகின்றன (1). மனிதனின் செயல்களுள், அடையாளப் பொருள்களைக் கண்டு அமைக்கும் பணியும், உண்ணுதல் காணுதல் அல்லது இயங்குதல் என்பனவற்றைப் போல முதன்மையான தொன்றாகத் திகழ்கின்றது. அறிவின் அடிப்படையான செயல் முறையாக விளங்கும் இத்தொழிலானது, இடைவிடாமல் எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது" (2).

முதன் முதலில் மனிதன் பேசக் கற்றுக்கொள்ளும் முன்னர்த் தன்னுடைய எண்ணங்களைச் சைகைகளினாலும் (gestures), முகக் குறிப்புகளினாலும் (grimaces) பிறவற்றினாலும் உணர்த்தி வந்தான். பின்னர்ப் படிப்படியே நாகரிகம் அடைந்து பேசக் கற்றுக் கொண்டான். தன் எண்ணங்களுக்குச் சொற்களையும், சொற்களுக்கு எழுத்துக்களையும் அடையாளப் பொருள்களாக அமைத்துக் கொண்டான். ஆனால் மிகப் பழங் காலத்தில் முதன் முதலிலேயே மனிதன் எழுத்துக்களையோ, சொற்களையோ எழுதத் தொடங்கவில்லை. கருத்துக்களையே எழுதினான்.

அடையாள முறைகள் :

ஓவியங்கள், எழுதி அவற்றின் வாயிலாகவே பழங்காலமக்கள் தம் கருத்தைப் புலப்படுத்தி வந்தார்கள். **நீர்வேட்கை**யைக் குறிக்க, நாக்குப் போல் வளைந்த கோடு வரைந்து, அதன்மேல் நீரைக் குறிப்பிட இரண்டு புள்ளிகள் வைப்பர். **கேள்** என்று கூறுவதற்கு. ஒரு கதவின் அருகே அமைந்த காது எழுதப்படும். நட்பைக் குறிக்க இரண்டு கைகள் இணைத்து வரையப்பெறும். அழுகையையுணர்த்தக் கண்ணும் நீர்த் துளிகளும் சேர்த்து எழுதிக் காட்டுவர். ஒளியைச் சுட்டுவதற்குச் சூரியனையோ, சந்திரனையோ வரைவர். இக்காலத்தில் செய்தித் தாள்களிலும் இதழ்களிலும் வெளியிடப்பெறும் கருத்தோவியங்கள் (Cartoons) முதலியன, அடையாளக் குறிப்பு முறையின் (Symbolism) சிறப்பினை எண்ணியுணர்தற்குத் துணைபுரிவன ஆகும்.

சமயத் துறையில் அடையாளக் குறிப்பு முறையானது (Symbolism) மிகவும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. மாற்றம் மனங்கடந்து, எண்ணியுணர்தற்கும் கூறியுணர்த்துதற்கும் அரிய நிலையில் விளங்

---

(1) "Man's achievements rest upon the use of symbols".
—**Alfred Korzybski.**

(2) "The **symbol-making** function is one of man's primary activities, like eating, looking, or moving about. It is the fundamental process of the mind, and goes on all the time"
—**Susanne K. Langer.**

கும் இறைவனைப் பற்றிய நுண் பொருட் கருத்துக்களை யெல்லாம், நம் முன்னோர்கள் எளிய இனிய சிறுசிறு அடையாளங்களால் நன்கினிது குறித்து வைத்து விளக்கியுள்ளனர்.

அடையாள நுண் பொருள்கள் :

உதாரணமாக, கடவுள் என்னும் முழுமுதற் பொருளின் இயல்பினைக் குறிப்பிடுதற்கு, முன்னைக் கால மக்கள் வளைவு இல்லாமல் நேரான ஒரு செங்கோலை எழுதி, பின்னர் அதன்மீது ஒரு கண்ணையும் வரைந்து வைப்பர் (3). கடவுள் நீதிநெறி தவறுதவர்; விருப்பு வெறுப்பு இல்லாதவர்; எல்லோரையும் சமமாகக் கருதி நடத்துபவர்; தீவினை செய்பவர்க்குத் தண்டனையாகத் துன்பத்தையும், நல்வினை செய்பவர்க்குத் தண்ணளியாக இன்பத்தையும் வழங்குபவர்; அவர் எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் அவரவர் செய்கின்ற செயல்களை யெல்லாம் பார்த்துக்கொண்டு இருக்கின்றார்; அவரை ஒருவரும் ஏமாற்றிவிட முடியாது; என்பன போன்ற கருத்துக்களை எல்லாம், இச்சிறு குறிப்படையாளத்தின் மூலம் பண்டைக்கால மக்கள் உணர்ந்தும் உணர்த்தியும் இருத்தல் காணலாம். இஃது எத்துணை வியப்பிற்குரியது !

> கண்காணி இல்லென்று கள்ளம் பலசெய்வார்
> கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
> கண்காணி யாகக் கலந்தெங்கும் நின்றானைக்
> கண்காணி யாகக் களவொழிந் தாரே
>
> —திருமந்திரம்

> வஞ்சித் தொழுகும் மதியிலிகாள்! யாவரையும்
> வஞ்சித்தோம் என்று மகிழன்மின்—வஞ்சித்த
> எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
> அங்கம் குலைவ தறிவு
>
> —குமரகுருபரர்

என்பனபோன்று. நம் சமயப் பெருஞ் சான்றோர்கள் பலரும் அறிவுறுத்தும் அரும்பெருங் கருத்துக்கள் எல்லாம், எளிய இனியஇச் சிறிய அடையாளத்தின் மூலம் செவ்விதின் விளக்கப்பட்டுள்ளன அன்றோ?

அடையாளத் திறவு கோல் :

அதனால்தான், "நாம் நம்முடைய பெரிய பெரிய வேத வேதாந்த நூல்களை யெல்லாம் ஒருகால் இழந்துவிட நேர்ந்தாலும்கூட, அவைகளை நாம் மீளவும் உருவாக்கி முழுவதாகப் பெற்றுவிட முடியும். நம்முடைய முன்னோர்கள் நம் பொருட்டு அமைத்துவைத்து விட்டுச் சென்றுள்ள அடையாளப்பொருள்களின் நுண் பொருட் சிறப்புக்களைத் திறந்து காண்பதற்குரிய அறிவுத்திறன் ஆகிய திறவுகோல் மட்டுமே நமக்குத் தேவை. இவ்வடையாளக் குறிப்புகளில்தான், நம் முன்னோர்களின் அரும்பெரும் அறிவுச் செல்வங்கள் அனைத்தும் பொதிந்து போற்றி வைக்கப்பட்டுள்ளன". என அறிஞர்கள் கூறுகின்றனர் (4).

சின் முத்திரை :

உதாரணமாக, சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையிற் பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களைப் பற்றிய உண்மைகளை எத்துணையோ நூல்கள் விரித்துரைத்து விளக்குகின்றன. அவைகள் அனைத்தையும், 'கடுகைத் துளைத்து எழுகடலை

(3) "The ancient hieroglyphic for **God** was the figure of an **Eye** upon a **Sceptre**, to denote that he sees and rules all things".

—Butler.

(4) "Even if we have lost our books on Veda and Vedanta, we could evolve the whole thing again from the symbols we possess, provided we had the tiny key to unlock these sacred mysteries. The hoariest and most ancient wisdom is thus enshrined in these unmistakable symbols, and when we understand them aright, we are enabled to test and know which is the true philosophy and which the true religion"

—**J.M. Nallaswami Pillai**, B.A.,B.L.
Studies in Saiva Siddhanta, 242.

யும் புக விடுதல்' போல, நம் அங்கை விரல்களைக் கொண்டே "சின் முத்திரை" என்னும் அடையாளத்தினால், நம்முடைய சமயப் பெரியோர்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் யாவருக்கும் விளங்குமாறு புலப்படுத்தி யுள்ளனர். சிவபிரானின் திருவுருவங்களுள் ஒன்றாகிய **தட்சிணாமூர்த்தம்** என்பதற்கே தனிச் சிறப்பையளித்து நிற்பது, இந்தச் சின் முத்திரை அடையாளமே யாகும்.

சின்முத்திரையின் நுண்பொருள்கள் :

சின்முத்திரையில் கட்டை விரல் இறைவனையும், சுட்டு விரல் உயிர்களையும், நெட்டை விரல் ஆணவமலத்தினையும், மோதிர விரல் மாயாமலத்தினையும், சுண்டு விரல் கன்ம மலத்தினையும் உணர்த்துகின்றன. கட்டைவிரல் தனித்திருப்பது பிற விரல்கள் தொழிற்படுதற்கு மிகவும் இன்றியமையாதது; அதன் துணையின்றிப் பிற விரல்கள் இயங்க மாட்டா; ஆதலின் அது கடவுளைக் குறிப்பதாயிற்று. உயிர்கள் இறைவனைப் போல சத்தும் சித்துமாக இருப்பன, ஆயினும் கடவுளைச் சேராமல் மலங்களோடு சேர்ந்து துன்புறுகின்றன. கடவுளைப் போல முற்றறிவு இன்றி எதனையும் முன்னிலையிற் சுட்டி மட்டுமே அறியும் தன்மையுடையன. ஆதலின் அவற்றைச் சுட்டுவிரல் உணர்த்துவதாயிற்று. நெட்டை விரல் ஒன்றற்கும் பயன்படுவதின்றி வறிதே நீண்டு வளர்ந்து முனைத்து நிற்பதாகலின் அஃது ஆணவ மலத்தைக் காட்டுதல் பொருத்தமே. மாயா மலத்தினாலேயே நமக்குத் தனு கரண புவன போகங்கள் அனைத்தும் அமைதலானும், ஆணவமலங் கழிதற் பொருட்டு அதன் பின்னர் வந்து உயிர்கள் பாற் பொருந்துதலானும், அடுத்த விரல் மாயையைக் குறிப்பதற்கு ஏற்றதாக உள்ளது. அதனாலேயே மயக்கத்தைக் குறிக்கும் மோதிரம் அவ்விரலில் அணிவிக்கப் படுகின்றது. ஆணவம் மாயை என்னும் மலங்களின் பின்னரே உயிர்களின் நற் செயல் தீச்செயல்களினால் கன்ம மலம் வந்து சேர்தலின், அவையிரண்டனையும் குறிக்கும் விரல்களுக்குப் பின்னர் உள்ள சுண்டு விரல், கன்ம மலத்தைச் சுட்டுவதாக அமைந்தது. மேலும் மலக் கழிவு நேருங்கால், முதலிற் கன்மமும் பின்னர் மாயையும், அதன் பின்னர் ஆணவமும் கழிந்து, இறுதியில் உயிரானது இறைவனை அடைதலின், அம்முறைமை யுணர்த்துதற்கும் விரல்களின் அமைப்புமுறை பொருந்துவதாக இருக்கிறது. சைவ சித்தாந்தத்தின்படி முத்திநிலையிலும் உயிர்கள் இறைவனுக்கு அடிமையேயாம் ஆதலின், அதனையுணர்த்துதற்குச் சின்முத்திரையிற் கட்டைவிரலின் அடியினைச் சுட்டு விரலின் நுனியானது சென்று தொட்டு வளைந்து நிற்கின்றது. இன்னோரன்ன நுண் பொருள்களை யுணர்த்தும் "குறிகளும் அடையாளமும்" பற்றி எண்ணி யுணருந்தொறும் எத்தனை இறும்பூது விளைகின்றது!

பட்டினத்தார் :

சிவபெருமானின் திருவுருவ அமைப்பில் விளங்கும் இத்தகைய அடையாள நுண்பொருட் குறிப்புக்கள் சிலவற்றை, அரும்பெறல் ஞானச் செல்வரும் அருட் பெருங்கவிஞரும் ஆகிய பட்டினத்தடிகள், பின்வருமாறு விளக்கி யருள்கின்றார்:

சிவபிரான் சடையின் மீது சந்திரனைச் சூடி யிருத்தல், தூய பேரறிவை யுணர்த்துகின்றது. ஆனேறு (ரிஷபம்) ஏறுதல் அறத்தின் பயனாக விளங்கும் தலைவன் என்பதைக் குறிக்கின்றது. அவன் அவள் அது என்னும் மூவகையாலும் வழங்கப் பெறுதல், பொது நிலைமையன் என்று புலப்படுத்துகின்றது. முக்கண்களும் ஆகவனீயம் தட்சிணாக்கினி காருகபத்தியம் என்பனவற்றைச் சுட்டுகின்றன. மான் ஏந்தியிருத்தல் நாத தத்துவத்திற்கும் வேதப் பொருள்களுக்கும் தலைவன் என்பது விளக்குகின்றது. மூவிலைச் சூலம் ஏந்துதல் மும்மூர்த்திகளும் ஆதலை மொழிகின்றது. நிலம் நீர் நெருப்பு காற்று விசும்பு நிலா பகலோன் உயிர் என்னும் எண்வகைப் பொருள்களின் வடிவமாகவும் அட்ட மூர்த்தியாகத் திகழ்பவன் என்பது, இவ்வுலகின் உண்மைப் பொருளாக ஒளிர்பவன் என்பதனை அறிவிக்கின்றது எனக் கூறுகின்றார் பட்டினத்தடிகள். அவர்தம் திருமொழி வருமாறு :-

"தூமதி சடைமிசைச் சூடுதல், தூநெறி
ஆம்மதி யான்என அமைத்த வாறே;
அறன்உரு வாகிய ஆன்ஏறு ஏறுதல்,
இறைவன் யான்என இயற்று மாறே;
அதுஅவள் அவன்என நின்றமை, யார்க்கும்
பொதுவில்ல யான்என உணர்த்திய பொருளே;
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்கது என்னிடை என்பதோர் சுருக்கே;
வேத மான்மறி ஏந்துதல், மற்றதன்
நாதன் நான்என நவிற்று மாறே;
மூவிலை ஒருதாட் சூலம் ஏந்துதல்,
மூவரும் யான்என மொழிந்த வாறே;
எண்வகை மூர்த்தி என்பது இவ்வுலகினில்
உண்மை யான்என உணர்த்திய வாறே".

—பட்டினத்தடிகள்.
திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது.

முடிவுரை:

இதுகாறுங் கூறியவாற்றால், **திருநாவுக்கரசர்** பாடியுள்ளபடி 'குறிகளும் அடையாளமும்' சமய நெறி யுணர்ச்சிக்கு இன்றியமையாதன வாதலையும், அவற்றின் பால் அமைந்துள்ள தத்துவ நுண் பொருள்கள் அறியுந்தோறும் பெரும் பயன் தருவனவாதலையும் உணர்ந்து, நாம் அவற்றை யெல்லாம் நன்கினிது போற்றி நலம் பெற முயல்வோமாக!

—ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

அண்மையிற் கூடிய மடாதிபதிகள் மாநாட்டுத் தீர்மானத்தின்படி, சென்னைப் பேட்டைகளிலும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் நிகழவுள்ள சமயப் பிரசார இயக்கத்தின் தொடக்கவிழா, மகாசிவராத்திரிப் புனித நாளில் (18—2—1966), திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில், தருமபுர ஆதீனத்தின் மடாலய தேவாலயங்களின் சார்பில், நடைபெற்றது.

நமது சென்னை மாநில அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் திருமிகு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L. அவர்கள், வரவேற்புரை நிகழ்த்தினார்கள். திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. ஜி. எம். முத்துசாமி பிள்ளை ஆகியோர், சமயப் பிரசார இயக்கத்தின் அவசியம் பற்றிப் பேசினார்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள், சமயப் பிரசார இயக்கத்தைத் தொடங்கி வைத்து அருளாசி வழங்கினார்கள். அதுபோது சிவசிவ என்று இறைவன் திருப்பெயரைச் செபித்தால், எல்லாத் துன்பங்களும் நீங்கி நலம் பெறலாம் என்று கூறி, அவர்களே 108 முறை சிவ நாமத்தை உச்சரித்தார்கள். குழுமியிருந்த மக்கள் அனைவரும் அவரைத் தொடர்ந்து சிவநாம முழக்கம் செய்தனர்.

பின்னர்ச் சுவாமிகள் இந்து மதத்தின் பழமை பெருமை, அதனை நாம் போற்றி வளர்க்க வேண்டிய கடமை பொறுப்பு வழிவகைகள், முதலியன பற்றி விரித்துரைத்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் சமய வளர்ப்புச் சங்கங்கள், பிரார்த்தனைக் கூட்டங்கள், வாரவழிபாட்டு அமைப்புகள் போன்றவற்றை ஏற்படுத்தியும், சமய சம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள், நூல்கள், விளக்கங்கள் முதலியவற்றை மிகுதியாக வெளியிட்டும், நாம் நம் இந்து மதத்திற்குப் புத்துயிரூட்டப் பல்லாற்றானும் முயலவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

வீடுதோறும் பிடியரிசி நன்கொடை சேகரிப்பதன் மூலம், கோயில்களில் ஏழை எளிய மக்களுக்கு மிகவும் குறைந்த விலையில் உணவுப் பொட்டலங்கள் கிடைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்கள். அந்த நற்பணிக்குத் தம்முடைய நன்கொடையாக ரூபா 1008, திரு. அறநிலைய ஆணையர் - திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் அறங்காவலர் ஆகிய இருவரிடமும் வழங்கியருளினார்கள். கோயில்களின் சார்பில் மருத்துவ விடுதிகள், திக்கற்றோர் இல்லங்கள் முதலியன திறப்பித்துச் சமுதாய நலப்பணிகளும் செய்யவேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள்.

தருமபுர ஆதீனம் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், அனைவருக்கும் நன்றியுரை நவின்றார்கள்.

—ஆசிரியர்.

விடை தெரியுமா?

1. '**அறுவகைச் சமயங்கள்**' என்பன யாவை? அவைகள் எவ்வெவ்வாறு நூல்களிற் கூறப்பட்டுள்ளன?

2. '**மங்கல வாழ்த்து**' என்பது யாது? அதன் இலக்கணம் உணர்த்தும் இரண்டு சிறந்த சான்றுகளை எடுத்துக் காட்டுக.

3. 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' எனப் பெரியோர்கள் கூறும் '**பதினாறு பேறுகள்**' எனப்படுவன எவை யெவை?

4. அட்டதிக்குப் பாலகர்களையும், அவர்களின் தலைநகரங்களின் பெயர்களையும் குறிப்பிடுக.

5. "**சோடச உபசாரங்கள்**" என்று சொல்லப்படுவன இவையிவை என்று சுட்டி விளக்குக.

6. திருமாலுக்குரிய ஐந்து படைகளையும், அவற்றின் பெயர்களையும் கூறுக.

7. '**வைகுண்டம்**' என்னும் சொல்லுக்குப் பொருள் யாது? அங்குத் திருமாலின் வாயிற்காவலர்களாக விளங்குபவர் சிலரின் பெயர்களைத் தருக.

8. '**அஷ்டாவதானம்**' என்பது யாது?

9. பின்வரும் சொற்களின் பொருளை விளக்குக:—

   1. அபிலாஷை
   2. சிந்தனை
   3. அநுஸ்மிருதி
   4. இச்சை
   5. ருசி
   6. பரபக்தி
   7. பரமபக்தி

10. '**ரஹஸ்யத்ரயம்**' என்பன யாவை? அவற்றை இறைவன் யார்யாருக்காக, எங்கெங்கே வெளியிட்டருளிச் செய்தான்? அவற்றை விளக்கி நூல் செய்த ஆசிரியரின் பெயரையும், அவர் செய்த நூலின் பெயரையும் குறிப்பிடுக.

—விடை மறுபக்கம் காண்க.

விடை விளக்கம்

(1) அறுவகைச் சமயங்கள் என்னும் தொடர், தொன்று தொட்டு வழங்கி வருவது.

“ அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்
வீடு பேருய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையும் கிழவோன்”

—திருவாசகம்.

“ அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய், வேருய்
குறியது உடைத்தாய் வேத
ஆகமங்களின் குறி இறந்து......”

—சிவஞான சித்தியார்

சமய தத்துவ நூலாசிரியர்கள் இவ்வறுவகைச் சமயங்கள் யாவை? என்பன குறித்துத் தத்தம் நூல்களிற் பலவேறு வகைகளிற் குறிப்பிட்டுள்ளனர்.

1. சைவம் — சிவபிரானை வழிபடுவது
2. வைஷ்ணவம் — விஷ்ணுவை வழிபடுவது
3. சாக்தம் — சக்தியை வழிபடுவது
4. சௌரம் — சூரியனை வழிபடுவது
5. காணபத்தியம் — கணபதியை வழிபடுவது
6. கௌமாரம் — குமரன் ஆகிய முருகனை வழிபடுவது.

எனச் சிலர் விளக்கம் கூறுவர். சமயங்களைப் புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என நான்கு வகைப் படுத்தி, ஒவ்வொன்றினையும் பின்வருமாறு ஆறுவகையாகவும் கூறுவது உண்டு.

புறப்புறம்	புறம்	அகப்புறம்	அகம்
உலகாயதம்	தருக்கம்	பாசுபதம்	பாடாணவாதம்
மாத்தியமிகம்	மீமாஞ்சை	மாவிரதம்	பேதவாதம்
யோகாசாரம்	ஏகான்மவாதம்	காபாலம்	சிவசமவாதம்
சௌத்திராந்திகம்	சாங்கியம்	வாமம்	சிவசங்கிராந்தவாதம்
வைபாடிகம்	யோகம்	வைரவம்	ஈசுர அவிகாரவாதம்
ஆருகதம்	பாஞ்சராத்திரம்	ஐக்கியவாதம்	சிவாத்துவிதம்

எனினும், பொதுவாக ‘அறுவகைச் சமயங்கள்’ என இந்தியத் தத்துவ நூல்களிற் குறிக்கப் பெறுவன, நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாஞ்சை வேதாந்தம் என்னும் ஆறுமே யாம். இவற்றை “ஷட் தரிசனங்கள்” என வழங்குவர். இவைகளை விளக்கியருளிய ஆசிரியர்களின் பெயர்கள் முறையே பின் வருவன ஆகும்.

1. அக்கபாதர் (கோதமர்) — நியாயம்
2. கணாதர் — வைசேடிகம்
3. கபிலர் — சாங்கியம்
4. பதஞ்சலி — யோகம்
5. ஜைமினி — மீமாம்சம்
6. வாதராயணர் (வியாசர்) — வேதாந்தம்

பழங்காலத்திலேயே இந்திய நாடானது, கிரேக்கர் உரோமர் முதலிய மேலை நாட்டு மக்களுடன் வாணிகம் முதலிய தொடர்புகள் கொண்டிருந்தது. அதன் பயனாக இரு நாடுகளும் தமக்குள் பல பொருள்களைக் 'கொண்டும் கொடுத்தும்' கலந்து உறவாடி மகிழ்ந்தன. இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கைகளை ஆராய்ந்துணர்ந்த சர் வில்லியம் ஜோன்ஸ் என்னும் பேரறிஞர் கூறியிருக்கும் ஒப்புமையாய்வுக் கருத்துரை, இங்கு நாம் உணர்ந்து மகிழ்ந்து பயன் பெறத் தக்க செய்தியாகும்.

"இந்தியத் தத்துவக் கொள்கைகளுள் நியாயம் பெரிபடெடிக் கொள்கையையும், வைசேடிகம் ஐயோனிக் கொள்கையையும், மீமாம்சம் பிளேட்டோவின் கொள்கையையும், சாங்கியம் இட்டாலிக் கொள்கையையும், யோகம் ஸ்டாயிக் கொள்கையையும், பெரிதும் ஒத்துள்ளன. எனவே கோதமர் என்னும் அக்கபாதர் அரிஸ்டாட்டிலையும், கணாதர் தேல்சையும், ஜைமினி சாக்ரட்டீசையும், வியாசர் எனப்படும் வாதராயணர் பிளேட்டோவையும், கபிலர் பித்தாகரசையும், பதஞ்சலி ஜெனோவையும் போன்றவர்களாகக் காணப்படுகின்றனர்" (1).

இங்ஙனமே கோல்ப்ருக் (Colebrook) ரிச்சர்ட் கார்பே (Richard Garbe) முதலிய பல அறிஞர்களும் கருதுகின்றனர். மேனாடு கீழ் நாடுகளின் தத்துவக் கொள்கைகளையும் நூல்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து உணர விரும்புபவர்களுக்கு, இக்குறிப்பு மிகவும் பயன்படும்.

(2) தமிழ் நூல்களில் கடவுள் வாழ்த்து என்பது, வாழ்த்து வணக்கம் வருபொருளுரைத்தல் என்னும் மூன்றுக்கும் பொதுவாக வரும். இவற்றை வட நூலார் முறையே ஆசி நமஸ்க்ரியை வஸ்துநிர்த்தேசம் என வழங்குவர். வஸ்து நிர்த்தேசம் என்பது, நூல்நுதல் பொருள்களை யெல்லாம் குறிப்பால் தன்னகத்து அடக்கி நிற்றல். இதுவே மங்கல வாழ்த்து என்பதன் இலக்கணம்.

"கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே"

---

(1) "Of the philosophical schools, it will be sufficient here to remark that the first Nyaya seems analogous to the **Peripatetic**; the second, sometimes called Vaisesika, to the **Ionic**; the two Mimamsas, of which the second is often distinguished by the name of Vedanta, to the **Platonic**; the first Samkhya to the **Italic**; and the second of Patanjali to the **Stoic** philosophy; so that Gautama corresponds with **Aristotle,** Kanada with **Thales,**Jaimini with **Socrates,** Vyasa with **Plato,** Kapila with **Pythogoras,** and Patanjali with **Zeno.**" —**Sir William Jones,**
Works: Vol. I, p. 360

என்னும் சிவஞானபோத நூற்பா, மங்கல வாழ்த்து என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு. ஆசிரியர் சிவஞான சுவாமிகள், மங்கல வாழ்த்தின் இலக்கணம் விளங்க இப்பாடற்கு விரித்துரைத் தருளியுள்ள நுண்பொருட் குறிப்புகள் வருமாறு:—

(1) "இப்பாட்டு வஞ்சித்துறை. இது **கல்** என்பது முதல் **ஏ** என்பது இறுவாய்ப் பன்னிரு சொற்களாற் கூறவே, இந்நூல் பன்னிரு சூத்திரத்தாற் செய்யப்பட்டது எனவும்;

(2) அவற்றுள் மும்மூன்று சொற்கள் ஒவ்வோர் அடியாக வைத்து நான்கு அடியாகக் கூறவே, இந்நூலும் அவற்றுள் மும்மூன்று சூத்திரம் ஒவ்வோர் இயலாக வைத்துப் பிரமாண இயல் இலக்கண இயல் சாதன இயல் பயனியல் என அமைத்து நான்கியலாற் செய்யப்பட்டது எனவும்;

(3) அவற்றுள் முன் ஈரடியும் ஒரு வினைமுடிபும், பின் ஈரடியும் பிறிதோர் வினை முடிபுமாக இருவகைப் படுத்துச் செய்பவே, முன் ஆறு சூத்திரம் ஓரதிகாரமும், பின் ஆறு சூத்திரம் வேறு ஓர் அதிகாரமுமாக, இந்நூல் **பொது சிறப்பு** என இரண்டு அதிகாரங்களாகச் செய்யப்பட்டதெனவும் குறிப்பான் உணர்த்தியவாறு.

(4) இரண்டாம் இயலின் முதற் சூத்திரம் "**இதுவுமது**" என முதலியலின் இறுதிச் சூத்திரத்தோடு மாட்டெறியப் படுவதென்பது உணர்த்துதற்கு, '**மலை(வு)**' என்பதனை ஈரடியினும் சார வைத்தார்.

(5) 'கல்லால் நிழல்' என முதலடியில் இடங் கூறவே முதல்இயல் **பிரமாணம்** கூறுவதென்பதும்; இரண்டாம் அடியில் 'மலைவில்லார் அருளிய' எனச் செய்கை கூறவே இரண்டாம் இயல் **இலக்கணம்** கூறுவது என்பதும்; மூன்றும் அடியில் 'பொல்லார் இணைமலர்' எனத் திருவடி கூறவே மூன்றும் இயல் **சாதனம்** கூறுவது என்பதும்; நான்காம் அடியில் 'நல்லார் புனைவர்' எனப்பேறு கூறவே நான்காம் இயல் **பயன்** கூறுவதென்பதும் பெறப்படும்."

—சிவஞான போதப் பேருரை.

இவ்வாறே சிவஞான சித்தியார் சுபக்கப் பாயிரச் செய்யுளுக்கும், ஆசிரியர் **சிவஞான சுவாமிகள்** தமது நுண்மாண் நுழைபுலம் தோன்ற வரைந்திருக்கும் அரிய நுண்பொருள் விரிவுரைகள், மங்கல வாழ்த்து என்பதன் இலக்கணம் உணர்த்தும் மாட்சிமை யுடைமை பற்றி, இங்கு நம்மனோர் அறிந்து மகிழத் தகுவதாகும். அவ்வுரைப்பகுதி, வருமாறு:—

> "அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய், வேறும்
> குறியது உடைத்தாய், வேதா கமங்களின் குறி இறந்து, அங்கு
> அறிவினில் அருளால் மன்னி, அம்மையோடு அப்பன் ஆகிச்
> செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்"

—சிவஞான சித்தியார்

1. இதனுள் 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்' எனவே, முன்னே 301 செய்யுட்களால் மேற்கூறிப் போந்த **பரபக்கத்துப்** பொருளும்;

2. 'வேறும் குறியது உடைத்தாய்' எனவே முதற் சூத்திரம் முதலிய **ஐந்து** சூத்திரங்களிற் பெறப்படும் தடத்தப் பொருளும்;

3. 'வேதாகமங்களின் குறி இறந்து' எனவே பரபக்கப் பொருளும் தடத்தப் பொருளும் ஆகிய இரண்டும் அன்றி, ஏனைய சொரூப லக்கணம் கூறும் **ஆறும்** சூத்திரப் பொருளும்;

4. **'அறிவினில்'** எனவே ஆன்ம சொரூபம் கூறும் **ஏழாம்** சூத்திரப் பொருளும்;

5. 'அருளால் மன்னி' எனவே ஞான தரிசனம் கூறும் **எட்டாம்** சூத்திரப் பொருளும்;

6. 'அம்மையோடு அப்பன் ஆகி' எனவே ஞானமும் ஞேயமும் ஞாதிருவுமாகக் காணப்படும் **ஒன்பதாம்** சூத்திரப் பொருளும்;

7. 'செறிவு ஒழியாது நின்ற' எனவே ஏகனாகி நிற்றல் கூறும் **பத்தாம்** சூத்திரப் பொருளும்'

8. 'சிவனடி சென்னி வைப்பாம்' எனவே அரன் மலர் அடிக்கீழ் இருத்தல் கூறும் **பதினொன்றும்** சூத்திரப் பொருளும்;

9. 'சென்னி வைப்பாம்' என்னும் சொல்லியல்பான் அணைந்தோர் தன்மை கூறும் **பன்னிரண்டாம்** சூத்திரப் பொருளும் குறிப்பால் அறியக் கிடந்தன.

இங்ஙனம் தொகுத்துக் காட்டுதல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணம் என உணர்க.

இனி, இதனுட் கூறப்படும் அறுவகை வினை எச்சங்களானும் முதல்வனுடைய அறுவகைக் குணங்களும் கூறப்பட்டன என்று உரைத்தலும் ஒன்று. அது காட்டுதும்:—

1. 'அவ்வவர் பொருளாய்' என்றதனால் அங்ஙனம் பலவேறு வகைப்பட நிற்கும் அநந்தசத்தியாகிய **அளவிலாற்றலுடைமை** கூறப்பட்டது.

2. 'வேரும் குறியது உடைத்தாய்' என்றதனால் அநாதி போதம் அநாதி முத்தத்தன்மை எனப்படும் இயல்பாகவே **பாசங்களின் நீங்குதல்** கூறப்பட்டது. நிராமயான்மா எனப்படும் **இயற்கை யுணர்வினனாதல்** என்பதும் ஈண்டே அடங்கும்.

3. 'வேதாகமங்களின் குறி இறந்து' என்றதனாற் சுதந்திரம் எனப்படும் **தன்வயத்தனாதல்** கூறப்பட்டது.

4. 'அறிவினில் அருளால் மன்னி' என்றதனால் சர்வஞ்ஞத்துவம் எனப்படும் **முற்றுமுணர்தல்** கூறப்பட்டது.

5. 'அம்மையோடு அப்பன் ஆகி' என்றதனால் அலுத்தசத்தி எனப்படும் **பேரருளுடைமை** கூறப்பட்டது; விசுத்த தேகம் எனப்படும் **தூய உடம்பினனாதல்** என்பதும் ஈண்டே அடங்கும்.

6. 'செறிவு ஒழியாது' என்றதனால் பூர்த்தி எனப்படும் **வரம்பிலின்பமுடைமை** கூறப்பட்டதென்றுணர்க.

(3) பின்வரும் பதினாறு நலங்களையும் பெறுதலைப் பதினாறு பேறுகள் என நூல்கள் கூறும்:—

1. புகழ்	9. நல்வாழ்வு
2. கல்வி	10. நுகர்ச்சி
3. வீரம்	11. அறிவு
4. வெற்றி	12. அழகு
5. நன்மக்கட்பேறு	13. அறம்
6. அஞ்சாமை	14. குலம்
7. செல்வம்	15. நோயின்மை
8. தானியம்	16. நீண்ட ஆயுள்

துதிவாணி வீரம் விசயம் சந்தானம் துணிவுதனம்
அதி தானியம் சவுபாக்கியம் போகம் அறிவு அழகு
புதிதாம் பெருமை அறம் குலம் நோயின்மை பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே —தனிப்பாடல்.

கீழ்வரும் பண்பு நலங்களையும் கூடப் பதினாறு பேறுகள் என்று பெரியோர்கள் கூறுவர் :—

1. ஒழுக்கம் — உயர்ந்தாரோடு பொருந்த நடத்தல்
2. அன்பு — யாவரிடத்தும் அன்பாகப் பழகுதல்
3. அருள் — எளியாரிடத்தும் சிற்றுயிர்கள் மாட்டும் இரக்கம் காட்டுதல்
4. ஆசாரம் — தத்தம் நிலைக்கும் தகுதிகட்கும் ஏற்ப நடந்து கொள்ளுதல்
5. உபசாரம் — யாவர் இடத்தும் இன்முகம் காட்டி இன்சொற் கூறி நலம் புரியும் தன்மை
6. உறவு — எல்லோரையும் அன்பினால் இனிய தொடர்புடையவர்களாகச் செய்து கொள்ளும் பண்பு
7. சீலம் — நல்ல பண்புகள் பலவும் கொண்டு விளங்குதல்
8. வழுக்கு இலாத் தவம் — ஐம்பொறியடக்கல், நல்லன கடைப்பிடித் தொழுகுதல்
9. தானம் — தக்கோர்க்குத் தக்கபடி இயன்றன கொடுத்து உதவி புரியும் இயல்பு
10. வந்தித்தல் — அறிவும் அகவையும் அநுபவமும் முதலியவற்றால் மூத்தவர்களிடம் பணிவுதோன்ற ஒழுகுதல்
11. வணங்கல் — எவர்மாட்டும் செருக்கின்றி நயமாகக் கலந்து இனிது அளவளாவுதல்
12. வாய்மை — உண்மை கடைப்பிடித்து வாழ்தல்
13. அழுக்கு இலாத் துறவு — பிறன் மனைவிழையாமை, பிறன் பொருள் வெஃகாமை முதலிய நற்பண்புகளைப் பெற்றுத் திகழும் பற்றற்ற உணர்வு.

14. அடக்கம் — மறந்தும் தீநெறிப் படராது அறநெறியே போற்றி அடங்கி வாழ்தல்

15. அறிவு — தக்கது இது தகாதது இது என்று பகுத்தறிந்து வாழவல்ல திறமுடைமை

16. அர்ச்சித்தல் — சான்றோர்களையும், சான்றோர்களின் கொள்கைகளையும் போற்றித் தழுவி, வாழ்விற் பணியாற்றுதல்

"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்களானல், இரங்குவான் பணி அறங்கள்"

—அருள்நந்திசிவம்.

(4)

	திசை	தலைவர்கள்	தலைநகரங்கள்
1.	கிழக்கு	இந்திரன்	அமராவதி
2.	தென்கிழக்கு	அக்கினி	தேசோவதி
3.	தெற்கு	இமயன்	சமயமுனி
4.	தென்மேற்கு	நிருதி	கண்ணவதி
5.	மேற்கு	வருணன்	சுத்தவதி
6.	வடமேற்கு	வாயு	கந்தவதி
7.	வடக்கு	குபேரன்	மகோதையை (அளகாபுரி)
8.	வடகிழக்கு	ஈசானன்	யசோவதி.

(5) சோடசம்–பதினறு. உபசாரங்கள்–பணி விடைகள். கடவுளை விருந்தினர் போலப் பாவித்துச் செய்யும் பதினறு வகையான பணி விடைகளையே சோடசோப சாரங்கள் என்பர். அவைகள் வருமாறு :—

1. ஆசனம் — அமர்தற்குத் தவிசு அளித்தல்
2. பாத்யம் — கால் அலம்ப நீர் தருதல்
3. அர்க்யம் — கைகழுவ நீர் கொடுத்தல்
4. ஆசமநீயம் — பருகுதற்கு நீர் வழங்குதல்
5. அபிடேகம் — திரு முழுக்கு நீர் ஆட்டுதல்
6. வஸ்த்ரம் — அணிந்துகொள்ள ஆடைகள் நல்குதல்
7. கந்தம் — நறுமணப் பொருள்கள் தருதல்
8. புஷ்பம் — மலர்மாலைகள் சூட்டுதல்
9. தூபம் — அகில் சந்தனம் முதலிய நறுமணப் புகையிடுதல்
10. தீபம் — ஒளிவிளக்குகள் ஏற்றி மும்முறை வலமாகச் சுற்றுதல்
11. நைவேத்யம் — உணவுப் பொருள்கள் படைத்தல்
12. கர்ப்பூரம் — கர்ப்பூரம் கொளுத்திக் காட்டிப் பணிதல்
13. சாமரம் — கவரி வீசுதல்
14. ஆலவட்டம் — விசிறி கொண்டு வீசுதல்
15. சத்ரம் — குடை கவித்தல்
16. தர்ப்பணம் — கண்ணடி காட்டுதல்

—பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், சிவஞான தீபம்.

(6) திருமாலுக்குரிய ஐந்து படைக்கலன்களும், அவற்றின் திருப்பெயர்களும் முறையே வருமாறு :—

1.	சங்கு	— பாஞ்சசன்யம்
2.	சக்கரம்	— சுதர்சனம்
3.	கதை	— கௌமோதகீ
4.	வாள்	— நாந்தகம்
5.	வில்	— சார்ங்கம்

திருமாலுக்குரிய இவ்வைந்து படைக்கலன்களையும் ஓர் அணிகலனாகச் செய்து அவற்றைக் குழந்தைகளுக்குப் பாதுகாவலாக மார்பில் அணிவிப்பது பண்டைத் தமிழ் மக்களின் வழக்கம்.

"ஐம்படை மார்பிற் காணேன் ; சிறு சிலம்பு அடியிற் காணேன் ;
மொய்ம்பிடை மதாணி காணேன் ; முகத்துஅசை சுட்டிகாணேன் ;
மின்படு குழைகள் காணேன் ; வெற்றுடல் கண்டேன் அப்பா !
என்பெறும் என்று பிள்ளைப் பணிகளும் கவர்ந்தார் ? அந்தோ !"

—மாமனாக வந்து வழக்குரைத்த படலம், 25)

எனப்போதரும் திருவிளையாடற்புராணச் செய்யுளால் இவ்வுண்மை தெளியலாம்.

(7) குண்டம்-பாவம். வி.-இன்மை. பாவத்தின் சாயல் சிறிதும் இன்றிப் புண்ணிய மயமேயாகத் திகழுதலின், பரமபதம் வைகுண்டம் என வழங்கப் பெறும். வைகுண்டம் என்னும் சொல் வைகுந்தம் எனவும் வழங்கும். அங்குத் திருமாலின் வாயிற் காவலர்களாக விளங்குபவர்கள் சிலரின் பெயர்கள் வருமாறு :—

1.	விஷ்வக்சேனர்	9.	பிரசண்டன்
2.	நந்தர்	10.	பவன்
3.	சுநந்தர்	11.	பிரபவன்
4.	பத்ரர்	12.	குமுதன்
5.	சுபத்ரர்	13.	குமுதாட்சன்
6.	ஜயன்	14.	சீலன்
7.	விஜயன்	15.	சுசீலன்
8.	சண்டன்	16.	சுஸூஷணன்

(8) ஒரே சமயத்தில் ஒருவர் தம்முடைய நினைவாற்றலினால் எட்டு வகையான செயல்களைத் திறம்படச் செய்தல் '**அஷ்டாவதானம்**' எனப்படும். அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர யதீந்திரர், புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் போன்ற பேரறிஞர்கள் பலர், அண்மைக் காலத்திலும் இத்துறையிற் சிறந்து விளங்கியிருந்தனர்.

1. வாயினால் இறைவனின் திருப்பெயர்களைச் சொல்லிக் கொண்டிருத்தல்
2. கையினால் சிக்குண்ட சங்கிலித் தொடர்களைக் கழற்றி விடுவித்தல்
3. பலர் கூறும் கருத்துக்களுக்கு ஏற்பக் கவிதை இயற்றுதல்
4. முதுகில் எறியப்படும் நெல்லின் எண்ணிக்கை கூறுதல்
5. திரைமறைவில் வைக்கப்பெறும் பொருள்களின் எண்ணிக்கையைச் சொல்லுதல்

6. மறைவிடத்தில் விளையாடப்படும் சதுரங்கம் சொக்கட்டான் ஆகியவற்றிற்குச் சூழ்ச்சி யுரைத்தல்
7. பக்கத்தில் இருப்பார் எவரேனும் ஒப்புவிக்கும் பாடலை ஒரே முறை மட்டும் கேட்டுத் திரும்பச் சொல்லுதல்
8. உடலிற் பல இடத்தும் எழுத்தாணி வைத்து எழுதுதல்

ஆகிய எட்டுச் செயல்களையும் ஒருகாலத்தில் ஒருங்கே செய்யும் திறமை 'அஷ்டாவதானம்' எனப்படும். இவ்வாறே பத்து, பதினாறு, நூறு செயல்கள் செய்யும் திறனைத் தசாவதானம், சோடசாவதானம், சதாவதானம் எனக் கூறுவர்.

(9) பெண்களைப் பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் என்னும் ஏழு பருவங்களை யுடையவர்களாகச் சொல்லுதல் போல, அடியவர்களின் அன்பு நிலையினையும் இங்ஙனம் ஏழு வகைத்தாகச் சான்றோர்கள் கூறுவர்.

1. அபிலாஷை — கண்டவுடனே தோன்றும் விருப்பம்
2. ஸ்மரிக்கை — கண்ட ஒருவரை நினைவு கூர்தல்
3. அநுஸ்மிருதி — அன்பினால் இடைவிடாது நினைத்துக் கொண்டிருத்தல்
4. இச்சை — தான் கண்ட ஒருவரை இன்றியமையாது கூடி இன்புற வேண்டும் [என்னும் விழைவு
5. ருசி — அவ்விழைவு வேறு ஒன்றனால் தவிராதபடி மேன்மேல் முதிர்ந்து [நிற்கும் ஈடுபாட்டின் மிகுதி
6. பரபக்தி — தன் விழைவுக்குக் காரணமான பொருளைக் கூடுதலே இன்பமாகவும், பிரிதலே துன்பமாகவும் கொள்ளும் இயல்பு
7. பரமபக்தி — தன் பெருங்காதலுக்கு உரிய பொருளைப் பிரிந்த அளவில் மயங்கி வீழ்ந்து உயிர் துறக்கும் பேரன்பின் முதிர்ச்சி

—ஆசார்ய இருதயம் (136)

(10) 'ரஹஸ்யத்ரயம்' என்பன, திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகம் என்னும் மூன்றும் ஆகும். இவற்றை இறைவன் முறையே பதரிகாச்ரமத்தில் நரமூர்த்திக்கும், விஷ்ணுலோகத்தில் பிராட்டிக்கும், தேர்த்தட்டில் அருச்சுனனுக்கும் வெளியிட்டு அருளிச் செய்தார்,

1. திருமந்த்ரம் — பதரிகாச்ரமம் — நரமூர்த்திக்கு
2. த்வயம் — விஷ்ணுலோகம் — பிராட்டிக்கு
3. சரமச்லோகம் — தேர்த்தட்டில் (குருக்ஷேத்திரம்) — அருச்சுனனுக்கு

'ரஹஸ்யத்ரயம்' எனப்படும் இம்மூன்று மறை நுண் பொருள்களையும் பற்றி விளக்கி, வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருக்குமாரர் ஆகிய **பிள்ளை லோகாசாரியார்** என்பவர், **முமுட்சுப்படி** என்னும் சிறந்த நூல் ஒன்றை அருளிச் செய்துள்ளார்.

—ஆசிரியர்.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்தபின் சிலகாலம் உடையவர் திருவரங்கப் பெருமானுக்கு எப்போதும்போல் நித்திய கைங்கர்யங்களைச் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார். அந்நாளில் அப்பிரதேசத்தை ஆண்டு கொண்டிருந்த சோழ அரசன் (முதலாம் குலோத்துங்கன்) சைவ சமயத்தில் மிகவும் ஈடுபாடு உடையவனுயிருந்தான். அவ் வீடுபாட்டின் காரணமாக அவன் தன்னுடைய நாட்டிலே வாழும் அனைவரும் சிவபெருமானே பரதெய்வம் என்பதை ஒப்புக் கொள்ளும்படி செய்ய வேண்டும் என எண்ணினுன். பிரமாணங்களால் சாதிக்கமுடியாத ஒன்றை அரசாங்க அதிகாரத்தால் சாதிக்க முற்பட்டது அவன் கோணல் புத்தி. ஒரு ஓலையை எடுத்து அதிலே "சிவாத் பரதரம் நாஸ்தி" (சிவனுக்கு மேலான தெய்வமில்லை) என்று பொறித்து அவ்வோலையிலே பண்டிதர்கள் வித்வான்கள் இவர்கள் கையெழுத்தை வாங்கி விட்டால் சிவபரத்துவத்தை நிலைநாட்டி விட்டதாய் விடும் என்று ஒரு விநோதமான வக்கிரமான எண்ணம் எழுந்தது அவனுக்கு. வெறியுடன் உள்ளத்தெழும் எண்ணங்களை ஆராயும் திறமையை இழந்தவன் தானே! அரசனின் உத்தரவு பிறந்தது. முறி எழுதப் பெற்றது. அம்முறியிலே அனைத்தறிஞர்களும் கையெழுத்திடுமாறு செய்ய வேண்டும் என்பது அரசனின் விருப்பம், கட்டளை. அதனை நிறைவேற்றப் பலமுறைகளும் கையாளப் பட்டன. ஆசைக்கும் பயத்துக்கும் அடிமைகளாய்ப் பரம்பரையாய்ப் பேணி வந்த மதத்தைக் கைவிட்டுப் புறச்சமயிகளாய்த் தம்மையும் நாட்டையும் கெடுத்தவர்கள் கெடுத்துக் கொண்டிருப்பவர்கள் நமக்குப் புதிதல்லவே. நம் கண் முன்னே இன்றும் ஓரளவு நிகழும் செயல்கள்தாமே. சோழன் முகோல்லாசத்தை விரும்பியும், அவன் அளித்த பொன்னுக்கும் பண்ணுக்கும் பிறவற்றுக்கும் ஆசைப்பட்டும், ஆத்ம ஹத்தி (தம் மதத் தற்கொலை) செய்து கொண்டார் பலர். சிலர் பயந்து பணிந்தனர். இவர்களிடமெல்லாம் இம்முறியில் கையெழுத்து வாங்கி மகிழ்ந்தான் சோழன். தன் ஆக்ரமிப்பு இயக்கம் வெற்றி பெற்றுவிட்டது என்று அவன் மார்தட்டிக் கொண்டதைக் கண்டார் அவனிடம் மந்திரியாயிருந்த நாலூராச்சான் என்பவர். அரசனிடம் நேரே சென்றார். 'அரசே இது என்ன கேலிக் கூத்து! இவர்கள் கையெழுத்திட்டுவிட்டால் சிவபரத்துவம் நிலைத்துவிடுமா? எப்படி இவர்கள் கையெழுத்து பெறப் பெற்றதென்பது உலகம் அறியுமே! திருவரங்கத்திலே எழுந்தருளியிருக்கும் எம்பெருமானர், கூரத்தாழ்வான் தொடக்கமான உபயவேதாந்தங்களும் தெளிந்து வைதிகமதப்படியே வேறு பரதத்துவத்தை நிலைநாட்டி வருகின்ற அம்மகான்கள் ஒப்பிக் கையெழுத்திட்டாலல்லவா, உம்முடைய சிவபரத்துவம் வைதிக அடிப்படையிலே நிலை பெற்றதாகும்!" என்று அவனிடம் இகழ்ச்சி தோன்ற உரைத்தார். திக்கென்றது சோழனுக்கு! நாலூரான் கூறியவற்றின் உண்மையை உணர்ந்தான். விவேகம் இருந்தால் இருதரப்பாரையும் கூட்டி வாதம் நடத்தி முடிவு தெளிய முற்படுவான். விவேகம் தான் கொண்டிருந்த வெறியில் சூன்யமாகி விட்டதே. எனவேதான் அரசன் என்ற அதிகார மமதையில் அவர்களிடமும் பலவந்தமாகக் கையெழுத்து வாங்கிவிடவே முனைந்தது அவன் உள்ளம். உடனே பிறந்தது உத்தரவு, எம்பெருமானரையும் அவர் தொடக்கமான பிறரையும் அரசவைக்கு வரும்படி, ஏவலாளர் ஆணையை ஏந்தித் திருவரங்கம் சென்று எம்பெருமானர் திருமடத்தின் தலைவாசல் சென்றனர். அங்கு வாசலில் உள்ளார் அவர்களிடம் வந்த விஷயம் என்னவென்று கேட்க அரச உத்தரவு அறையப் பெற்றது. வாசலில் நின்ற முதலிகள் மெல்ல நயமாக வந்த ஏவலாளர்களிடம் பேச்சுக் கொடுத்து எதன் காரணமாக இத்தகைய உத்தரவு

பிறந்தது என்பதைத் தெரிந்து கொண்டனர். ஏவலாளரை வாசலில் நிறுத்தி உள்ளே போயினர்.

இவர்கள் போகும்போது உடையவர் திருமஞ்சன அறையிலே இருக்க அவருக்குத் திருமஞ்சனம் எடுத்துச் சென்று கொண்டிருந்தார் கூரத்தாழ்வான் போனவர்கள் நடந்த விருத்தாந் தங்களை அவரிடம் விண்ணப்பித்தனர். கேட்ட ஆழ்வான் திகைத்தார். திருமஞ்சனத்தைக் கீழே வைத்தார். முக்காலமும் அறியும் அவர் அறிவு வேகமாகச் செயல் பட்டது. ஒரு முடிவுக்கு வந்தார். பக்கத்திலிருந்த பெரிய நம்பியை அழைத்து இரகசியமாக ஏதோ கூறினர். உள்ளே சென்றார். தன்னுடைய வெண்மை ஆடையை வைத்து உடையவரின் காஷாயங்களைத் தரித்து வெளிவந்தார். அனைவரும் ஒன்றுமறியாது திகைத்து நின்றனர். அவர்களை நோக்கி நாங்கள் தலைமறையப் போமளவும் ஒன்றும் கூறுதீர். பின்னால் எம்பெருமானரிடம் நிகழ்ந்தவற்றை விடாமல் அப்படியே விண்ணப்பியுங்கள். அவர் உணர்ந்து கொள்வார்" என்று ஆக்ஞாபித்தார். பெரிய நம்பிகளை நோக்கி 'வாரும் சோழனவை செல்வோம்' என்று அவரையும் கூட்டிக் கொண்டு வாசலில் நின்ற ஏவலாளரிடம் சென்று 'செல்வோமே' என்று நிதானமாகக் கூறினர்.

வந்த ஏவலாளர் எம்பெருமானரை முன்னே கண்டவரல்லர். ஆகவே வந்தவர் எம்பெருமானரே என்று கொண்டவராய், அவரையும், (கூரத்தாழ்வானையும்), பெரிய நம்பியையும் தம்முடன் அழைத்துச் சென்றனர். இதையெல்லாம் பார்த்து நின்ற அத்துழாய் (பெரிய நம்பியின் திருமகளார்) அவர்களுக்கு உதவியாகத் தாமும் அவர்களோடு சென்றாள்.

உடையவர் தம் நீராட்டத்தை முடித்துக் கொண்டு ஈரம் புலர்த்தித் தம் காஷயங்களைக் கொணருமாறு நியமித்தார். அருகுள்ளார் 'ஸ்வாமீ! அவற்றை ஆழ்வான் தரித்துக் கொண்டு சோழன் சபைக்கு அப்போதே எழுந்தருளிவிட்டார்" என்று விண்ணப்பித்தனர். உடையவர் ஒன்று மறியாராய்த் திகைத்து நின்றார். முதலிகள் வாசலில் ஏவலாளர் வந்ததிலிருந்து நிகழ்ந்தவற்றையெல்லாம் ஒன்றொழியாமல் நிகழ்ந்த வரிசையிலே விண்ணப்பித்தனர். கேட்ட உடையவர் அனைத்தையும் அக்கணமே உணர்ந்து கொண்டார். பெரிய நம்பிகளுக்கும் ஆழ்வானுக்கும் என்ன தீங்கு நேரிடுமோ என்று உளம் கரைந்தார். ஒன்றும் ஓடவில்லை அவருக்கு.

அந்நிலையில் நின்ற அவர் திருவடிகளிலே தண்டனிட்டு நின்றார் முதலியாண்டான், 'ஸ்வாமீ! எண்ணுதற்குரிய சமயமல்ல இது. ஆழ்வான் முதலியோர் போனதுமே, தேவரீரில்லை என்பது தெரியும். ராஜகோபம் மீறும். வெறியன் செயலை நிர்ணயிப்பது வியர்த்தம், ஆகவே தேவரீர் இப்போதே கோயிலை விட்டு வெளியேறி எங்கேனும் போய்விடுவதுதான் ஒரே வழி! தயங்க வேண்டாம். காலவிளம்பனம் மிகவும் தீதாகும்" என்று விண்ணப்பித்தார். மற்றைய முதலிகளும் அது ஒன்றுதான் அப்போது செய்யத் தக்கது என்று ஆமோதித்தனர். அவர்கள் கூறுவது சரியே என உணர்ந்தார் உடையவர். ஆழ்வான் காஷாயமிருந்த விடத்தில் வெள்ளை வஸ்திரம் வைத்துச் சென்ற குறிப்பைத் தெரிந்து கொண்டார். அவ்வெள்ளையைத் தரித்தார். விரைவிலே புண்டரங்களை அணிந்து நம் பெருமாள் ஸன்னிதி சென்று அவர் திருவடிகளிலே நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் என்று தெண்டனிட்டுச் சரண் புகுந்தார். 'எம்பெருமானே! என்ன சோதனை இது. அடியேன் விடை கொள்கிறேன். சோழன் ஒரு மிலாடன் (அறிவில்லாதவன், வலியவன்). மேலும் ராஜ்ய பரிவாரமனைத்தும் உடையவன். அவனுக்குரிய தண்டனையை அடியேன் விதிக்க நினைக்குங்கால் அதனை நிறைவேற்றி வைக்க வேண்டும் தேவரீர்!" என்று தம்மியல்வையும் மீறிப் பிரார்த்தித்தார். மீண்டும் நம் பெருமாளை வணங்கிப் பிரியமாட்டாது தயங்கித் தயங்கி வெளிவந்தார். தம்முடன் சில முதலிகளையும் கூட்டிக் கொண்டு நேரே மேல்திசை நோக்கிப் பயணமானர்.

(தொடரும்)

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR
MADRAS

திருபுவனம் ஸ்ரீசரபமூர்த்தி

அன்பளிப்பு :
தருமபுர ஆதீனம்

திருமழிசையாழ்வார் அருளிய

திருச்சந்த விருத்தம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சரங்களைத் துரந்து வில் வளைத்து
இலங்கை மன்னவன்

சிரங்கள் பத்து அறுத்து உதிர்த்த
செல்வர் மன்னு பொன் இடம்;

பரந்து பொன் நிரந்து நுந்தி
வந்து அலைக்கும் வார்புனல்

அரங்கம் என்பர் நான்முகத்து
அயன் பணிந்த கோயிலே!

(பொழிப்புரை)

வில்லை வளைத்து அம்புகளை ஏவி இராவணனுடைய பத்துத் தலைகளையும் வெட்டி உதிரும்படி செய்த செல்வர் ஆகிய பெருமாள், நிலைபெற்று விளங்குகிற சிறந்த தலம், மிகவும் நீண்டு பரவிப் பொன்துகள்களைக் கொழித்துக் கொண்டு வந்து அலைகள் வீசுகின்ற காவிரி யாற்றை யுடையதாய், நான்கு முகங்களை யுடைய பிரமனால் வணங்கப் பெற்ற கோயில் ஆகிய, திருவரங்கம் என்று பெரியோர்கள் கூறுவர்.

(குறிப்புரை)

சரம்-அம்பு. துரந்து-செலுத்தி. மன்னு-நிலைபெற்ற. பொன் இடம்-சிறந்த தலம். பரந்து – பரவி. நிரந்து – வரிசைப்பட்டு. நுந்தி வந்து – கொழித்துக் கொண்டு வந்து. அலைக்கும் – அலைகள் வீசுகின்ற. அரங்கம் – திருவரங்கம். இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதிக்கு வடமொழியில் 'ரங்கம்' என்பது பெயர். (51)

பொற்றை யுற்ற முற்றல் யானை
போர் எதிர்ந்து வந்ததைப்

பற்றி யுற்று மற்றதன் மருப்பு
ஒசித்த பாகன் ஊர்;

சிற்றெயிற்று முற்றல் மூங்கில்
மூன்று தண்டர் ஒன்றினர்

அற்ற பற்றர் சுற்றி வாழும்
அந்தண் நீர் அரங்கமே

(பொழிப்புரை)

மலையைப் போன்ற வலிமை முதிர்ந்த குவலயாபீடம் என்னும் யானையானது போருக்கு எதிர்ப்பட்டு வர, அதனைச் சென்று பிடித்து அதனுடைய தந்தங்களை முறித்து எறிந்த பாகனைப் போன்ற கண்ணபிரானுடைய தலம், சிறிய கணுக்களையுடைய முற்றிய மூங்கிலினாற் செய்யப்பட்ட திரிதண்டம் என்னும் முக்கோலையுடைய பகவர்களும், ஏகதண்டம் ஏந்திய துறவிகளும், உலகியற் பற்றுக்களை அறுத்தொழித்த பக்தர்களும் ஆகிய பலரும் சூழ்ந்து, வாழ்ந்து வருகின்ற, அழகிய குளிர்ந்த தீர்த்தத்தையுடைய திருவரங்கம் ஆகும்.

(குறிப்புரை)

பொற்றை – மலை. முற்றல் – வலிமை, முதிர்தல். மருப்பு – தந்தம். ஒசித்தல்– எளிதாக ஒடித்தல். அற்ற பற்றர் – பற்று அற்றவர்கள்: 'அருங்கேடன்' என்றாற் போல நின்றது. சுற்றி – சூழ்ந்து; வலம் செய்து வழிபட்டுக் கொண்டு எனினுமாம். (52)

மோடியோடு இலச்சையாய
சாபம் எய்தி முக்கணன்

கூடு சேனை மக்களோடு
கொண்டு மண்டி வெம் சமத்து

ஓட வாணன் ஆயிரம்
கரம் கழித்த ஆதிமால்

பீடு கோயில் கூடு நீர்
அரங்கம் என்ற பேரதே

(பொழிப்புரை)

காளியுடன் நாணம் அடையத் தக்க சாபம் எய்தியவனும் மூன்று கண்களை யுடையவனுமான உருத்திரன், தன் பரி வாரங்களுடன் திரண்ட படைகளை அழைத்துக்கொண்டு, கொடுமை நிறைந்த போர்க் களத்தினின்று பெயர்ந்து வேக மாக ஓடிப்போக, வாணன் என்னும் அசுரனது ஆயிரம் கைகளையும் வெட்டித் தள்ளிய முதல்வன் ஆகிய திருமாலின் பெருமை மிக்க கோயில், காவிரி யாற் றுடன் கூடிய திருவரங்கம் என்று பெயரை யுடையதாகும்.

(குறிப்புரை)

மோடி – காளி. இலச்சை – நாணம், 'சாபம் எய்தி' – சாபத்தை எய்தியவன்; வினையால் அணையும் பெயர். மண்டி – விரைந்து. சமம் – போர், 'ஆதிமால்' ஆதியாகிய திருமால்; இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகை. ஆதி – முதல்வன். பீடு – பெருமை, பேரது – பெயரை யுடையது. (53)

இலைத் தலைச் சரம் துரந்து
இலங்கை கட்டு அழித்தவன்
மலைத் தலைப் பிறந்து இழிந்து
வந்து நுந்து சந்தனம்
குலைத்து அலைத்து இறுத்து எறிந்த
குங்குமக் குழம்பி னோடு
அலைத்து ஒழுகு காவிரி
அரங்கம் மேய அண்ணலே.

(பொழிப்புரை)

இலைபோன்ற நுனியையுடைய அம்பு களைச் செலுத்தி, இலங்கைமா நகரின் மதில்களை அழித்தருளிய இராமபிரான், மலையின் உச்சியிலே தோன்றி அங்கு இருந்து கீழே இறங்கிப் பெருக்கெடுத்து வந்து, சந்தன மரங்களைத் தள்ளிக், குங்கு மக் கொடிகளை அறுத்து, அலையும்படி செய்து மறித்து வீசிய குங்குமத் துகள் களினாலாகிய குழம்பினோடுகூட, பெரிய அலைகளை எழுப்பிக் கொண்டு பெருகி வழிகின்ற காவிரியை யுடைய திருவரங்கம் என்னும் கோயிலில் எழுந்தருளி யிருக் கின்ற பெருமான் ஆவர்.

(குறிப்புரை)

இலைத்தலை – இலையைப் போன்ற நுனி யையுடைய. சரம் – அம்பு. கட்டு–மதில். 'கட்டு அழித்தவன்' – கட்டோடு, முழு தாக அழித்தவன். நுந்துதல் – தள்ளு தல், அடித்துக் கொண்டு வருதல். 'குலைத்து அலைத்து' – குலையவும் அலை யவும் செய்து.

ஒவ்வொரு நாளும் நீராடும்பொழுது இப்பாடலை அநுசந்திப்பது ஸ்ரீ வைஷ் ணவர்களின் ஸம்ப்ரதாயம் ஆகும்.

மன்னும் மா மலர்க் கிழத்தி
வைய மங்கை மைந்தனாய்
பின்னும் ஆயர் பின்னை தோள்
மணம் புணர்ந்தது அன்றியும்,
உன்ன பாதம் என்ன சிந்தை
மன்ன வைத்து நல்கினாய்
பொன்னி சூழ் அரங்கம் மேய
புண்ட ரீகன் அல்லையே.

(பொழிப்புரை)

சிறந்த தாமரைப் பூவில் பொருந்திய திருமகளுக்கும், நில மகளுக்கும் காத லனாய், மேலும் இடையர் குலத்தில் கும் பருடைய மகளாகத் தோன்றிய நப்பின் னைப் பிராட்டியின் தோள்களை மணத் தினாற்கூடி, அதற்கு மேலும் உன்னுடைய திருவடிகளை என்னுடைய நெஞ்சி னுள்ளே நிலைபெற வைத்து அருள் செய் தாய். காவிரியாறு சூழ்ந்த திருவரங் கத்தில் எழுந்தருளி யிருக்கின்ற தாமரை மலர் போன்ற அழகிய உறுப்புக்களை யுடைய பெருமான், நீயேயன்றோ ?

(குறிப்புரை)

பெரிய பிராட்டி, பூமிப்பிராட்டி, நப் பின்னைப் பிராட்டி ஆகியவர்கள் திறத் திற் காட்டிலும் எளியேன் பக்கல் பெரி தும் தண்ணளி காட்டி யருளினை என் பது கருத்து. மலர்க்கிழத்தி – திருமகள். வையமங்கை – நிலமகள். மைந்தன் – காதலன். உன்ன–உன்னுடைய. புண்டரீ

கன் – தாமரை போன்ற உறுப்புக்களை யுடையவன். அல்லையே – நீ அல்லவா ? (55)

இலங்கை மன்னன் ஐந்தொடு ஐந்து
பைந்தலை நிலத்து உகக்
கலங்க அன்று சென்று கொன்று
வென்றி கொண்ட வீரனே
விலங்கு நூலர் வேத நாவர்
நீதி யான கேள்வியார்
வலங்கொளக் குடந்தையுள்
கிடந்த மாலும் அல்லையே.

(பொழிப்புரை)

இலங்கை நகரின் அரசன் ஆகிய இராவணனின் பத்துப் பெரிய தலைகளும் தரையில் உதிரும்படியும், அவன் அஞ்சிக் கலக்கம் அடையும்படியும் முற்காலத்தில் இலங்கையிற் புகுந்து அவனைக் கூட்டத்தோடு கொலை செய்து வெற்றி பெற்ற பெருவீரனே ! உடம்பிலே அசைகின்ற பூணூலை யுடையவரும், வேதங்களை ஓதும் நாவினையுடையவரும், முறையான ஆராய்ச்சியை யுடையவர்களுமான பெரியோர்கள் வழிபடும்படியாகத் திருக்குடந்தைப் பதியில் கண் வளர்ந்தருள்கின்ற திருமாலும் நீயே அன்றோ ?

(குறிப்புரை)

பைந்தலை, பசுந்தலை – பெரிய, வலிய தலைகள், உக – உதிர, விலங்கு நூல் – அசைகின்ற பூணூல். விலகுதல், விலங்குதல் என எதுகை நோக்கி வந்தது. நீதி – முறை. கேள்வி – ஆராய்ச்சி. வலங்கொள – வழிபட்டுய்ய. (56)

சங்கு தங்கு முன்கை நங்கை
கொங்கை தங்கல் உற்றவன்
அங்கம் மங்க அன்று சென்று
அடர்த்து எறிந்த ஆழியான்
கொங்கு தங்கு வார்குழல்
மடந்தைமார் குடைந்தநீர்
பொங்கு தண் குடந்தையுள்
கிடந்த புண்ட ரீகனே !

(பொழிப்புரை)

சங்கு வளைகள் பொருந்திய முன்கைகளையுடைய பிராட்டியின் திருமார்பிலே தங்குதலை விரும்பிய, கொடியவன் ஆகிய இராவணனுடைய உடலானது அழியும்படி, முற்காலத்தில் இலங்கைக்குச் சென்று போர் இட்டு வெற்றி கொண்ட, கடல் போன்ற திருமேனியையுடைய இராமபிரான், வாசனை பொருந்திய நீண்ட கூந்தலை யுடைய அழகிய தெய்வப் பெண்கள் மூழ்கித் திளைத்த தீர்த்தமானது பெருகுகின்ற, குளிர்ந்த திருக்குடந்தையிற் பள்ளிகொண்டுள்ள புண்டரீகன் ஆவான்.

(குறிப்புரை)

சங்கு – சங்கினாற் செய்த வளையல்கள். நங்கை – சீதைப் பிராட்டி. கொங்கை தங்கல் உற்றவன் – மோகம் கொண்ட இராவணன். ஆழியான் – கடலைப் போன்றவன். கொங்கு – வாசனை. வார்குழல் – நீண்ட கூந்தல். புண்டரீகன் – அழகிய மேனியன், சுந்தராங்கன். (57)

மரங்கெட நடந்து அடர்த்து
மத்த யானை மத்தகத்து
உரங்கெடப் புடைத்து ஓர்கொம்பு
ஒசித்து உகந்த உத்தமா !
துரங்கம் வாய்பிளந்து மண்
அளந்த பாத ! வேதியர்
வரங்கொளக் குடந்தையுள்
கிடந்த மாலும் அல்லையே.

(பொழிப்புரை)

மருதம் குருந்தம் ஆகிய மரங்கள் அழியும்படி நடை கற்று, குவலயாபீடம் என்னும் மதங்கொண்ட யானையை அடக்கி, அதன் மத்தகத்தின் மீது வலிமை குன்றும்படி அடித்து, அதன் ஒப்பற்ற தந்தத்தை ஒடித்து எறிந்து மகிழ்ந்த உத்தமனே ! குதிரை வடிவம் கொண்டு வந்த கேசி என்னும் அசுரனுடைய வாயைப் பிளந்து அவனை அழித்த பெருமானே ! உலகங்களை அளந்து கொண்ட திருவடிகளை யுடையவனே ! வேதம் ஓதும் அந்தணர்கள் தங்கள் விருப்பங்

களைப் பெற்றுக் கொள்ளுமாறு திருக்குடந்தையம் பதியின்கண் பள்ளி கொண்டுள்ள திருமாலும் நீயே யல்லவா!

(குறிப்புரை)

மரம் – நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் குபேர புத்திரர் இருவரும் சாபத்தினால் நின்ற இரட்டை மருத மரங்கள். கம்சன் ஏவலினால் அசுரன் ஒருவன் கண்ணனைக் கொல்வதற்காக நின்ற குருந்த மரம். யானை – குவலயா பீடம். துரங்கம் – குதிரை, கேசி என்னும் அசுரன். வாய் பிளத்தல் – கொல்லுதல்.

சாலி வேலி தண்வயல்
  தடம் கிடங்கு பூம்பொழில்
கோல மாடம் நீடு தண்
  குடந்தை மேய கோவலா!
கால நேமி வக்கரன்
  கரன் முரன் சிரம் அவை
காலனோடு கூட வில்
  குனித்த விற்கை வீரனே!

(பொழிப்புரை)

செந்நெற்பயிர்களை வேலியாக உடைய குளிர்ந்த கழனிகளையும் பெரிய அகழிகளையும், பூக்கள் நிறைந்த சோலைகளையும், அழகு மிகுந்த மாட மாளிகைகளையும் உடைய குளிர்ந்த திருக்குடந்தையில் எழுந்தருளியுள்ள கண்ணபிரானே! காலநேமி தந்தவக்ரன் கரன் முரன் என்னும் அசுரர்களுடைய தலைகள் எமனுலகம் போய்ச் சேரும்படி வில்லை வளைத்த அழகிய திருக்கையையுடைய ஒப்பற்ற வீரனே! நின் வல்லமைக்கும் ஓர் எல்லையுண்டோ?

(குறிப்புரை)

சாலி – செந்நெற்பயிர். கோவலன் – பசுக்களைக் காப்பவன். காலநேமி – இராவணனின் மாதுலன். வக்கரன் – தந்த வக்கரன் என்னும் அரசன். கண்ணபிரான் ருக்மிணிப் பிராட்டியைக் கவர்ந்து சென்ற பொழுது எதிர்த்து வந்து போர் புரிந்த அரசர்களில் ஒருவன். முரன் – முரன் என்னும் அசுரன், நரகாசுரனின் அமைச்சன். முரனை அழித்ததனால் திருமாலுக்கு முராரி என்று பெயர் வழங்கும். கரன் – சூர்ப்பணகைக்குக் காவலாய் அமைந்த ஓர் அரக்கன்; தண்டகாரணியத்தில் இராமபிரானால் கொல்லப்பட்டவன். வேற்றுமையின்மை கருதி இராமன் கண்ணன் ஆகிய இருவர் செயல்களும் கலந்து கூறப்பெற்றுள்ளன. (59)

செழும் கொழும் பெரும்பனி
  பொழிந்திட உயர்ந்த வேய்
விழுந்து உலர்ந்து எழுந்து விண்
  புடைக்கும் வேங்கடத்துள் நின்று,
எழுந்திருந்து தேன் பொருந்து
  பூம்பொழில் தழைக் கொழும்
செழும் தடம் குடந்தையுள்
  கிடந்த மாலும் அல்லையே!

(பொழிப்புரை)

செழித்த கொழுத்த பெரிய பனியானது மிகுதியாகப் பெய்ய, அங்ஙனம் பெய்ததனால் முன்பு நிமிர்ந்து நின்று கொண்டிருந்த மூங்கிற் பணைகள் அப்பனியின் கனத்தினால் தரையிலே சாய்ந்து பின்பு சூரியனின் கதிர்களாலே அப்பனி உலர்ந்த பிறகு, அம் மூங்கிற் பணைகள் உயரக் கிளம்பி விண்ணுலகத்தை முட்டும்படியான உயர்ச்சியை யுடைய திருவேங்கட மலையிலே நின்றருளி, வண்டுகளானவை மேலே எழுதலும் கீழே படிதலும் ஆகிய நிலைமைகளோடு பொருந்தி யிருக்கப் பெற்ற, மலர்கள் நிறைந்த சோலைகள் தழைத்துக் கொழுவியனவாய் விளங்க, செழுமை வாய்ந்த நீர் நிலைகளை யுடையதாகத் திகழும் திருக்குடந்தையிலே பள்ளி கொண்டருளியுள்ள பெருமாள் நீ அன்றோ?

(குறிப்புரை)

திருவேங்கடத்துள் நின்ற வண்ணமாயும், திருக்குடந்தையுள் கிடந்த வண்ணமாயும் எழுந்தருளி, அடியார்களின் பக்கல் தான் கொண்டுள்ள வியாமோகத்தினை வெளியிடும் பெருமாளின் சிறப்பினை வியந்தவாறு. —தொடரும். (60)

—ஆசிரியர்

சங்கற்ப நிராகரணம்

(சமயநூற் பொருள் விளக்கம்)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஐக்கியவாதி சங்கற்பம் (8)

இங்ஙனம் மாயாவாதியினை மேலே மறுத்துக் கூறிய (ஈசுர) **ஐக்கியவாதி** தன் கொள்கையினைக் கீழ்வருமாறு விளக்குகின்றான்; "பதிபசுபாச உண்மைகளை உள்ளவாறு கூறலுறின், **பதி** என்று சொல்லப்படும் முதற்பொருளாகிய இறைவன் ஒருவனே! **பசுக்கள்** எனப் படும் உயிர்களோ பலப்பலவாகும். **பாசம்** என்பது மாயை என்றும், கன்மம் என்றும் இரண்டு வகைப்படும்.

உலகிற்குத் தாயாக விளங்கும் இறைவன் தனது அருளால் உயிர்களுக்கு அவற்றின் நல்வினை தீவினைகளுக்கு ஏற்பப் பலவகை உடல்களை மாயையினின்று படைத்துக் கொடுப்பன். கரிய முகிலானது ஒளிமிக்க ஞாயிற்றின்பாற் சென்று சேர்ந்து அஞ்ஞாயிற்றின் கதிர்களை யெல்லாம் மறைக்குந் தன்மைபோல, மாயையினின்று இறைவனால் தோற்றுவிக்கப் பெற்ற இவ்வுடல்களும், முதலில் தூயவாய் அறிவாய் இருந்த உயிர்களைச் சேர்ந்து எஞ்ஞான்றும் நீங்காமற் பொருந்தி, அவற்றின் தூய்மையையும் அறிவையும் மறைத்துவரும். உயிர்கள் முற்பிறவிகளிற் செய்த வினைப்பயன்களை, இறைவன் இவ்வுடல்களின் வாயிலாகவே உயிர்கள் நுகரும்படி செய்வான். நல்வினை தீவினை என்னும் இரண்டும் துலையொக்குமாறு, ஒரு பிறவியில் எல்லா வினைப்பயன்களும் நுகர்ந்து கழிந்தனவாகும் வண்ணம், ஏதேனும் ஒரு சிறந்த சிவபுண்ணியம் உயிர்கள் திறத்தில் எதிர்ப்படுமாயின், உயிர்களுக்குச் **'சத்திநிபாதம்'** என்பதொரு நிலை ஏற்படும்.

அந்நிலையில், இறைவன் தன் அருளால் திருமேனி கொண்டு ஞானாசிரியனாக வந்து, "தானென்னை ஆட்கொண்டது எல்லாரும் தாமறிவார்" "பல்லோரும் காண என்றன் பசுபாசம் அறுத்தான்" என்பன முதலாகச் சான்றோர்கள் திருவாய் மலர்ந்ததற் கியைய, உலகத்தார் எல்லோரும் காணும்படி தகுதியுற்ற உயிர்களை ஆட்கொண்டு, அழுக்கு மிக்கிருக்கும் ஆடையை வெள்ளாவியில் அழுக்ககற்றித் தூயதாக்கி வெண்மையுறச் செய்யுமாறு போல, **தீக்கைகள்** முதலியன செய்து அவற்றின் வாயிலாக உயிர்களின் பாசங்கள் முறையே கழியும் வண்ணம் சிறந்த ஞானப் பொருள்களைச் செவியறிவுறுப்பான்.

அதன் பயனாக, உயிர்கள் தமது குற்றங்கள் எல்லாம் நீங்கித் தூய்மையுற்று, **நீரும் நீரும் கூடித்** தம்மில் ஒன்று சேர்ந்தாற்போல, இறையறிவும் உயிரறிவும் கூடி ஒன்று சேர்ந்திலங்கும். இதனையே சிறந்த பெரியவர்கள் எல்லோரும் முத்திகள் பலவற்றினும் விழுமிய நல்ல முத்தி என்று சொல்லுவார்கள்" எனத் தன் கொள்கைகளை ஐக்கியவாதி எடுத்துக் கூறினான். இவ் ஐக்கியவாதியின் கொள்கையினை,

" இன்மைமலம், மாயைகன்மம் என்றி
ரண்டே, இறைதான்
இலங்கும்பல உயிர்களும்முன் புரிந்தஇரு
வினையின்
தன்மைகளால் எவர்களுக்கும் தனுகரண
புவனம்
தந்திடும்; இங் கிதனாலே இருபயனும்
சார்ந்து

கன்மமெலாம் நேராக, நேராதல் மருவக்
கடவுள்அரு ளால்எவையும் கழித்திடுவன்;
அதனால்
பின்மலமா னவைஅணுகா, பெருகொளி
முன் புளதே
பெற்றிடும்; என் றித்திறம்என் பேசுமாறே?"

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுள், திட்ப நுட்பம்படத் தெளிவாகவும் சுருக்கமாகவும் அழகுறக் கூறியிருத்தல் ஈண்டு அறியற்பாலது.

ஐக்கியவாதி நிராகரணம் (4)

இங்ஙனம் ஐக்கியவாதி தன் சமயக் கொள்கைகளை எடுத்துக்கூற, அவனை அடுத்துப் பக்கத்தில் அமர்ந்திருந்த **பாடாணவாதி** எழுந்திருந்து, அவையிற்றை மறுத்துரைக்க முற்படுகின்றான்:

கட்டுநிலை மறுப்பு:

உயிர்கள் அநாதியிலே தூய்மையாகவும் அறிவாகவும் இருக்கும் என்றாய்!. அங்ஙனமாயின், அறிவாய்த் தூயவாயுள்ள உயிர்களைப் பாசங்கள் இடையே வந்து பொருந்துதற்கு ஏதும் வாயிலில்லை. மாயையினாலாகிய உடல் உயிர்களை வந்து பொருந்துமாயின், உயிர்களின் முன்னை நல்வினை தீவினைகளாகிய காரணங்களுக்கு ஏற்ப அன்றித் தானாகவே வந்து பொருந்தமாட்டாது. நல்வினை தீவினைகள் தாமும், ஒருடல் உளதாய் அதன்கண் அமைந்த மனமொழி மெய் என்னும் முக்கரணங்களால், உயிர்கள் செய்துகொள்ள உண்டாவனவன்றித் தாமே உண்டாகமாட்டா. ஆதலின், நீ கூறிய **மாயை கன்மம்** என்னும் இரண்டினுள்ளும் "விதை முன்னதோ டனைமுன்னதோ" என்றாற்போல உயிர்களை முன்னர்ப் பொருந்தியது எது? மேலும், "உள்ளது போகாது இல்லது வாராது" என்பது **சற்காரியவாதம்** எனப் பெயர் பெறும் அறிவியல்நூல் முடிபுகளுள் ஒன்றாதலின், மாயை கன்மம் என்னும் பாசங்கள் உயிர்களின்பால் இடையே வந்து பொருந்துதற்குக் காரணமாக 'மலம்' என்பதொன்று உயிர்களின் மாட்டு முன்னரே இருந்ததாதல் வேண்டும்! அங்ஙனம் மலம் என்பதொரு பொருளில்லை, மாயை கன்மம் என்னும் இரண்டு பாசங்கள் மட்டுமே தூய ஆடையில் அழுக்குப் படிந்தாற்போல, இடையே போந்து உயிர்களைச் சேர்ந்து நிற்கும் எனின்—காரணமின்றியே மாயை கன்மங்கள் இடையே போந்து உயிர்களைச் சேர்ந்து நிற்பின், கட்டுகள் நீங்கி வீடு பெற்றுள்ளார் மாட்டும் அவைகள் இடையே போந்து பொருந்துதல் வேண்டும் எனப்படும். அஃது இயைவதன்று!

அநாதியில் உன்னை விட்டு நீங்காமல் நிற்கும் மலத் தொடர்பை இந்த மாயா கருவிகள் வந்து நீக்க, அக்கருவிகளைக் கொண்டு உன்னுடைய அறிவு 'சுவையொளி யூறோசை நாற்றங்களை' அறிந்து வருவதனைக் கண்கூடாகக் கண்டு வைத்தும், மலம் என்பதொன்று இல்லை என்கின்றாய்? அம்மட்டோ! இவ்வுடலானது யாதொரு காரணமும் இன்றியே போந்து இயைந்தது என்றனை! அவ்வாறாயின், இவ்வுடம்பானது துயில் இன்றுழி, தன் அருகே ஒருபால் பாம்புகள் வந்து கிடப்பினும், ஒருபால் நவமணிகள் குவிந்து கிடப்பினும், அவற்றால் முறையே அச்சமும் ஆர்வமும் கொள்ளாமல் அறியாமை மிக்கிருப்பதென்னை? உறக்கத்தின்கண் எல்லாப் பொறிகளும் நீங்கி இருத்தலின் விருப்பு வெறுப்புக்கள் தோன்றிற்றில எனின்—பொறி புலன் முதலிய கருவிகள் எல்லாம் ஒன்றும் குறைவின்றி நிறைந்து நின்று அறிவு நல்க, அறிவானது இவ்வுடலின்கண் நின்று சுவையொளியூறோசை நாற்றங்களை நுகர்ந்தறியும் நிலையிலும், நினைந்தும் மறந்தும் பிறழவுணர்ந்து தடுமாறியும் நிற்கும் நிலைகளுக்குக் காரணம் யாது? இங்ஙனம் மயக்கம் நேர்தல் அறியாமை காரணமாக எனின்—"அறியாமை என நீ சொல்லியது மலம் என்பர் துணிந்துளோரே" எனப்படும்.

வீட்டுநிலை மறுப்பு :

ஆன்மா அறிவாகவே இருக்குமாயின், அது பின்னர் வேறு பிறிதோர் அறிவோடு சென்றுகூட வேண்டுவதில்லை. மேலும், வீடுபேற்று நிலையில் நீரும் நீரும் கூடினாற் போலப் பதியும் பசுவும் கூடி ஒளியாயிருக்கும் எனின்—இறைவன் முற்றறிவினன், உயிர் சிற்றறிவுடையது; இறைவன் என்றும் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன்; உயிரோ ஒரு காலத்தில் ஓரிடத்தின் மட்டுமே இருத்தற்குரியது; இறைவன் மலங்கள் இல்லாதவன், உயிர்கள் மலக்கட்டுடையன. எனவே, இறைவனையும் உயிர்களையும் ஒன்ருகிப்போம் என்று சொல்லுதல் அமையாது. பழமையாகத் தூய நிலையில் இருந்த உயிர்கள் தம்மால் எய்திய அழுக்குகள் நீங்கி, முத்தியில் சிவனோடு கூடி இன்பம் நுகர்ந்ததனைக் கண்டோமில்லை. ஆதலின், இறைவனும் உயிரும் 'நீரும் நீரும்போல' வீட்டுநிலையில் ஒன்ருய் ஒளியாயிருக்கும் என்றுரைக்கும் நினக்கும் 'குடாகாய மகாகாய உவமை' கூறி நின்னுல் மறுக்கப்பெற்ற மாயாவாதிக்கும் வேறுபாடு பெரிதும் இல்லை. 'சுற்றிப்போயும் சுங்கத் துறையில் வந்து கூடிய முறைமை' (கட்டகுடிப் பிரபாத நியாயம்) போலவே உன் செய்தியும் உளது! எனவே, திருவருளின் உண்மையை உணராத நீ அதனை யான் கூறக் கேட்பாயாக! எனப் பாடாணவாதி தன் கொள்கையினைக் கூறத் தொடங்குகின்ருன்.

சித்தியார் விளக்கம் :

இப்பகுதியின்கண், 'மலமென ஒரு பொருளில்லை' என்ற ஐக்கியவாதியைப் பாடாணவாதி மறுத்துரைத்து ஆணவ மலம் என்பதொன்று உண்டெனக் கூறிய கருத்தினை,

“மலமென வேருென் றில்லை,
மாயாகா ரியம தென்னின்

இலகுயிர்க்கு இச்சா ஞானக்
கிரியைகள் எழுப்பும் மாயை;
விலகிடும் மலம்இ வற்றை;
வேறுமன் றதுவே ருகி
உலகுடல் கரணம் ஆகி
உதித்திடும் உணர்ந்து கொள்ளே!”

என்பது முதலிய பாடல்களாலும்; ஆணவ மலத்தின் இயல்பினை,

“ஒன்றதாய், அநேக சத்தி
உடையதாய், உடனய், ஆதி
அன்றதாய், ஆன்மா வின்தன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று, போத் திருத்து வத்தை
நிகழ்த்திச், செம்பினிற் களிம்பேய்ந்து
என்றும்அஞ் ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே!”

எனவரும் பாடலாலும்; 'நீரும் நீரும் போல' என்னும் உவமை கூறிய ஐக்கிய வாதியின் கொள்கையினை மறுத்து, இறைவனோடு உயிர்களிடையுள்ள சாலப் பெரிய வேறு பாட்டினை,

“சிவன்சிவன் என்றிரண்டும் சித்து, ஒன்ரும் என்னில்,
சிவனருட்சித்து, இவன் அருளைச் சேரும் சித்து; அவன்தான்
பவங்கேடு புத்திமுத்தி பண்ணும்சித்து, இவற்றிற்
படியும்சித்து, அறிவிக்கப் படும்சித்தும் இவன்தான்;
அவன்தானே அறியும்சித்து, ஆதலினல் இரண்டும்
அணைந்தாலும் ஒன்ருகாது அநந்நியமாய் இருக்கும்!
இவன்தானும் புத்தியும் சித்து, இவனுமோ புத்தி?
இது அசித்தென் றிடில், அவனுக்கிவனும் அசித் தாமே.”

“உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக்குரியன்,
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே!”

என்னும் பாடல்களாலும் சிவஞான சித்தியார் தெளிவுற விளக்கிக் கூறியிருத்தல் கண்டறிந்து மகிழற்பாலது!

—ஆசிரியர்.

(தொடரும்)

மதிப்புரைகள்

(1) திரு அம்பர்ப் புராணம்: சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஒப்புயர்வற்றுச் சிறந்த மாபெருங் கவிஞர்பிரானாக விளங்கி யிருந்தவர் திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆவர்.

திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்பெற்ற சிறப்புடையதும், கோச்செங்கட்சோழ நாயனார் வழிபட்டதும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தோழர் ஆகிய சோமாசிமாற நாயனார் திரு அவதாரம் செய்து வாழ்ந்து சோமயாகம் புரிந்தருளியதும், ஆகிய திரு அம்பர் என்னும் பழம் பெருந் தலத்தைப் பற்றி அக்கவிஞர் பெருமான் பாடியருளிய புராணம் இது! இத் தலபுராணம் 15 படலங்கள் கொண்டது; 1007 பாடல்களால் அமைந்தது.

இதனைச் சென்னை திருவான்மியூர் 'மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தினர்,' அன்பியற் பெருந்தகையும் அருங்கலைப் புரவலருமாக விளங்கிவரும் நமது அறநிலைய ஆணையர் அவர்களின் தண்ணளி பெற்று, திருவம்பர்ப் பிரமபுரீசர் கோயில் அறங்காவலர்கள் முதலிய பெருமக்கள் பலரின் உதவி கொண்டு, அழகுறப் பதிப்பித்துள்ளனர் 'கலாநிதி விலாஸமணி' பேராசிரியர் திரு. R. விசுவநாதையர், M.A., B.O.L., அவர்கள், இதற்குக் குறிப்புரை-வசனம், நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கம் முதலியன எழுதியுள்ளார்கள். திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் இந்நூலுக்கு ஆராய்ச்சி முகவுரை ஒன்று வரைந்துள்ளார்கள். இந்நூலின் நைமிசாரணியப் படலத்தில் வரும் சக்கரம் சுழிகுளம் சருப்பதோபத்திரம் முதலிய பல சித்திர கவிகளுக்குத் தென்கலைச் செல்வர்—பெரும் பேராசிரியர்—பேரறிஞர் திரு. உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதி வைத்திருந்த சித்திரங்களும் இந்நூலிற் சேர்க்கப்பட்டிருத்தல், கற்போர்க்குப் பெரிதும் பயன்படுவதாகும். திருத்தமான நல்ல அழகிய சிறந்த பதிப்பு! விலை: ரூபா ஐந்து. கிடைக்குமிடம்: டாக்டர் உ. வே. சாமிநாதயர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை-14.

—ஆசிரியர்.

(2) மங்கையர்க்கரசியார் பிள்ளைத் தமிழ்: கவியரசு - வித்வான் - மதுரை ஆதீனச் செந்தமிழ்க் கவிமணி - கோவை திரு. து. நடேச கவுண்டர், P.O.L. அவர்கள், சிறந்த செந்தமிழ்ப் பெரும் புலவர்; அரும் பெருஞ் சைவ சித்தாந்த அறிஞர்; முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிஞர்; பக்தி நலமும் பண்பு நலமும் ஒருங்கே படைத்தவர்! எட்டிகுடி, சுவாமிமலை, திருச்சுழியல், பழநி முதலிய பல தலங்களுக்குப் பிள்ளைத்தமிழ் நூல்கள் பாடியிருப்பவர்கள்.

திருஞான சம்பந்தரையே தமது வழிபடுகுரவராகக் கொண்டொழுகி வரும் சைவநலம் சான்ற அப்பெருந்தகையார், இற்றைக்கு ஏறத்தாழ 25 ஆண்டுகட்கு முன்னரே இயற்றிய இலக்கிய நலங்கள் செறிந்த இந்நூல், மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் 291 ஆவது குருமகா சந்நிதானம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் வழங்கிய அருளாசியுடன் ஷை ஆதீனத்தின் சார்பில், மதுரை உதவி ஆணையர் திரு டி.எச்.விஸ்வ. கானந்தம் பிள்ளை அவர்களின் முயற்சியால், இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

பழம்பெருங் கவிஞர் பெருமக்களின் புலமை வளம் பொதுள, இயல்நெறி வழுவாமலும் இறைநெறி பிழையாமலும், சிறந்த முறையில் இயற்றப் பெற்றுள்ள இந்நூலின் ஒவ்வொரு பாடலுக்கும், பொழிப்புரை அருஞ்சொல்லுரை இன்றியமையா மேற்கோள் முதலியவை, தரப்பெற்றுள்ளன. செந்தமிழ் அறிவும், சிவநெறிப்பற்றும் உடைய அன்பர்கள் அனைவர்க்கும், இந்நூல் ஆராப் பெரு விருந்தாகும். விலை: குறிக்கப்படவில்லை. கிடைக்குமிடம்: திருஞானசம்பந்தர் ஆதீனம், தெற்கு ஆவணிமூல வீதி, மதுரை.

—ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

சென்னை திருவான்மியூர் மருந்தீசர் கோயிலில், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, அவர்தம் இளவல் திரு ச. நித்தியானந்தம் பிள்ளை ஆகிய இருவரின் திருப்பணியாக, அவர்களின் பொருட் செலவில் திருநீலகண்ட நாயனார் சிலை நிறுவிக் கும்பாபிஷேக விழாவும், நிகழ்த்தப் பெற்றது. தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், பேராசிரியர் 'கலாநிதி விலாஸமணி' திரு. ஆர். விசுவநாத ஐயர், M.A.B.O.L. அவர்களின் தலைமையில், 'திருநீலகண்டர்' வரலாறு பற்றி அரிய இனிய விரிவுரை ஆற்றினார்கள். சிவாலயங்களில் சிவனடியார்கள் ஆகிய அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் திருவுருவச் சிலைகள் அமைத்து வழிபட வேண்டிய கடமையைச் சுவாமிகள் பெரிதும் வற்புறுத்தி, 'சைவப் பெரியார்' அவர்களின் சிறந்த இந்தத் தொண்டினைப் பெரிதும் பாராட்டினார்கள். (2—2—1966).

—ஆசிரியர்.

திருப்பாவையில் ஆழ்வார்களின் திருப்பள்ளியெழுச்சி

மகாவித்வான் ஸ்ரீமத் P.B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்.

திருப்பாவைக்குத் தனியனயருளிச் செய்த பட்டர் "நீளா துங்கஸ்தநகிரிதடீஸுப்த முத்போத்ய க்ருஷ்ணம்" என்று * நப்பின்னை கொங்கை மேல் வைத்துக்கிடந்த மலர் மார்பனை கண்ணபிரானை ஆண்டாள் திருப்பள்ளி யுணர்த்தினதாகக் கூறினர். ஆனல் கண்ணபிரானைத் திருப்பள்ளியுணர்த்தின பாசுரங்கள் சிலவே. ஆய்ச்சிகளைத் துயிலுணர்த்தின பாசுரங்கள் பத்து. *புள்ளுஞ் சிலம்பினகாண்* என்கிற ஆறுவது பாசுரம் முதலாக *எல்லேயிளங்கிளியே* என்கிற பதினைந்தாம் பாசுர மீருகவுள்ள பத்துப் பாசுரங்களினல் பாகவதோத்தமிகளைத் திருப்பள்ளி யுணர்த்தியிருப்பது காண்கிறோம். பகவத் கீதை பத்தாமத்யாயத்தில் (9.) * மச்சித்தா மத்கதப்ராணு போதயந்த: பரஸ்பரம், கதயந்தச் ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச * என்ற சுலோகத்தில் "பரஸ்பரம் போதயந்த:" என்று பணித்தது பாங்காகப் பரிபாவிக்கப் பட்டபடி. எழுப்பவேண்டும்படி உள்ளே கிடப்பவர்கள் மச்சித்தா: என்றதற்கு இலக்கானவர்கள். வெளியிலே நின்று எழுப்புமவர்கள் மத்கதப்ராணு: என்றதற்கு இலக்கானவர்கள். இதற்குமேல் "போதயந்த: பரஸ்பரம்" என்றதற்கு இங்கு விஷயமில்லை போல் தோன்றும்; வெளியில் நிற்பவர்கள் மட்டுமே யெழுப்புவதனல் பரஸ்பர ப்ரபோதனமில்லையே யென்று நினைக்கக் கூடும். ஆழ்ந்து நோக்கினல் இதுவுமுண்டென்பது விளங்கும். இந்த பாகவதத் திருப்பள்ளி யெழுச்சியில் கடைப் பாசுரமான * எல்லே யிளங்கிளியில் பரஸ்பர ஸம்பாஷணை ஸுஸ்பஷ்டம். இது மற்ற ஒன்பது பாசுரங்களில் ஊஹித்தறியத் தக்கதென்று வ்யாக்யாதாக்களான பரமாசாரியர்கள் திருவுள்ளம்பற்றியிருப்பது காண்க.

இந்தப் பத்துப் பாசுரங்களாலும் ஆழ்வார்கள் பதின்மரும் எழுப்பப்படுவதாகக் கொள்வதிலே மிக்க ஔசித்யமுள்ளது. இரண்டு மூன்று நாற்றூண்டுகட்கு முன்பு வாழ்ந்தவொரு வானமாமலை ஜீயர்ஸ்வாமி தாம் பணித்த ஸ்வாபதேசவுரை யொன்றில் இந்த யோஜனையைக் காட்டியுள்ளார். ஆனல் அவர் ஆழ்ந்து உபபத்திகளை நிரூபியாமல் "பேய்ப் பெண்ணே! என்றிருப்பதனல் பேயாழ்வாரை யெழுப்புகிறது" என்ற ரீதியிலே எழுதியுள்ளார். தவிரவும் இங்கு எழுப்பப்படுவதாகக் கருதப்படுகிற ஆழ்வார்களுக்கு ஓர் அடைவும் கொண்டிலர். அது நிற்க. பாசுரம் பாடின ஆண்டாள் ஆழ்வார்கள் பதின்மரை யெழுப்புவதாகத் திருவுள்ளம்பற்றியிருந்தாளா? இன்ன பாசுரத்தினல் இன்ன ஆழ்வாரை யெழுப்புவதாகத் திருவுள்ளம் பற்றியிருந்தாளா? என்று ஆராயப் புகுவோமாயின் இது பயனற்ற ஆராய்ச்சியே யென்று தேறும். ஸ்ரீ ராமாயணஞ்சிலோகங்களுக்கு எட்டு அர்த்தங்கள் பத்து அர்த்தங்கள் ...பேராசிரியர்கள் பணிக்கக் காண்கிறோம் வேதாந்தவாசிரியர் தத்வடீகை தொடங்குகையில் "அகிலேத்யாதி பாஷ்யஸ்ய தசார்த்தாந் அபிதத்மஹே" [*அகிலபுவநஜந் மேத்யாதி ஸ்ரீ பாஷ்ய மங்களச்லோகத்திற்குப் பத்துப் பொருள்கள் பணிக்கிறேம் என்கிறர்.] இப்படி அவரவர்கள் பலபலவாகப் பணிக்கும் பொருள்களெல்லாம் மூலவக்தாக்கள் கருதியவைதானு? என்று கேட்டால் யார் என்னவிடை யிறுக்க முடியும்.

இந்த பாசுரத்தினல் இன்ன ஆழ்வார் திருப்பள்ளி யுணர்த்தப்படுகிறர் என்று ஒருவர் கூறினல், மற்றெருவர் 'அவ்வாழ்வாரல்லர்' இவ்வாழ்வாரே' என்னலாம். அதற்குரிய உபபத்திகளைக் காட்டிவிட்டால் ப்ராமாணிகர்களும் ரஸிகர்களுமானவர்கள் அஞ்ஜலி செய்யவும் தலை துலுக்கவும் ப்ராப்தமாகும். ஏதோ ஒன்றிரண்டு இரண்டு மூன்று பதங்களையோ வார்த்தைகளையோ கொண்டு "இவற்றுக்குச் சேர இவ்வாழ்வாரை நான் இப்பாட்டுக்கு இலக்காக நிர்ணயிக்கிறேன்" என்று ஒருவர் கூறினல், ஸர்வாத்மநா உபபந்நமான நிர்வாஹம் காண்கிற வரையில் அது ரஸ்யமாகலாம்.

திருப்பாவைப் பாசுரங்களில் ஆழ்வார்களின் நிர்ணயம்.

திருப்பாவையில் *புள்ளும் சிலம்பினகாண் தொடங்கி *எல்லே யிளங்கிளியே யளவும் பத்துப் பாசுரங்களினால் ஆழ்வார்கள் பதின் மரைத் திருப்பள்ளி யுணர்த்துவதான ப்ரஸ்தா வத்தை அடியோடு இசையாமல் "இது வீணான கல்பனை, அஸங்கதமான கல்பனை, அநாவச்யக மான ப்ரயாஸம்" என்று சொல்லிவிடுவதுண்டு. அப்படிப்பட்டவர்களைப் பற்றி நமக்கு ஏதும் விவக்ஷிதமில்லை. ஆழ்வார்களை யெழுப்புவ தென்கிற பத்ததியை அங்கீகரித்து விட்டால், அப்படி அங் கீகரிக்குமவர்கள் அடியேன் காட்டும் வழியையே தஞ்சமாகக் கொண்டு தீரவேண்டுமென்று, இதை அடியேன் கல்வெட்டாகச் சொல்லத் துணி கிறேன்.

ஆழ்வார்களின் அடைவு எங்ஙனே யிராநின்ற தென்னில்; ஆண்டாளுக்கு முன்னே எழுவரும் பின்னே மூவருமாகவுள்ளது. முன்னேயுள்ள எழுவரை பொய்கையார் பூதத்தார் பேயார் மழி சையர்கோன் மாறன் குலசேகரன் பட்டநாதன் என்கிற அடைவிலும், பின்னேயுள்ள மூவரைத் தொண்டரடிப்பொடிகள், திருப்பாண் பெருமாள், கலியன் என்கிற அடைவிலும் காண்கின்றோம். இவர்களைத் திருப்பள்ளி யுணர்த்தும் ஆண்டாள் எவ்விதமான அடைவைத் திருவுள்ளம் பற்றினா ளென்னில், தனது திருத் தந்தையாரும் ஆசாரி யருமான பெரியாழ்வாரை முதல்வராக்கி, அதன் பிறகு ஆரோஹணக்ரமத்தைக் கொண்டு குல சேகரர் காரிமாறன் மழிசைமன்னன் பேயார் பூதத்தார் பொய்கையார் என்னுமிவர்கட்குத் தான் கொண்ட அடைவு தப்பாமல் திருப்பள்ளி யெழுச்சிபாடி, [இவ்வளவோடு பன்னிரண்டு பாசுரங்களைத் தலைக்கட்டி] மேல் மூன்று பாசுரங் களாலே பிற்பட்ட ஆழ்வார்கள் மூவரையும் அவர்களது அவதார அடைவு தப்பாமல் முறையே திருப்பள்ளி யுணர்த்தியிருப்பதாக ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. 'இந்தப் பாசுரத்திற்கு இன்ன ஆழ்வார் தாம் இலக்கான வர்' என்பதை நிர்ணயிப்பதற்கு ஆண்டாள் ஒன்றிரண்டு சான்றல்ல, பலசான்றுகள் பொறித் திருக்கின்றாள். அவ்வவ்வாழ்வார்களின் சரித்திரம் காட்டுதல், அவரவர்களின் அஸாதாரணமான அனுபவங் காட்டுதல், அவரவர்களின் ஸ்ரீஸூக்தி கண்டங்கள் நினைவுக்கு வரும்படி செய்தல்... என்றிங்ஙனே பல சான்றுகளைப் பாசுரந்தோறும் அமைத்திருப்பது அற்புதமானது, மிகவாச்சரிய மானது. தெய்வவாக்குகளில் இப்படி அமைவது தெய்வ ஸங்கல்பத்தாலன்றி மநுஷ்யேச்சை யாலன்று.

வடமொழிக்கவிகளும் தென்மொழிக்கவிகளும் ச்லேஷயமகங்களை வைத்துக் கவிபாடுவர்கள். இரு பாஷையிலும் வெவ்வேறு விஷயங்களில் இரண்டு மூன்று நான்கு பொருள்கள் தோன்றும்படி பதப் ரயோகங்களைச் செய்வர்கள் நிபுண கவிகள். ஆனால் இத்தகைய பிரயோகங்கள் ஆலோசித் தாலோசித்து புத்தி பூர்வமாகச் செய்யப்படுமவை. அப்படியல்லாமல், 'என்னைக் கொள் என்னைக் கொள்' என்று பொருள்கள் மிடைந்து மிளிரும் படி திருவாக்குக்கள் அமைந்தால் அது தெய்வ வாக்கேயாம், அதுதான் தெய்வவாக்கு. *புள் ளுஞ்சிலம்பினகாண் முதல் * எல்லேயிளங்கிளி வரையிலுள்ள பாசுரங்களினால் உணர்த்தப்படு கின்ற ஆழ்வார்கள் பதின்மரைப்பற்றின விவ ரணம் அடியேனுடைய திவ்யார்த்ததீபிகைப் பதிப்பொன்றில் ஏற்கெனவே வெளிவந்திருந் தாலும் ஸம்க்ஷேபமானவதனால் ரஸிகர்களுக்குப் பரிபூர்ணத்ருப்தி பிறவாதென்று கருதி இப்போது ஸம்க்ஷேபருசியை விட்டுச் சிறிது விரிவாகவே விளக்கி யமைக்கின்றேன். மேல் வரும் பத்து விளக்கங்களும் அடைவே நோக்கத்தக்கன.

அலங்கார சாஸ்த்ரத்தில் முத்ராலங்காரமென் பதொன்று. "ஸூச்யார்த்த ஸூசநம் முத்ராம் ரக்ருதார்த்தபரை: பதை:" என்பது அதன் லக்ஷணம். ஸூசிப்பிக்க வேண்டிய விஷயத்தை ஸூசிப்பிக்கும் சொற்கள் முன்னும் பின்னும் ஒழுங்காக அந்வயித்தாகவேண்டுமென்கிற நிர்ப் பந்தமில்லை. அவ்வோபதங்கள் தனித்தனியா கவே நின்று ஸூசிப்பிக்கவேண்டிய விஷயத்தை ஸூசனை செய்யக் குறையில்லை. இந்த முறை ஸம்ஸ்க்ருத காவியங்களில் விசேஷமாகவுண்டு. இனி பத்துப் பாசுரங்களுக்கும் ஆழ்வார்கள் பர மான பொருளின் பொருத்தங்களை விவரிக்கிறேன்.

புள்ளுஞ்சிலம்பினகாண்—பெரியாழ்வார்

புள்ளும்சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்*
வெள்ளைவிளிசங்கின்பேரரவம் கேட்டிலையோ*
பிள்ளாய் ! எழுந்திராய் பேய்முலைநஞ்சுண்டு*
கள்ளச்சகடம் கலக்கழியக்காலோச்சி*
வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்தினை*
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும்யோகிகளும்*
மெள்ளவெழுந்து அரியென்றபேரரவம் *
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். (6)

பாகவதோத்தமர்களை யெழுப்பும் பத்துப் பாசுரங்களில் முதற் பாசுரமான விது பெரியாழ்வாரை யுணர்த்துகின்றதென்பது பாட்டிலுள்ள எட்டடிகளாலும் மூதலிக்கப்படுகின்றது. முதலில் இப்பாட்டிலுள்ள விளியைக் கொள்வோம், பிள்ளாய்! என்பது விளி. அறிவில்லாதவளே! என்பது இதன் பொருள். *ப்ராஹ வேதாந் அசேஷாந்* என்றும் * வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்* என்றும் மஹாஜ்ஞான நிதியாகப் புகழப்பட்டவிவரை அறிவில்லாதவரே! என்றழைப்பது பொருந்துமோ? மஹாபசாரமாகாதோ? என்று சங்கிக்க நேரும். இவர்க்குப் பெரியாழ்வாரென்று திருநாமம் ப்ரஸித்தமானதற்கு எது ஹேது? என்று ஆராயுமளவில் "மங்களாசாசனத்தில் மற்றுள்ள வாழ்வார்கள் தங்கள் ஆர்வத்தளவு தானன்றிப்— பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான், பெரியாழ்வாரென்னும் பெயர்" என்கிற உபதேசரத்தினமாலைப் பாசுரத்தினால் மங்களாசாஸனத்திலுண்டான அபிநிவேசந்தான் ஹேதுவென்று தேறுகிறது. *மங்களாநாஞ்ச மங்களம்* என்றிருக்கிற எம்பெருமானுக்கு இவர் மங்களாசாஸனம் பண்ணப்புகுவது பொருந்துமோ? என்று தோன்றுகிற சங்கைக்கு நம் பூருவாசாரியர்கள் என்ன பரிஹாரம் செய்தருளினார்களென்றால், "ஜ்ஞான விபாககார்யமான அஜ்ஞானத்தாலே வருமவை யெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்கிற ஸ்ரீ வசநபூஷண சூர்ணையினால் அதையுணரலாம். எம்பெருமானுடைய ஞானம், சக்தி, சௌர்யம், வீர்யம், பராக்ரமம் முதலான திருக்குணங்களில் அஞ்ஞான முண்டாகியே மங்களாசாஸன ப்ரவ்ருத்தி விளைகின்றது. அவனுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களில் மட்டும் கண்ணைச்செலுத்தி ஜ்ஞானசக்தியாதிகளை மறந்ததனால்தான் அத்தலைக்கு ரக்ஷையிடுவதாகிற மங்களாசாஸனம் செய்யப்ராப்தமாகிறது. மறதியென்பது அஜ்ஞானப்ரபேதமே யாதலால் இந்த அஜ்ஞானமே காரணமாகப் பெரியாழ்வார் பிள்ளாய்! என அழைக்கப்பட்டார். நம்மைப்போல ஆழ்வாரும் அஜ்ஞானியா? என்று வினவலாகாது. நம்முடைய அஜ்ஞானம் கர்மநிபந்தன மாகையாலே ஹேயம். ஆழ்வாருடைய அஜ்ஞானமானது 'ஜ்ஞானம் மிக முற்றி அஜ்ஞானமாகப் பரிணமித்தது' என்னும் படி விளைந்ததாதலால் ஹேயமன்று, பரமோபாதேயம். ஆகவேதான் "ஜ்ஞானவிபாக கார்யமான அஜ்ஞானம்" என்று ஸ்ரீவசநபூஷண ஸூக்தியுள்ளது. ஆக, பிள்ளாய்! என்கிற விளி மங்களாசாஸன பரதையையிட்டுப் பெரியாழ்வார்க்கே பொருந்தும்.

பிள்ளாய்! என்பதற்கு மற்றொருவகையாகவும் பொருள் கூறலாம். ப்ருஹதாரண்யக உபநிஷத் (5-5-1) "தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத்" என்று ஓதியிருக்கின்றது. 'பரிபூர்ண ஞானத்தைப் பெற்று பால்யத்தோடு இருக்கவேணும்' என்றது. இதன்பொருளை சாரீரகமீமாம்ஸையில் [ப்ரஹ்ம ஸூத்ரத்தில்] 3-4-49) * அநாவிஷ்குர்வந் அந்வயாத் * என்கிறஸூத்ரம் விவரிக்கின்றது. ப்ரஹ்ம வித்யையை அதிகரித்தவன் தன்னுடைய மாஹாத்மியத்தை வெளிப்படுத்தாமல் [செருக்குக் கொள்ளாமல்] இருக்கவேண்டுமென்பதே 'பால்யேநதிஷ்டாஸேத்' என்பதற்குப் பொருள் என்றதாயிற்று. அநாவிஷ்கார ரூபமான பால்யமே உபநிஷத் விவக்ஷிதமென்றபடி. பெரியாழ்வாரிடத்தில் இத்தகைய பிள்ளைத்தன மிருந்ததென்று கொண்டு பிள்ளாய்! என விளித்ததாகக் கொள்ளலாமாயினும் முன்னம் விவரித்த பொருளே மிகநன்று. இனி முதலடியே தொடங்கிப் பெரியாழ்வார்க்கான பொருத்தங்கள் கேண்மின். [புள்ளும் சிலம்பினகாண்] பொழுது விடிந்தமைக்குச் சொல்லப்படுமடையாளங்களில் இது முதன்மையானது. ஒருத்தியை யெழுப்பும்போது

சொல்லுமடையாளத்தை மற்றொருத்தியிடம் சொல்லுவதில்லை. ஆனால் இந்த ஓர் அடையாளம் மட்டும் மறுபடியும் மேலே (13.) * புள்ளின்வாய் கீண்டானை * என்கிற பாட்டிலும் சொல்லப்படுகிறது—* புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய் * என்று. இதற்கென்ன காரணமென்னில்; அந்தப் பாசுரம் தொண்டரடிப்பொடியாழ்வாரைத் திருப்பள்ளி யுணர்த்துவது. இப்பெரியாழ்வாரும் அவரும் நந்தவனத்திலேயே வாழ்ந்தவர்கள். * புலம்பின புட்களும் பூம்பொழில்களின் வாய் * என்கிற திருப்பள்ளியெழுச்சியிற் பாசுரத்தின்படி பறவைகள் சிலம்புவது பொழில்களிலே யாதலால் இவ்வாழ்வார்களிருவரும் பொழிலிடத்தே வாழ்ந்தவர்கள் என்பதைக் காட்டவேண்டியே இங்கும் அங்கும் 'புள்ளுஞ் சிலம்பினகாண்' என்றருளிச் செய்தது. "சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞான கர்மங்களைச் சிறகென்று குரு ஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்யஸ்தானே பேசும்" என்ற ஆசார்யஹ்ருதய சூர்ணையின்படி ஆழ்வாருடைய ஆத்ம பந்துக்கள் உணர்ந்தபடியைக் கூறினவாறு. பறவைகளென்கிற இயற்பொருளே போதுமானது.

[புள்ளரையன்] — பக்ஷிராஜன் என்றபடி. பெரியாழ்வாருடைய த்யானச்லோகம் "வைநதேயாம்சஸம்பூதம் விஷ்ணுசித்த மஹம்பஜே" என்று ப்ரஸித்தமானது. புள்ளரை யனுடைய அம்ச பூதர் இவ்வாழ்வார். நாச்சியார் திருமொழியில் "செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்று ஆண்டாளருளிச் செய்த பாசுரத்திற்கு அந்தரங்கமான பொருளொன்று சொல்லிப் போருவதுண்டு; மெய்ம்மைப் பெருவார்த்தையாவது கீதையின் ஸாரமான சரமச்லோகம். அது திருத்தேரிலே நின்று உபதேசிக்கப்பட்டது. அந்தத் தேரானது கருத்மானே வடிவெடுத்த தென்பர். கருத்மதம்சமான பெரியாழ்வார் அந்த மெய்ம்மைப் பெரு வார்த்தையைக் கேட்டிருக்க ஔசித்ய முண்டன்றோ? ஆக இதனால் பெரியாழ்வார் புள்ளரையனுடைய அம்சபூதரென்பது ஆண்டாள் திருவுள்ளத்தில் உறைந்துள்ள தென்பதறியலாம்.

[கோயில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?] கோயிலென்பது கோ - இல் என்று பிரியும்; கோ-அரசன்; அவனுடைய இல் (பாண்டிய ராஜ) ஸபாமண்டபம்; அதில் பெரியாழ்வாருக்காகச் சங்கின் பேரரவம் உண்டானது உலகமறிந்ததேயன்றோ. "பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ஈண்டிய சங்க மெடுத்தூத" என்கிற தனியனை யறியாதாருண்டோ? தவிர, இங்கே ஒரு பெரிய விசேஷமுண்டு. 'வெள்ளை விளி சங்கு' என்கிற சொல் தொடர் பெரியாழ்வார் திருவாக்கில் தான் அவதரித்துள்ளது. பெரியாழ்வார் திருமொழி (4-1-7) "வெள்ளை விளி சங்கு வெஞ்சுடர்த் திருச்சக்கரமேந்து கையன்" என்கிற பாசுரங் காண்க. தனிப்பட்ட ஒன்றிரண்டு சொற்களாலே அது குறிக்கொள்ளத் தக்கதன்று. மூன்று சொற்கள் சேர்ந்து விட்டால் அந்த சொற்சேர்த்தி ஒருவர்க்கு அஸாதாரணமாகக் கொள்ள வேண்டிவரும். ப்ரணம் என்கிற வொரு பதத்தை யாரும் சொல்லலாம்; ப்ரணம் லக்ஷ்மணமுநி என்றால் இது இன்ன ஆசாரியருடைய வாக்கு என்று வெளியாகிவிடும். இவ்வண்ணமாகவே. வெள்ளை விளி சங்கு என்கிற சொல் தொடர் செவிப்பட்ட வுடனே பெரியாழ்வாருடைய நினைவு உண்டாகியே தீரும். இப்பாட்டுக்குப் பெரியாழ்வார் தாம் விஷய பூதர் என்கைக்கு இதுவும் ஒரு முக்கியமான கமகம்.

[பேய்முலை நஞ்சுண்டு] ஸ்ரீக்ருஷ்ணாவதார சேஷ்டிதங்களை யெல்லாம் கொள்ளை கொள்ளையாக அநுபவித்தவர் * போகத்தில் வழுவாத புதுவையர்கோன் ஒருவரே. அவர் முதன் முதலாக அநுபவித்த கிருஷ்ண சேஷ்டிதம் எது வென்றால் பேய்முலை நஞ்சுண்டது தான். பெரியாழ்வார் திருமொழியில் முதற் பதிகமான * வண்ணமாடம் திருவாய்ப்பாடியின் கோலாஹலங்களைப் பேசுவது. இரண்டாம் பதிகமான * சீதக்கடலில் தான் சேஷ்டித வர்ணந-உபக்ரமம். அதில் நான்கு பாசுரங்களில் ஒரு சேஷ்டிதமும் அநுபவிக்கப் படவில்லை. ஐந்தாம் பாட்டு—* பிறங்கிய பேய்ச்சி முலை துவைத்துண்டிட்டு *. இதில் பேய்முலைநஞ்சுண்ட கதைதான் முற்பட்டிருப்பது. [கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி]. அந்த சீதக்கடற் பதிகத்திலேயே * நாள்களோர் நாலைந்து பாசுரத்திலே சகடபங்கம் பூதநாவதம் ஆகிய இரண்டு சேஷ்டிதங்களையும் சேர்த்து அநுபவிக்

கிறுர். ஆக இதனுலும் பெரியாழ்வார் திடப் படுவர். இதற்குமேல் [வெள்ளத்தரவில் துயில மர்ந்த வித்தினை உள்ளத்துக் கொண்டு] என்றது பெரியாழ்வாரைத் தவிர மற்ருெருவரைத் தொடாது. இவ்வாழ்வார்தாம் * பனிக் கடலிற் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடி வந்தென் மனக்கடலில் வாழவல்ல * என்றும் *அரவத்தமளியினோடும் அழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையுந் தானும் அகம்படி வந்து புகுந்து, பரவைத்திரை பலமோதப் பள்ளி கொள்கின்ற பிரானைப் பரவுகின்ருன் விட்டுசித்தன் *என்றும் அருளிச்செய்து, தம்மை 'வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை யுள்ளத்துக் கொண்ட முனிவராக'ப் பேசி வைத்தவர். இது மிகமிக முக்கியமான சான்று [முனிவர்களும் யோகிகளும்] முனிவரென்ருலும் யோகியென்ருலும் பர்யாயம்போல் தோன்றும். "குணுநுபவ நிஷ்டரும் கைங்கர்ய நிஷ்டரும்" என்று ஆசாரியர்கள் வாசிகாட்டி யருளுகிருர்கள். குணுநுபவ நிஷ்டையும் கைங்கர்ய நிஷ்டையுமுள்ளவர் பெரியாழ்வார். பாசுரங்கள் பாடின முகத்தால் குணுநுபவநிஷ்டராயினர். *வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்த மஹாதனத்தைக் கொண்டு ஸ்ரீ வில்லிபுத்தூரில் ப்ராகார கோபுர மண்டபாதி நிர்மாணங்களை நிர்வஹித்தருளினவராதலால் கைங்கர்ய நிஷ்டருமாயினர்.

[மெள்ளவெழுந்து] * அல்வழக்கொன்று மில்லாவணி கோட்டியர்கோனுன செல்வநம்பியின் ப்ரோத்ஸாஹனத்தினுல் மதுரையில் வல்லபதேவராயனென்னும் பாண்டியர்கோன் வித்வத் ஸபை திரட்டமுயன்றபோது வடபெருங்கோயிலுடையான் இந்த விஷ்ணுசித்தருடைய கனவிலே காட்சிதந்து எழுப்பி 'நீர்போய் பரதத்வஸ்தாபனம் பண்ணிக் கிழியறுத்து வாரும்' என்று நியமித்ததாகவும், 'அதற்கு அடியேன் அர்ஹனல்லேனே' யென்று இவர் சொன்னதாகவும், அதுபற்றி உமக்கென்ன விசாரம்? என்று பெருமாள் கூற, அதன்மேல் 'அந்தோ! நமக்கு நிலமல்லாத காரியத்தை நியமிப்பதே! என்று ஆயாஸத்தோடு சயனத்தை விட்டெழுந்ததாகவும் சரித்திரமுள்ளது. இங்கு மெள்ளவெழுந்து என்றதனுல் அது நினைவூட்டப் படுகிறது. [அரியென்ற பேரரவம்] இவ்வாழ்வார் ராஜஸபையில் சென்று என்ன பண்ணினுர்? * ப்ராஹ வேதாந் அசேஷாந்—வேண்டிய வேதங்களோதினுர். * வேதம் தொடங்குவதற்கு முன்னே என்ன சொல்லுவது? ஹரி: ஓம்' என்று சொல்லுவது. அதைச் சொல்லாமல் வேதம் சொல்லலாகாதன்ருே. அதைக் காட்டுகிறது ஹரியென்ற பேரரவமென்று. இத்தனை பொருத்தங்கள் மற்ருேராழ்வார்க்கு இப்பாசுரத்தில் கிடைக்க வழியில்லை. இவ்வாழ்வார்க்கு மற்ருெரு பாட்டில் இத்தகைய வாய்ப்புகள் கிடைக்க வழியுமில்லை. மேல் ஒவ்வொரு பாட்டிலும் அடியேனது நிருபணம் இத்தகைத்தே. ... ... (169.)

"If Latin is the language of law, Hebrew the language of ethical religion, Sanskrit the language of philosophy, English, French and German are the languages of science, **Tamil** is the language of the poetry of Divine experience."

—*Prof. T. P. Meenakshisundaranar.*

(வெண்பா)

சட்டத்தில் லத்தீனம்; சால்பறத்தில் ஈப்ருவம்
தட்பமிகு தத்துவத்தில் சம்ஸ்கிருதம்;—நுட்பமிக
ஆன்ற அறிவியலில் ஆங்கிலம், ஜெர் மன், ப்ரெஞ்ச்போல்
சான்றஇறை மாண்பில் தமிழ்

—மொழி பெயர்ப்பு, ஆசிரியர்.

சிவஞான போதம்

(திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., காஞ்சிபுரம்)

12–ஆம் சூத்திரம் :

4 ஆம் அதிகரணம் :—

மெய்யுணர்ந்து முதற் பொருளைத் தலைப்பட்டு இன்புறும் சிவன் 'முத்தர் உலகமுகப்பட நேரின், தம்பால் தன் முனைப்பு நிகழாதபடி காத்துக் கொள்வர்; தம்மை ஒத்த மெய்யன்பர் கூட்டுறவை விரும்பி மேற்கொள்வர்; திருவேடத்தையும் திருக்கோயிலையும் முதல்வனே எனத் தெளியக் கண்டு தொழுவர் என்பவை பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் முதல் மூன்று அதிகரணங்களில் கூறப்பட்டன.

சூத்திரத்தில் வரும் ''**தொழுமே**'' என்னும் வினைமுற்று '(சிவன் முத்தன்) தொழவே செய்வான்' என, வினை நிகழ்ச்சியை உணர்த்தும் சொல்லாக (Verb in the indicative mood) உள்ளது. ஆயினும், பதப் பொருள் பற்றிக் கூறப்படும், 'சிவ பக்தர்களோடு இணங்குக' எனவும், 'திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக் கண்டு வழிபடுக' எனவும் விதிப் பொருள் தோன்ற வியங்கோள் வினைமுற்றுக்கள் (Verbs in the subjunctive mood implying imperativeness ஆளப்பட்டுள்ளன. அவ்வாறு விதிப்பொருள் தோன்ற உரைத்ததன் கருத்தை விளக்க எழுவது நான்காம் அதிகரணம். இது முன் அதிகரணங்களின் **ஒழிபு** எனப்படும்; முன் கூற இடமின்றித் தள்ளிவைக்கப்பட்டது என்றபடி.

இவ்வதிகரணத்திற்கு மூலமாக உள்ள சூத்திரப் பகுதி :—

''மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே''

என்றதில், இறுதியில் உள்ள தேற்ற ஏகாரம் தொழவே செய்வான் தொழுவது நிச்சயம் என்ற தேற்றப் பொருளால், (Emphasis) அங்ஙனஞ் செய்வது சிவன் முத்தனுக்கு இன்றியமையாது வேண்டப்படும் கடமை என்னும் விதிப்பொருள் உணரப்படும் என்பது ஆசிரியர் கருத்து.

வார்த்திகம் ;—'' இனி இவ்விடங்களின் வழிபடுக என்றது, நரம்பு, நாடி முதலானவற்றைத் தான் அதுவாய் வரும் புருடன் அவை ஆகாதவாறு, அப்புருடனும் ஆகலான்''.

உயிர் உடம்பாயும் அதற்கு வேறாயும் நிற்றல் போல, முதல்வன் உயிரோடு ஒன்றாயும் வேறாயும் நிற்றலால் திருவேடம் சிவாலயம் என்றவற்றின் சிவன் வேறு என்னும் உணர்வு உள்ளபோது அவ்விடங்களில் வழிபாட்டை ஒருவன் செய்யாதொழிதல் கூடும். ஆதலால் அவ்வாறு எண்ணி வழிபடாதிருத்தல் தவறு என்று உணர்த்துதற்கு, இவ்விடங்களில் வழிபாட்டைச் செய்வான் என வினைநிகழ்ச்சியைத் தெரிவிக்கும் வாய்பாட்டால் உரையாது, **வழிபடுக** என விதிப்பொருள் தோன்ற உரைக்கப்பட்டது என்பது கருத்து. 'வழிபடுக' என்ற சொல்லின் ஈற்றை எடுத்தல் ஓசையோடு படிக்க வேண்டும்.

கூறப்படும் பொருள் : சிவவேடம் பூண்டாரிடத்தும் திருக்கோயிலின் கண்ணும் சிவனைக் கண்டு தொழுதல் சிவன் முத்தனுக்குத் தவிர்க்க ஒண்ணாத கடமை ஆகும்.

ஐயப்பாடு :— இவ்வழிபாடு தவிர்க்கப் படாததோ? தவிரவும் படுமோ?

பிறர் கூறும் பக்கம் :— இவ்வழிபாடு சிவன் முத்தனுக்கு இயல்பாக அமையும்

இலக்கணம்; ஆதலால் இதனைச் செய்ய வேண்டுமென விதித்தல், எய்திய ஒன்றையே எய்துவித்தலாகிய பயனில் செயலாம்; மேலும் வழிபாடு என்பது ஞானத்தின் சாதனம் எனப்பட்ட கிரியையே ஆகும். "கிரியை என மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்பது பிரமாணம். சாத்தியமாகிய ஞானத்தைப் பெற்றுவிட்ட சிவன் முத்தனுக்குச் சாதனமாகிய கிரியை எதற்கு? வேண்டா என்பதே துணிபு.

சித்தாந்தத் துணிபு :— விதிகள் மூன்று வகைப்படும். எய்தாததனை எய்துவிப்பது (அபூர்வ விதி, எய்தியதனை இகந்து படாமற் காப்பது (நியம விதி), எய்தியதனை ஒரு மருங்கு மறுப்பது (பரிசங்கியா விதி) என. அவற்றுள் இஃது எய்தியதனை இகந்து படாமற் காப்பது. இதனை விளக்குவோம். உயிரும் உடம்பும் வேறே; ஆயினும், உயிர் உடலில் கலந்து நிற்றல் பற்றி, தான் அதுவே என்னும்படி செயற்படும். அஃது அவ்வாறு உடம்பாய் வரும் காலத்தில் உடம்பைப் பேணிக் காத்து அணிசெய்தல் காணப்படும். அவ்வாறன்றித் தன்னை அதற்கு வேறு என்று உணர்ந்து நிற்கும்போது, "மற்றுந் தொடர்ப்பாடு எவன் கொல்? பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை" என்றபடி, உடம்பைப் பொருட்படுத்திக் காக்கும் முயற்சி இராது. அதுபோல, முதல்வன் எல்லாமாய் நிற்கும் இயல்பைக் கருதும்போது ஒருவன் திருவேடத்தின் கண்ணும் திருக்கோயிலின் கண்ணும் அன்பு செய்து வழிபடுதல் கூடும். மற்று அவன் அல்லனாய் நிற்றலைக் கருதும்போது அவ்விடங்களில் வழிபடுதல் தவிர்க்கப்படும். ஆதலால், அப்போதும் அவ்வழிபாட்டைத் தவிராது மேற்கொள்ளுதற் பொருட்டு "இவ்விடங்களில் வழிபடுக" என விதிக்கப் பட்டது. "அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை; அதனை மறத்தலின் ஊங்கு இல்லை கேடு" என வலியுறுத்தியது போல இதனையும் கொள்க. எனவே, இங்குக் கூறப்படும் பொருள் அணைந்தோர் தன்மையாய்ப் பெறப்படுவதாயினும், அஃது எக்காரணம் பற்றியும் தவிராதபடி காப்பது, இவ்வதிகரணத்தின் நோக்கு என உணர்தல் வேண்டும்.

விருந்தோம்பல் முதலிய உலக அறங்களும். வேள்வி முதலியனவும், முதல்வனின் உண்மையியல்பை நினைப்பியாதவையாய் வேறிடங்களைப் பற்றி நிகழ்வன. அவை போலாது இங்கு விதிக்கப்படும் வழிபாடு எப்பொழுதும் முதல்வனையே நினைப்பித்து அவற்றின் உண்மையியல்பைத் தலைப்பட்டு உணர்ந்தின்புற வைக்கும் அருமருந்தன்ன சாதனமாம்; இது மெய்யுணர்ந்தாரை அவர் உலக முகப்படும்போது பிராரத்த வாதனை பற்றி முதல்வனை மறவாதபடி காத்துப் பேரின்ப நிலையில் மீளக்கொண்டு செலுத்துவது. இருளைத் துரக்கும் பேரொளிபோல், இவ்வழிபாடு பிராரத்த வாதனையைத் துரப்பது. ஆதலால் இது சிவஞானிக்கு இன்றியமையாது கடைப்பிடித்தற்கு உரியதாம்; என்றும் விடற்பாலதன்று.

அங்ஙனமாயின், முதல்வன் எப்பொருட்கண்ணும் எல்லாமாய் நிற்றலின், அவற்றுள் சிவாலயத்தையும் சிவ வேடத்தையும் மட்டும் பிரித்து, வழிபடும் இடங்களாக ஏன் கொள்ள வேண்டும் எனின், பசுவின் பால் அதன் உடம்பில் எங்கும் இருப்பினும், அதன் மடியினின்று மட்டுமே கொள்ள வெளிப்படுகிறது. அதுபோல, முதல்வனும் எல்லாப் பொருள்களிலும் அவையே தானேயாய் நிற்பினும் இவ்விரண்டிடங்களின் மட்டும் விளங்கித் தோன்றிப் பேரன்பை விளைவிக்கின்றான். ஆதலால், அத்துவித ஞானம் நிலைபெறுதற் பொருட்டு அவனைத் தொழும் இடம் இவையேயாம். பாலை அருந்துவோர் பனையின் கீழிருந்து அருந்த விரும்பார்; அதுபோலத் தூய முதல்வனைத் தொழுதற்கு உரிய இடமும் தூயதாய், அவனை நினைப்பிக்கும் குறியாய் அமைதல் வேண்டும். "தாபத்திடத்தே தழன்றிடினும் நற்சோதி தீபத்திடத்தே சிறப்பு" என்ற நீதிஉரை ஒத்து நோக்குதற்கு உரியது. இக்கருத்தைத் தருவது பின்வரும் வெண்பா;—

அதுஇது என்ற (து) அது அல்லான்
கண்டார்க்(கு)
அதுஇது என்றதையும் அல்லான்—
பொதுவதனில்
அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே;
அத்துவிதி அன்பில் தொழு.

இவ்வெண்பாவின் முதன்மையான பாகம், "பொதுவதனில் அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே; (ஆயினும்) அத்துவிதி அன்பில் தொழு" என்பது.

முதல்வன் எல்லாப் பொருள்களிலும் பேதம் எனவோ, அபேதம் எனவோ ஒருதலைப்படக் கூறப்படாதபடி இரண்டிற்கும் பொதுவாய், இருதிறப்பட்டுக் காணுதபடி ஒன்றின் நிற்றலால், எல்லாம் அவன் மயமே (அகண்டமும் தைவமே); ஆயினும் அவ்வத்துவித இயல்பை உள்ளவாறு உணர்ந்த நீ, அவ்வுணர்வு நிலை பெறுவதற்கு, எந்த இடத்து இயல்பாக அன்பு தோன்றுமோ அவ்விடத்தில் தொழுக என்பது இப்பகுதியின் பொருள்.

பாட்டின் முன்பகுதி **அத்துவிதம்** என்றதன் கருத்து விளங்குதற் பொருட்டு, அதனைப் பிற கருத்துக்களினின்றும் வேறுபடுத்திக் காட்ட எழுந்தது. முதல்வன் உலகோடு, **அதுவும் இதுவும்** என்று வேறுபட உணரும் இயல்பினன் அல்லனாய், **அது(வே) இது** என்று ஒன்றே எனப்படும் இயல்பினனும் அல்லனாய், **அதுவாகிய இது** (கரிதாகிய குதிரை என்பது போல) என்று குணிகுணித் தன்மை தோன்ற விசிட்டம் எனப்படும் நிலையனும் அல்லனாய் உளன் என்பது, அப்பகுதியின் பொருள்.

"ஏ நல்லோய்! இது முதற்கண் சத்தாகிய (உள்ளது) ஒன்றே ஆக இருந்தது; அஃது அத்விதீய பிரமம்" என்னும் உபநிடதத் தொடரில் வரும் அத்விதீயம் என்னும் சொல்லின் பொருளை முன்னர் இரண்டாஞ் சூத்திரத்தில் விளக்கியருளினார் ஆசிரியர்; ஒருவன் முதல்வனை உணரும் மெய்யுணர்வும் அதன் பயனும் அவனுக்கு முதல்வனோடு உள்ளதாகிய தொடர்பை (அல்லது உறவை)ப் பொறுத்தே அமையும். ஆதலால், அத் தொடர்பைக் கூறும் அத்வைதம் என்னும் சொல்லின் பொருளை முடிந்தது முடித்தலாக (நிகமனம்) இந்த வெண்பாவில் ஆசிரியர் தெரித்துணர்த்துகின்றார் என்பது மனங்கொள்ளத் தக்கது. முதல்வனுக்கு உலகு உயிர்களோடு உள்ள தொடர்பு, பொன்னும் அதனால் ஆகிய ஆபரணமும் போலக் கொள்ளப்படும் கேவலம் ஒன்றாதல் (அபேதம்) அன்று; இருளும் ஒளியும் போலப் பிரிந்து வேறு வேறு நிற்கும் நிலையாகிய பேதமும் அன்று; வெண்ணிலா என்பதில் வெண்மையும் நிலவும் பொருளால் ஒன்றேயாய் ஒருவகையால் இரண்டாகக் குறித்து உணரப்படும் ஒருமையுள் இருமை (பேதாபேதம்)யும் அன்று; பின்னர், பொருளால் இரண்டேயாய் ஒற்றுமைப்பட்டு நிகழ்தல் பற்றி ஒன்றே என்றற்கு உரியதாய் உள்ள, அத்துவிதம் எனப்படும் உடனிலைப் புணர்ப்பாகிய இருமையின் ஒருமை ஆதும் என்னும் பரம சித்தாந்தத்தை வலியுறுத்துவதற்குப் "பொதுவதனில் அத்துவிதம் ஆதலால்" என ஆசிரியர் இவ்வெண்பாவில் விளக்கியுள்ளார்.

அத்வைதம் என்னும் ஆரியச்சொல் தமிழ் மொழியில் மெய்யெழுத்துக்கள் கலந்து நிற்கும் விதி பற்றி **அத்துவிதம்** என்னும் வடிவில் வழங்கப்படும். த்வி-இரண்டு; த்விதா-இருமை அல்லது இருதிறன்; அத்வைதம்-இருதிறன் இல்லது, வேறுபட்டு நிற்றல் இல்லது, அந்நிய நாஸ்தி என்பதே அச்சொல்லின் இயல்பு. எதிர்மறையை உணர்த்தும் நஞ் என்பது அ என "த்விதா" என்பதன் முன் நின்று, இரண்டாய் நிற்றலைத் தடுக்கின்றதே தவிர, இரண்டு பொருள்களின் உண்மையைத் தடை செய்யவில்லை என்பது மெய்கண்ட தேவரின் திருவுள்ளக்கிடை. இவ்வுள்ளக்கிடையை மாபாடியக்காரர் "நஞ்" என்னும் தடுக்குஞ் சொல்லின் இன்மை, அன்மை, மறுதலை என்னும் பொருள்களின் மேல் வைத்து விளக்கி உள்ளார். அத்துவிதம் ஆதல்-இரண்டாக வேறுபட நிற்றல் இன்மையால், ஒன்றி உடனாதலால்.

இவ்வெண்பாவின் பொருள் பற்றியே உமாபதி சிவனார் "புறச்சமயத்தவர்க்கிருளாய்" எனத் தொடங்கும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தில் "பொற்பணிபோல் அபேதப் பிறப்பிலதாய் இருள் வெளி போற் பேதமும் சொற்பொருள் போல் பேதாபேதமும் இன்றி உடல் உயிர், கண், அருக்கன், அறிவுஒளி போல் பிறிவரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" எனக் கூறி உள்ளார் என்பது உணரத் தக்கது. **வேதாந்தம்** - உபநிடதங்கள், பிரம சூத்திரமோ, அதன் உரைகளோ அல்ல.

குறிப்பு :—இப்பொழுது அச்சாகி வழங்கிவரும் சிவஞான போதச் சிற்றுரை மாபாடியங்களில் இவ்வெண்பாவின் முன்பகுதியை விளக்குதற்குக் கொடுத்துள்ள இரண்டு உவமைகள் அவசித்தாந்தமாய் அமைந்திருத்தல், சைவர்கள் தங்கள் நூல்களையும் பிரமாண உரைகளையும் நன்குகக் காத்துவரவில்லை என்பதைக் காட்டுகிறது எனக் கருதுகிறேன்.

ஒரு தடை :—ஒன்பதாஞ் சூத்திரத்தில், உலகப் பொருள்களைக் கானல் நீர் போல அழிவன எனக் கண்டு நீங்குதலால் சிவஞானம் ஒருவன் உணர்வின்கண் விளங்கித் தோன்றும் எனக் கூறப்பட்டது. இங்கும் அதுவே அமைவதாயிருக்க, அதன் பொருட்டு வழிபாட்டை வேறு ஏன் விடுத்தல் வேண்டும்?

விடை :—அங்குக் கூறிய சாதனம் ஞானம் விளங்குதற் பொருட்டு, அங்ஙனம் விளங்கிய ஞான சொரூபம் நிலைபெறுதற் பொருட்டு அங்குக் கூறிய திருவைந்தெழுத்தைக் கணித்தலும், இங்குக் கூறிய வழிபாடும் ஒருங்கே வேண்டப்படும் என்பது கருத்தாகக் கொள்க.

உடம்பு முகந்து கொண்ட பிராரத்த வினை உள்ளவரை விருப்பு வெறுப்புக்கள் பற்றி உலகப் பற்று வந்து கூடிவிடும். பிராரத்த வினை பற்றறக் கழிதற்கு மெய்யுணர்வுடையாரை நாடி வழிபட வேண்டும். ஆதலால், அன்பினால் மெய்யன்பர்களைத் தொழ வேண்டும் எனக் கூறுகின்றார் ஆசிரியர் :—

வினையால் அசத்து விளைதலான் ஞானம்
வினைதீரின் அன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்;
ஆனத்தால் அன்பில் தொழு.

ஞானத்தை-மெய்யுணர்வுடையாரை. முன் வெண்பாக் குறிப்பாக இலிங்க வழிபாட்டையும், இது சங்கம வழிபாட்டையும் விதித்தல் காண்க.

முடித்துக் கூறுதல் :—தோன்றாத்துணையாயிருந்து பாசத்தை நீக்கி வியாபக உணர்வைப் பெறுவித்துத் தானுக்கி, இன்பு உறுத்தும் முதல்வனிடத்து நன்றியறிதல் ஒன்றே தலையாய அறமாம்; அவ்வறிவு பற்றி முதல்வனுக்கு எல்லையில்லதோர் அடிமை பூண்டு ஒழுகுவதே பிறவியால் வரும் கேடு வராமை காத்துக் கொள்ளும் ஒரே வழி. ஆதலால், குருவுருவில் வந்த அப்பெரியோனைத் தொழுவதே உயிர்க்கு வலியாகும்.

தன்னை அறிவித்துத் தான் தானச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னச்செய் தும் தைவம் என்றும் தைவமே
மானே தொழுகை வலி.

முதல்வன் உண்மையைத் தெளியாத போது அவனை மறத்தல் தீர்திறனுள்ள குற்றம்; தெளிந்தபின் இமைப்பொழுதும் மறத்தல் தீர் திறனுள்ள குற்றம் அன்று (பிழை அல்லது); உய்தியில் குற்றமாம். முதல்வன் அருளால் அவன் வண்ணமாயினும் அடிமையாக இருத்தலின் வேறுபாடு இல்லை (தைவம் என்றும் தைவமே). ஆதலால் அம்மகானை (மான் ஏ) த் தொழுதல் வலியாம் என்றபடி. இது வழிபாட்டைக் குருவின் மேல் வைத்து வலியுறுத்துகின்றது. தைவம்-தேவனது அடிமை.

"மீளா அடிமை உனக்கே ஆளாய்"

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லைமாநகர்ச் சிற்றம் பலவனார்க்(கு)
எல்லையில்லதோர் அடிமைபூண் டேனுக்கே"

என்னும் செந்தமிழ் மறைகளும், " நுகர்ச்சி மட்டிலே (முதற் பொருளோடு) சமமாம் என அடையாளம் உண்மையின் (போக மாத்ர ஸாம்ய லிங்காத்ச) என்னும் ஈற்றயற் பிரம சூத்திரமும், ஒப்பு நோக்கி உணர்ந்து அனுபவிக்கத் தக்கவை.

இங்ஙனம் நூலைத் தம் உரையோடு முற்றுவிக்கும் ஆசிரியர் தம் உபதேசத்தால் சிவமாந்தன்மை எய்தி நிலைபெறும் மாணுக்கரை நோக்கிப் பின்வருமாறு ஆணை தருகின்றார். ஒருமலமுள்ள விஞ்ஞான கலருக்கு முதல்வன் அவர் தம் அறிவில் நின்று அருட்பார்வையால் நோக்குதல் பற்றியே பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கும்; இருமலம் உள்ள பிரளயாகலர்களுக்கு அம்முதல்வன் அம்மையப்பர் வடிவில் முன் தோன்றித் திருவருளோடு நோக்கி (பரிசித்து) உபதேசித்தலால் அவ்விரண்டும் உள ஆம். மூன்று மலம் உடையார் பாச வீடும் சிவப்பேறும் பெற்றுய்தற்பொருட்டு, நல் உபதேசத்தோடு உண்மையனுபவமும் பெற்றுள்ள ஞானகுரவனுல் உபதேசிக்க வைக்கப் பெறுவது இன்று எம்மால் உபதேசிக்கப் பட்ட இந்நூல்:

சிவம் என்னும் அந்ததர ! சிந்தை நேர்நோக்கப்
பவம் இன்றும் ; கண்வா சகத்தில் – சிவம்
உண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க்(கு); இங் (கு)
ஒண் குருவால்
இன்றிந் நூல் மும்மை மலர்க்கு.

அந்தம்-வேதாந்தம் ;

அந்ததரம்-சித்தாந்தம்.

சித்தாந்தஞானம் கைவரப் பெற்றார் சீவன் என்னும் இயல்பின் நீங்கிச் சிவம் என நிற்பார் ஆதலால், தம்மால் உபதேசிக்கப்பெற்றுச் சிவத்தைப் பெற்றுள்ள மாணுக்கரை ஆசிரியர் "சிவம் என்னும் அந்ததர" என முடிவின்கண் அழைக்கின்றார். முதற்கண் அம் மாணுக்கனைப் "பேதாய்" என அழைத்தார். இதனால் இந்நூற்பொருளை முறையாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவோர் "பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னும்–செம்பொருள் காண்பர்" என்பது ஆசிரியர் திருக்குறிப்பென்று உளங்கொள்ளத் தக்கது.

—சிவஞானபோதம் முற்றிற்று.



இராமேசுவரம் கோயில் : கிழக்குக் கோபுரமும், அம்மன் சந்நிதியும்

சிவாலயப் பரிவார மூர்த்திகள்

(சூரிய பகவான்)

சிவாகம வித்வான் திரு எஸ். சுவாமிநாத சிவாசாரியர், தலைமை ஆசிரியர்,
வேத ஆகம பாடசாலை, தருமபுர ஆதீனம்.

முன்னுரை :

இந்நிலவுலகத்திலுள்ள மக்கள் யாவரும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கனுள் ஒவ்வொன்றை யேனும், அன்றி ஒருங்கேனும் எய்தப் பெற்று இன்புறுதலின் மிக்க விருப்பத்தினையும் முயற்சியினையும் கொண்டுள்ளனர் என்பது, அவரவர் அனுபவ வாயிலாக உணரத்தக்க தொன்றாகும். இவ்வுறுதிப் பொருள்கள் நான்கனுள் முதலிறுதி ஒழித்து, இடைப்பட்ட இரண்டைப்பெற அவாவுடையவர்களே மிகப் பலராவார்கள். முதற்கண் உள்ளதனைப் பெற விரும்புவார் சிலராவர். இம்மூன்றையும் ஒருவி இறுதிக்கண் உள்ள வீட்டினை விழையும் உண்மை அறிஞர், சிலரினும் மிகச் சிலரேயாவர்.

கடவுள் வழிபாடு :

இந்நால்வகைப் பொருள்களாலும் பெறப்படும் பொருள்களை ஆராயுங்கால் பொருளும் இன்பமும் முறையே இம்மை மறுமையினும், இம்மையிலும் நின்றொழிதலாலும், அறம் இருமையும் உதவி வீட்டுக்குச் சாதகமாக நிற்றலானும், வீடு தன்னை எய்தப் பெற்றோரைப் பிறப்பிறப்புத் துன்பம் அறுத்துப் பேரின்புறுத்த வல்லதாகலானும், இறுதியாகிய வீட்டினையே உண்மையறிவுடையார் ஒரு தலையாக எய்த விரும்புவரென்பதும், அதற்குரிய சாதனங்களைப் பெறுதற்குத் தக்க முயற்சிகளையே மேற்கொள்ளுவர் என்பதும். அனைவரும் அறிந்தவை. அச் சாதனங்களுள் மிகவும் இன்றியமையாதது கடவுள் வழிபாடு.

அருட்டிருமேனிகள் :

உலகத்திலுள்ள மக்கள் பல திறப்பட்ட அறிவினையும் கொள்கையினையுமுடையராகலின், அவ்வெல்லோரையும் காக்க வேண்டும் என்ற பெருங் கருணையுடைய சிவபெருமான், அவ்வவர் தகுதிக்கேற்பப் படிநிலை முறையாய் இறை மூர்த்திகளை வழிபட்டுய்யவே, சிவலிங்கம் முதலிய அருட்டிரு மேனி கொண்டு விளங்குகிறார்.

" அருவமும் ரூபா ரூபம் ஆனதும் அன்றி
நின்ற உருவமும்
மூன்றுஞ் சொன்ன ஒருவனுக்குள்ள வாமே "

இறைவன் அருவம் அருவுருவம் உருவம் என்ற மூன்றுமுடைய ஒருவன் என்று சித்தியார் கூறுகிறது. அருவமான இறைவன், தியான பூசையின் பொருட்டு உருவமுடையவனாக விளங்குகிறான்.

கண்ணும் கருத்தும் படைத்த மக்கள் இறைவனுடைய திருவுருவத்தைப் புறக்கண்ணால் கண்டு, அகக்கண்ணால் தியானஞ்செய்து, அதன் பயனாக நல்ல உணர்வு பெற்றுய்யவேண்டும் என்று திருவுளம் கொண்டே, அவ்விறைவன் திருக்கோயிலில் எழுந்தருளிப் பல வடிவங்களில் காட்சியளிக்கின்றான்.

பரிவார மூர்த்திகள் :

இத்தகைய பல திறப்பட்ட மூர்த்திகளைத் திருக்கோயிலில் தாபனம் செய்ய வேண்டியதற்குரிய இடம், அவைகளின் பூசைமுறை, அவைகளின் வடிவம், பூசிப்பதாலடையப்படும் பயன், யாவும் ஆகமங்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

ஆலயத்தின் நடுவில் அமர்ந்திருக்கும் பிரதான மூர்த்தியின் சுற்றிலுமுள்ள மூர்த்திகள் பரிவார மூர்த்திகள் எனப்பெறும். சிவசூரியன், விநாயகர், முருகர், தென்முகக் கடவுள், திருமகள், கொற்றவை முதலியவர்கள் பரிவார மூர்த்திகள் ஆவர்.

சூரியன் :

சிவாலயத்தின் பரிவார மூர்த்திகள் பலருள் சூரியனும் ஒருவர். தினந்தோறும் பூசையினுள் காலையில் சூரிய உதயம் தொடங்கி ஏழரை நாழிகை அளவில் செய்யப்படும் மகாசந்தி என்ற காலைச் சந்தி பூசையின் ஆரம்பத்தில் சூரிய தேவனைப் பூசித்து, பிறகே மற்ற பூசையைத் தொடங்க வேண்டும் என்று சிவாகமங்கள் நித்திய பூசை முறையில் வலியுறுத்திக்கூறியிருக்கின்றன.

சகளோபாசனை (உருவ வழிபாடு) செய்த பிறகு, நிஷ்கள உபாசனை (அருவ வழிபாடு) செய்வது சிறந்தது என்றும், சகள மூர்த்தியான சிவசூரியனை யுபாசித்துப்பின் நிஷ்கள மூர்த்தியான சிவனை உபாசிக்க வேண்டும் என்றும்; சிவாகமம் கூறுகிறது.

சூரிய மூர்த்தியைத் திருக்கோயிலின் உள் பிராகாரத்தின் கோபுர வாயிலின் வலப் பக்கத்திலோ அல்லது இடப் பக்கத்திலோ தாபனம் செய்யலாம். ஆயினும் வடகிழக்கு—கிழக்குத் திசைகளின் நடுவிலமைப்பது சாலச் சிறந்தது.

வைகர்த்தனன், விவஸ்வான், மார்த்தாண்டன், பாஸ்கரன், இரவி, உலகப் பிரகாசகன், உலக சாட்சி, திருவிக்கிரமன், ஆதித்தியன், சூரியன், அம்சுமாலி, திவாகரன் என்ற பன்னிரண்டு சூரியர்களுக்கும் மூலகாரணர் சிவசூரியனாவார். அவர் அஷ்டமூர்த்தியான சிவபெருமானின் ஒரு சரீரம் எனப்பட்டுள்ளார்.

சூரியனின் வடிவம் :

சூரிய மூர்த்திக்கு ஒரு முகம், இரு திருக்கரங்கள், இரு கரங்களிலும் விரிந்த இதழுடைய தாமரையை ஏந்தி, அம்மலர்களைத் தனது இரு தோள்களிலும் படுமாறு பிடித்துக் கொண்டிருப்பார். நல்ல சிவந்த திருமேனி. காதினில் குண்டலம், மார்பில் தவழும் பூணூல், பிரபையுடன் கூடிய தலை, அந்தப்பிரபை மிக்க ஒளி வீசும் கனல் வடிவமுள்ளது. செந்நிறம் உள்ள ஆடை, சிவப்பான மலர்மாலைகளை யணிந்திருக்கும் ஒளிமயமான

வடிவம், வலப்பாகத்தில் உஷை என்றும், இடப்பாகத்தில் ப்ரத்யுஷை என்றும் இரு சக்திகளால், தொழுவோர்க்கு அருள் வழங்கும் சக்திமானாக விளங்கி நிற்கும் திருக்கோலம்.

இக் கதிரவனின் சுற்றிலும் சந்திரன், நிலமகள், புதன், குரு, சுக்ரன், சனி, இராகு, கேது என்ற எண்மர்கள் விந்யேச்வரர்கள் என்ற பெயரால் அருபியாய் விளங்குகிறார்கள்.

இருநான்கிதழ்களையுடையதான வெண்தாமரை மலரின் மீது வீற்றிருக்கும் சூரியனின் காற் சுவடுகளில் உள்ள தாமரைமலரின் இதழ்களில், தீப்தி, சூக்ஷுமை, ருசை, பத்ரீ, விபூதி, விமலை, அமோகை, வித்யுதை என்ற சக்திகளும் இந்த சக்திகளுடன் சர்வதோமுகி என்ற சக்தியும் கூட ஒன்பது சக்திகளும். அடைந்தவர்களுக்கு அருள் வழங்கும் சக்திகளாக வீற்றிருக்கிறார்கள்.

ஆதித்யனின் இருபுறங்களிலும் இரண்டு மெய்க் காவலர்கள் உண்டு. தெண்டி என்பவர் ஒருவர்; மற்றொருவர் பிங்களன் எனப்படுவர். 'தெண்டி' என்பவர் வெண்மையான சரீரகாந்தி யுடையவர். அவிழ்ந்து தொங்கும் கேசத்துடன் பருத்த சரீரமுடையவர். ஒருகையில் மைக் கூடும் மற்றொரு கையில் எழுதுகோலும் வைத்துக்கொண்டு அன்றன்றும் உயிர்கள் செய்யும் கன்மங்களுக்குச் சாட்சியாய் இருந்துகொண்டு, அவரவர்கள் செய்யும் நல்ல தீய காரியங்களை எழுதிக்கொண்டிருப்பார்.

'பிங்களன்' என்பவர் கையில் தடியை வைத்துக் கொண்டு காவல் புரிபவராவார். மற்றும் விநாயகர், குரு, தேஜஸ்சண்டன் என்பவர்களையும் சூரிய பூசையில் அவருடைய பரிவார மூர்த்தியாகப் பாவித்துப் பூசிக்கவேண்டும்

ஆவரணங்கள் :

சூரியனுக்கு ஆவரணம் நான்கு எனக் கூறப்படுகிறது. அதாவது இருதயம் என்பது முதலாயுள்ள ஆறு அங்கமந்திரங்களை, முதலாவது ஆவரணத்திலும்; சந்திரன் முதலிய எட்டுக்கிரகங்களை இரண்டாவது ஆவரணத்திலும்; இந்திரன் முதலிய திக்குப் பாலகர்களையும், அவர்களுடைய வச்சிரம் முதலிய படைக்கலன்களையும் முறையே மூன்றாவது நான்காவது ஆவரணங்களிலும் பூசிக்க வேண்டும் என்று சாரதா திலகம் 'சௌர அர்ச்சனா' (சூரிய வழிபாடு) விதியாலறியப்படுகிறது.

ஆகமங்களில் ஆறு அங்கங்களும், கிரகங்களும், இருபத்தேழு விண்மீன்களும் கொண்டு, மூன்று ஆவரணம் பூசிக்கப்படுகிறது. கனிஷ்ட தசதாலம் என்ற தேகலப்த்தாங்குலத்தின் 116 அங்குல அளவினால் சூரிய பிம்பத்தைச் செய்ய வேண்டும். அதுவும் புருஷ சிலையால் செய்ய வேண்டும், மணி ஓசை போன்ற நாதமுடைய கல் புருஷ சிலையாகும்.

முத்திரைகள் :

முத்திரை என்பது பூசையில் செய்யப்படும் முக்கியமான கிரியை. இது ஆராதிக்கப்படும் தெய்வத்திற்கு உற்சாகத்தையுண்டு பண்ணி, அதனுடைய கருணையைச் சுரக்கச் செய்யும் செயலாகும். அம்முறையில் சூரியனுக்குரிய இன்றியமையாத முத்திரைகள் பதும முத்திரை என்றும், பிம்ப முத்திரை என்றும் இருவகைப்படும்.

> பணித்தகை விரித்துப் பெருவிர லிணைநடு
> பணித்திடப் பிடிப்பது பதுமமுத் திரையே
> பத்மமுத் திரைதரு பாணியின் நடுவிரல்
> விற்பொரத் தொடுவது விம்பமுத் திரையே

பிணித்த கைகளை விரித்து இரு பெருவிரல்களையும் நடுவில் வளைத்துத் தாமரைப் பொகுட்டுப் போலாகப் பிடித்து எட்டிதழ் போலாக, மற்றைய விரல்களை வெவ்வேறாகச் சிறிது வளைப்பது பத்ம முத்திரையாம்.

பத்ம முத்திரையாகப் பிடித்துக்கைகளின் நடு விரல்கள் விற்போல ஒன்றையொன்று வளைத்துத் தொடுவது விம்ப முத்திரையாம்.

இதுபோல், சிவ சூரியனின் ஆறு அம்சங்களுக்கும் தேனு முத்திரை கோவிஷாண முத்திரை திராஸநீ முத்திரை என மூன்று முத்திரைகள் உண்டு. சிவ தீக்ஷை பெற்று ஆன்மார்த்த சிவ பூஜை செய்பவர்களும், முதலில் சிவ சூரிய பூஜையைச் செய்து முடித்தே, பிறகு சிவபூஜையைத் தொடங்கவேண்டும்.

உபாசனைப் பயன் :

சிவ சூரியனுக்குக் கொடுக்கப்படும் அர்க்கியத்தை, முழங்கால்கள் தரையில் படும்படி மண்டியிட்டுக் கொண்டு கொடுக்க வேண்டும் என்பது முக்கியம். இதனால் சிவ சூரியன் மிகவும் மகிழ்ச்சி யுற்று, உபாசிப்பவர்களுக்குச் செல்வம் புத்திரப்பேறு தானியம் புகழ் உடல்நலம் என்ற யாவற்றையும் அளிக்கிறான்.

மற்றும் பயன்கருதி உபாசிப்பவர்கள், ஐபாகுசும ஓமத்தினால் இராஜவசியத்தையும், நெய் தோய்த்த வில்வ ஓமத்தினால் நிதியையும், மாதுளம்பழ ஓமத்தினால் இஷ்ட சித்தியையும் பெறுவார்கள். சிவ சூரியனுக்கு வில்வத்தினாலும், ஊமத்தம் பூவினாலும் அர்ச்சிப்பது கூடாது. அவ்வாறு செய்வது சூரியனுக்கு உகந்தது இல்லை. பரிவார மூர்த்திகளுள் ஒருவராகிய சூரிய மூர்த்தியைப் பூசிப்பதனால், பிறநலங்களுடன் முக்கியமாகத் தேகாரோக்கியம் ஆகிய நலத்தினை நாம் பெறுகின்றோம்.

முடிவுரை :

சூரிய மூர்த்தியைப் போற்றாதவர்கள் உலகில் இல்லை. எல்லா நாட்டாரும், எல்லா மொழியாளரும், எல்லாச் சமயத்தினரும் சூரியனை விரும்பிப் போற்றுகின்றனர். "உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு' என்று சூரியனின் பெருமையினை நக்கீரர் பாடுகின்றார். "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்று இளங்கோவடிகள் இயம்புகின்றார் இத்தகைய சிறப்புடைய பரிவாரமூர்த்தியாகிய சூரியனை, நாம் அனைவரும் நயந்தினிது போற்றி நலம்பெறுவோமாக !

*

திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு

முன்னுரை :

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்த அரும்பெரும் தெய்வத் தமிழ் நூல்களே, திவ்வியப் பிரபந்தங்கள் எனப் போற்றப் பெற்று வருகின்றன. திவ்வியம் என்பது தெய்வத் தன்மை. மிகவும் சிறந்த தலங்களைத் திவ்விய தேசம் என்றும், மிகவும் சிறந்தவர்களாகிய நித்திய சூரிகளைத் திவ்விய சூரிகள் என்றும் வழங்குதல் காணலாம். அம்முறையில் மிகவும் சிறந்த 'தெய்வத் தன்மை வாய்ந்த நூல்கள்' 'தெய்வத் திருவருளை விளக்கும் நூல்கள்' என்னும் கருத்தில் ஆழ்வார்களின் அருளிச் செயல்களைத் **திவ்வியப் பிரபந்தங்கள்** என வழங்குகின்றோம்.

உலகத்தில், குறிப்பாகத் தமிழ் மொழியில், பிரபந்தங்கள் எனப் பொதுவாக வழங்கப்பெறும் நூல்கள் பல உண்டு. அவற்றைத் தமிழ் இலக்கண நூலார் 96 வகைகளாகப் பிரித்துக் கூறுவர். அவைகள் பெரும்பாலும் உலகியற் பொருள்களையே பற்றிக் கூறும் சாதாரணப் பனுவல்கள். இவைகளோ உயர்வற உயர் நலம் நடைய தெய்வத்தினைப் பற்றி விளக்குபவை. ஆதலின் பிற சாதாரண நூல்களினின்று பிரித்து. இவைகளின் சிறப்பையுணர்த்தி விளக்கும் முறையில், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பெரியோர்கள் 'திவ்வியப் பிரபந்தங்கள்' என்னும் சிறந்த பெயரால் விசேடித்து வழங்கி வருகின்றார்கள். இவைகள் ஏறத்தாழ 4000 பாடல்களைக் கொண்டிருத்தலின், 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' எனவும் வழங்கும்.

ஆழ்வார்கள் :

பகவானுடைய சொரூப ரூப குண விபூதிகளை, ஆழ்வார்கள் பரபக்தி பரஞானம் பரமபக்தி என்பனவற்றால் நன்கு ஈடுபட்டு அநுபவித்து மகிழ்ந்தார்கள். பரபக்தியாவது இறைவனின் தொடர்பில் இன்பமும், பிரிவில் துன்பமும் அடையும் நிலை. பரஞானம் என்பது இறைவனைத் தெளிவாக நேரே கண்டு அநுபவித்து அறிதல். பரமபக்தியாவது இறைவனை நினைப்பளவிற் பிரிய நேர்ந்தாலும் தாங்க முடியாமல் உயிர் இழக்கும் எல்லையற்ற பேரன்பு. இத்தகைய பரபக்தி பரஞானம் பரமபக்திகளால், இறைவனின் இயல்பு--திருமேனியழகு-உயரிய பண்பு நலங்கள் ஆகிய மேன்மைகளில் உள்ளம் துவக்குண்டு ஆழங்காற்பட்டு ஆழ்ந்து திளைத்து அநுபவித்து மகிழ்ந்த பெருமக்களே ஆழ்வார்கள் எனச் சிறப்பித்துப் புகழப் பெறுவர். தாம் பெற்றுத் திளைத்த இறையருள் இன்ப அநுபவம், தம் உள்ளத்தின் உள்ளே அடங்காமல், எல்லையின்றிப் பொங்கி வழிந்து புறப்பட்ட நிலையில், ஆழ்வார்கள் அருளிச் செய்த தமிழ் வேதங்களே, திவ்வியப் பிரபந்தங்கள் எனப் போற்றப் பெறுகின்றன.

வண்டுகள் மலர்களில் தேனையுண்டு பிரீதிக்குப் போக்குவிட்டு முரன்றதுவே இசையாய் விழுந்தாற் போல, ஆழ்வார்கள் ஆகிய வண்டுகள், பகவானின் திருவடிகள் ஆகிய மலர்களிலே, பகவத் கிருபை அநுபவம் ஆகிய தேனை உண்டு மாந்தித் திளைத்து, அம் மகிழ்ச்சிக்குப் போக்குவீடாகத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தனவே திவ்வியப் பிரபந்தங்கள் என்னும் ஒப்புயர்வில்லாத நூல்கள் ஆகும்.

திருமாலவன் கவி :

பெரியோர்கள் நூல்களைப் பலவகைகளாகப் பாகுபாடு செய்வர். நூல்களிற் பெரும்பாலானவை சாரமில்லாதனவாக இருப்பது உண்டு. ஒரு சில சிறிதளவே சாரமுடையனவாக இருக்கும். அவற்றுள்

ளும் ஒருசிலவே மிகுந்த சாரம் உடையன வாகத் திகழும். அவைகளிலும் ஒருசில மட்டுமே, மிகவும் உயர்தரமான சாரம் நிரம்பிப் பெரும்பயன் கொடுப்பனவாய் விளங்கும். இவற்றை முறையே அஸாரம்-அல்பஸாரம் - அதிஸாரம் - ஸாரதமம் எனப் பெரியோர்கள் வழங்குவர். இவற்றில் 'ஸாரதமம்' என்னும்படி, உயர்தரமான சாரம் பெரிதும் நிரம்பி, மிகுந்த பயன்களை விளைவிக்கும் நூல்களின் வகையினைச் சேர்ந்தவை, திவ்வியப் பிரபந்தங்கள் என்பது, சான்றோர்கள் அனைவரும் ஆராய்ந்து ஒருமுகமாகக் கண்ட முடிபு.

வேறு பல நூல்களில், எடுத்த பொருளுக்குப் புறம்பான-சாதாரணப் பொருள்களும் கலந்து வரப் பெறும். உதாரணமாக, 'இராமாயண காவியம் செய்கின்றேன்' என்று கூறித் தொடங்கும் வால்மீகி முனிவர், கங்கையின் தோற்றம், காங்கேயன் ஆகிய முருகனின் அவதாரம், புஷ்பக விமான வருணனை முதலிய வேறு பல பொருள்களைப் பற்றியும் இடையிடையே இயம்பிச் சொல்கின்றார். 'நாராயணனுடைய கதையினை நவிலுகின்றேன்' என்று தொடங்கும் வியாச முனிவர் பீஷ்மன் முதலாகப் பலருடைய பிறப்பு வளர்ப்புகளைப் பற்றியும், குருக்ஷேத்திர பூமியில் நிகழ்ந்த பயங்கரமான கொடிய பாரத யுத்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் கூறிக்கொண்டு போகின்றார். இங்ஙனமெல்லாம் இல்லாமல் "திருமாலவன் கவி" என்ற வாயோலைப்படியே, முற்றிலும் நூற்றுக்கு நூறு பகவானுடைய திருவருட் செய்திகளையே கூறிச் செல்லுகின்றன திவ்வியப் பிரபந்தங்கள். இதனை,

"இராமாயணம் - நாராயணகதை என்று
தொடங்கி,
கங்கா காங்கேய சம்பவாதி அசத்கீர்த்தனம்
பண்ணின எச்சில்வாய் சுத்தி பண்ணுமல்,
திருமாலவன்கவி என்ற வாயோலைப் பாடியே,
மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு உரிய
சொல் வாய்த்த இது, வேதாதிகளில்
பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள்
போல அருளிச் செயலில் சாரம்"

என வரும் 'ஆசாரிய இருதயம்' முதலிய நூல்களின் சூக்திகள் கொண்டு தெளிவுற அறியலாம்.

திவ்வியப் பிரபந்தங்கள் வேதங்களுக்குச் சமமான சிறப்புடையவையாகும். நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவிருத்தம்	–	இருக்குவேதம்
திருவாசிரியம்	–	எசுர்வேதம்
பெரிய திருவந்தாதி	–	அதர்வணவேதம்
திருவாய்மொழி	–	சாமவேதம்

என்று பெரியோர்கள் போற்றியுள்ளனர். இதனை,

"இயற்பா மூன்றும் வேதத்ரயம் போல ;
பண்ணர் பாடல் (திருவாய்மொழி),
இசைகொள்
வேதம் (சாமம்) போலே"

என அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அழகுற அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்.

மாறன் மறைக்கு ஆறங்கம் :

வேதங்கள் நான்கிற்கும், சார்பாக அங்கங்கள் உண்டு. அவைகள் ஆறு எனக் கூறப்படும். நம்மாழ்வார் பாடிய தமிழ் வேதங்கள் நான்கிற்கும், சார்பாக ஆறு அங்கங்கள் உண்டு. அவைகள் திருமங்கையாழ்வாரால் அருளிச் செய்யப் பெற்றுள்ளன.

பெரிய திருமொழி
திருக்குறுந் தாண்டகம்
திருநெடுந் தாண்டகம்
திருவெழுகூற்றிருக்கை
சிறிய திருமடல்
பெரிய திருமடல்

எனத் திருமங்கையாழ்வார் அருளிய ஆறு பிரபந்தங்களும், வேதங்களுக்குரிய சிட்சை வியாகரணம் நிருக்தம் சந்தஸ் கல்பம் சோதிடம் என்பன போல, நம்மாழ்வார் தமிழில் அருளிய நான்கு வேதங்களுக்கும் உரிய ஆறு அங்கங்கள் ஆகும்.

"மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்
கோன்
ஆறங்கம் கூற அவதரித்தான்"

எனவரும் உபதேச ரத்தினமாலைச் செய்யுளும், இங்கு நாம் உணரத் தக்கது.

எண்மர் நன்மாலைகள் :

வேதங்களுக்கு உபவேதங்கள் என்றும், உபாங்கங்கள் என்றும் சில உண்டு. புராணம் நியாயம் மீமாம்ஸை ஸ்மிருதி என்பன உபாங்கங்கள். ஆயுள் வேதம் வில்வேதம் காந்தருவ வேதம், அர்த்த சாஸ்திரம் என்பன உபவேதங்கள். இவைகளையெல்லாம் சேர்த்து "அஷ்டா தச (18) வித்தைகள்" என்று அறிஞர் கள் வழங்குவர். இம்முறையில் நம்மாழ் வார் அருளிய தமிழ் வேதங்களுக்கும், உபவேதங்களும் உபாங்கங்களும் உண்டு.

"வேத சதுஷ்டய அங்க உபாங்கங்கள் பதி
ஞலும் போல, இந்நூலுக்கும் இருந்தமிழ் நூற்
புலவர் (திருமங்கை மன்னர்) பனுவல் ஆறும்,
மற்றை எண்மர் நன்மாலைகளும்"

இக்கருத்தினை 'ஆசார்ய ஹ்ருதயம்' அமைவுற விளக்கி யிருத்தல் காணலாம். இதன்படி ஏனைய 8 ஆழ்வார்களும் அருளிச் செய்த நூல்கள், உபவேதங் களும் உபாங்கங்களும் ஆகும். அவைகள் வருமாறு:—

1. பொய்கையார் – முதல் திருவந்தாதி
2. பூதத்தார் – இரண்டாம் திரு வந்தாதி
3. பேயார் – மூன்றும் திருவந்தாதி
4. திருமழிசையார் – நான்காம் திருவந்தாதி
5. குலசேகரர் – பெருமாள் திருமொழி
6. பெரியாழ்வார் – பெரியாழ்வார் திரு மொழி, திருப்பல் லாண்டு.
7. தொண்டரடிப் பொடி – திருமாலை, திருப் பள்ளி எழுச்சி.
8. திருப்பாணாழ்வார் - அமலனதிபிரான்

உபபிரும்மணங்கள் :

வேதங்களுக்கு 'உபப்ரும்ஹணம்' எனச் சில நூல்கள் உண்டு. 'உபப்ரும் ஹணம்' என்பது வேதப் பொருளையே விவரித்துக் கூறும் நூல். அம்முறையில், பின்வரும் அருளிச் செயல்களைக் கொள்ள லாம்.

1. மதுரகவிகள் – கண்ணிநுண் சிறுத்தாம்பு.
2. ஸ்ரீஆண்டாள் – திருப்பாவை, நாச்சியார் திருமொழி
3. திருவரங்கத் தமுதனர் – இராமாநுச நூற்றந்தாதி.

மதுர கவிகள் பாடியருளிய 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்பது நம்மாழ்வார் மேற் பாடப் பெற்றது. ஆசாரிய பக்தி யின் அருமைப் பாட்டினை விளக்கியருள் வது. ஸ்ரீ ஆண்டாள் பாடியருளிய பிரபந்தங்களோ "வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்" எனப் புகழ்ந்து பாராட்டப் பெற்றவை. திருவரங்கத்தமுதனர் இயற்றியருளிய இராமாநுச நூற்றந்தாதியோ, "பிரபந்ந காயத்திரி" எனச் சிறந்தெடுத்து வழங்கப் பெற்று வருவது. இவ்வாற்றுல் திவ்வியப் பிரபந்தங்கள் ஆகிய ஆழ்வார் களின் அருளிச் செயல்கள் வேதங்களோடு ஒத்த சிறப்பும் பெருமையும் உடைய வாதல் காணலாம்.

வேதங்களினும் மேம்பட்டவை :

இனி ஒருவகையில் இவைகளை வேதங் களைக் காட்டிலும் கூடப் பெரியோர்கள் விசேடித்துக் கூறியிருக்கின்றார்கள். வேதங்கள் உரைகாரர்கள் பலரும் கலக்கி யது; திவ்வியப் பிரபந்தங்கள் 'நன் ஞானத்துறை படிந்து' என்றபடி தெளி வும் தூய்மையும் மிக்கவை. தக்கார் ஒரு சிலரே ஓதத் தக்கனவாகலின் வேதங்கள் மட்குடம் போன்றவை; அனைவருமே ஓதிப் பயன்பெறக் கூடியவை யாகலின் திவ்வியப் பிரபந்தங்கள் பொற்குடம் போன்றவை; உப்புத் தன்மை மிக்குக் குடிக்க இயலாத கடல்நீர் போன்றவை வேதங்கள்; திவ்வியப் பிரபந்தங்களோ யாவரும் பருகுதற்கு எளிய இனிய சிறந்த

சாய்கரக நீர் போன்றவை. மேலும் வேத வேதாந்தங்களின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடியாத பொருள் நலங்களை யும், நாம் திவ்வியப் பிரபந்தங்களின் மூலம் எளிதில் தெளிந்து கொண்டு பயன் பெறலாம்.

"பாஷ்யகாரர் இதுகொண்டு
சூத்ர வாக்யங்களை ஒருங்க விடுவர்"

எனவரும் ஆசார்ய ஹ்ருதயத் திருமொழி யினாலும்,

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தன்
பொருநல்வரும் குருகேசன் விட்டு சித்தன்
துய்யகுல சேகரன்நம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வேல் ஏந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே.

என 'அதிகார சங்கிரக' நூற் செய்யு ளில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிச் செய்திருத்தல் கொண்டும், இவ்வுண்மை தெளியலாம்.

பண்பாடு வளர்க்கும் பனுவல்கள்:

திவ்வியப் பிரபந்தங்கள் மக்களுயிர்க்கு உறுதிபயக்கின்ற உயர் பொருள்களைக் கூறும் நூல்களுள் தலை சிறந்தவை. இவற்றில் வரும் சொல்லும் பொருளும் குற்றம் அற்றுச் சுவை நிரம்பி "அப்போதைக்கு அப்போது என் ஆரா வமுதமே" என்றபடி, ஓதி ஓதி யுணருந் தொறும் புதிய புதிய இன்ப அநுபவங் களைப் பயக்கும் பண்புடையவை. முமுட் சுக்கள் விரும்பும் பொருள்கள் முற்றிலும் இவற்றின்கண் நிரம்பியுள்ளன. எல்லா ரினும் மேம்பட்டு விளங்கும் "திருமகள் கேள்வன்" தான், இப்பிரபந்தங்களின் தலைவன். இப்பிரபந்தங்களின் சுவையினை முமுட்சுக்களும் முக்தரும் நித்யரும் எம் பெருமானும் இடைவிடாது நுகர்ந்து இன்புறுகின்றனர். பயில்வோர் உள்ளத் தில் இவைகள் பக்தியுணர்வைத் தோற்று விக்கின்றன. தோன்றிய பக்திபுணர் வினை மேலும் மேலும் வளர்த்து, நம்மைப் பண்பாடு அடையச் செய்கின்றன.

முடிவுரை:

இயற்பாக்களான் இயன்று, இசைத் திறம் அமைந்து, "அரையர்" என்பவர் களால் அபிநயித்துக் காட்டவும் பெற்று வருதலின், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்க்கும் திவ்வியப் பிரபந்தங்கள் சிறந்த நிலைக்களமாகத் திகழ்கின்றன. மாறன் அலங்கார உரையாசிரியர் குறிப் பிட்டுள்ளபடி, சித்து-அசித்து-ஈசுவரன் என்னும் முப்பொருளின் இயல்புகளையும் செப்பமுற விளக்குதலாலும், இவைகளை "முத்தமிழ்" நூல்கள் என்றல் பொருந் தும். எனவே, தமிழ் மக்களாகிய நம்முடைய ஒப்புயர்வற்ற தெய்விகக் கலைச் செல்வங்கள், திவ்வியப் பிரபந்தங் கள்என்று நாம் பெருமிதம் கொண்டு மகிழலாம். தமிழ் மக்களாகிய நாம் அனை வரும் இவற்றைப் போற்றிப் பயின்று பயன்கொண்டு உய்வோமாக.

"பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும்
சொல்லி நின்று பின்னரும்
பேசுவார் தமை உய்ய வாங்கிப்
பிறப்பு அறுக்கும் பிரான் இடம்,
வாச மாமலர் நாறு வார்பொழில்
சூழ்தரும் உலகுக்கு எல்லாம்
தேசமாய்த் திகழும் மலைத்
திருவேங்கடம் அடை நெஞ்சமே!"

—திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி.